நன்றி - நூலகத்திட்டம்

SAKINIHAR


# சரிநிகர்

இதழ் 157
ஒக். 15.—ஒக்.28. 1998
விலை ரூபா.10.00

தொடரும் தணிக்கை:
**133** வது
நாள்











## ரணில் : புலிகளிடம் தோற்ற அரசாங்கம் !

## தென்மராட்சி:மூன்றாவது வெளியேற்றம்?

## கல்கட் : யாழ்ப்பாணத்திற்கும் ஆபத்து !

## ஐ.தே.க. முஸ்லிம்களும், மு.காவும்


## வடக்கு முஸ்லிம்கள் : எட்டாவது ஆண்டிலும் எட்டாததா ?

நன்றி - நூலகத்திட்டம்



## யாழ்ப்பாணக் கடல்வலயச் சட்டம்:

# மீன் சாப்பிடத் தடை?




Ⓟ - புங்குடுதீவு
(N1) - நயினாதீவு
Ⓥ - வேலணை
Ⓔ - எழுவைதீவு
Ⓐ - அனலைதீவு
Ⓚ - ஊர்காவற்றுறை
Ⓜ - மண்டைதீவு
Ⓝ - நெடுந்தீவு

| | தூரம் | நேரம் |
|---|---|---|
| A | 500 மீற்றர் | அதிகாலை 4.00 - பி.ப 3.00மணிமண |
| B | 500 மீற்றர் | அதிகாலை 4.00- பி.ப. 3.00 மணி |
| C | 1 மைல் | அதிகாலை 4.00- அதிகாலை 6.00மணி |

D- - - - முற்றாகத் தடை செய்யப்பட்ட பகுதி

D1- ═ தடைசெய்யபபட்டது ஆனால் சில பகுதிகளில் அனுமதிக்கப்படுகிறது.

D2- — தடைசெய்யப்பட்டது. அதிகாலை 4.00மணி தொடக்கம் அதிகாலை 6.00 மணிவரை அனுமதிக்கபட்டடது.

"மீனவர்கள் மீன் சாப்பிடுவதற்கு தடை விதிக்கப்பட்ட பிரதேசம் உலகில் எங்காவது உள்ளதென்றால் அது யாழ்ப்பாணத்தில் தான். ஏனென்றால் அங்கு தான் கடல் வலயத் தடைச்-சட்டம் அமுலில் உள்ளது." இவ்வாறு கூறியவர் வேறு யாருமல்ல கடந்த பெப்ரவரி மாதம் எம்மை விட்டுப் பிரிந்த மனித நேயமிக்க சிங்களப் பத்திரிகையாளரான காமினி நவரட்ன அவர்கள்.

தனது சற்றர்டே றிவியூ பத்திரிகையில் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாறு எழுதியுள்ளார். அவர் மேலும் இவ்வாறு எழுதுகிறார். "நான் அனலைதீவு, எழுவைதீவுப் பகுதி-களில் அறுபதுகளில் பயணம் செய்தது போல் பயணம் செய்ய விரும்புகிறேன் ஆனால், முடியவில்லை. ஏனென்றால் கடல் வலயத் தடைச்சட்டம் அமுலில் உள்ளது."

அவர் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் எழுதியது இன்றும் பொருந்திப் போவதை தீர்க்க-தரிசனமிக்க எழுத்தாளரின் எழுத்து என்பதா? அல்லது தமிழ் மக்களின் துரதிர்ஷ்டம் என்பதா?

இலங்கையில் இனப்பிரச்சினை ஆரம்பமான பின்னர் வட பகுதி மீனவர்கள் அனுபவித்த துன்பங்களை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளனர். தற்போதும் இவர்கள் தொழிலுக்குச் செல்லும்வேளையில் அவ்வப்போது கடற்படையினரின் தாக்குதலுக்கும் இலக்காகி வருகின்றனர்.

அதுவும் யாழ்ப்பாணத்தை அரச படையினர் கைப்பற்றிய பின்னர் வட பகுதி மீனவர்கள் முன்னெப்போதும் இல்லாதவாறு பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

மாதகலில் இருந்து தொண்டமானாறு வரையான பகுதிகளில் வசித்து வந்த மக்கள் முற்றாக இடம்பெயர்ந்தமை-யால் இப்பகுதிகளில் மீன் பிடித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கடல் நீரேரிப்பகுதியில் 500 மீற்றர் தூரம் வரை மட்டுமே மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலை நாடுகளில் நவீன ட்ரோலர்களில் சென்று ஆழ்கடலில் மீன் பிடித்துக்கொண்டு கரைக்கு திரும்பும் இந்த யுகத்தில் வட பகுதி மீனவர்களோ கற்காலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றனர். மீனவர்கள் மீன் பிடிப்பதற்குக் கடலுக்குச் செல்லும் போது தம்முடன் வலைகளைத் தான் எடுத்துச் செல்வது தான் வழக்கம். ஆனால், வட பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்லும்போது குப்பை விறாண்டி போன்றவற்றையும் தம்முடன் எடுத்துச் செல்கின்றனர். காரணம் இவர்கள் கரையோரங்களில் நின்றே மீன் பிடிப்பதால் குப்பை விறாண்டியால் சேற்றை விறாண்டி இறால் போன்றவற்றைப் பிடிக்கின்-றனர்.

இவர்களுக்கு மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள பிரதேசத்தின் ஆழம் 8 அடி மட்டுமே. (நெடுந்தீவில் மட்டும் 40அடி ஆழத்திற்குச் சென்று மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.)

காலை 4.30 மணிக்கு மீனவர்கள் மீன் பிடிப்பதற்காகக் கடலுக்குச் செல்லலாம் என வர்த்தமானி அறிவிப்புக் கூறினாலும் காலை 5.30 மணிக்குப் பின்னரே மீனவர்களை கடலுக்குள் இறங்குவதற்கு படையினர் அனுமதிக்கின்றனர். எட்டு குதிரை வலுகொண்ட வெளி இணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட வள்ளங்களைப் பாவிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ள போதிலும் அவற்றைப் பாவிப்பதற்கு படையினர் அனுமதிப்பதில்லை.

சகலவெளி இணைப்பு இயந்திரங்-களும் இராணுவத்தினரால் பறிமுதல் செய்து அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனால் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லும் போது கையால் துடுப் பு வலித்துக் கொண்டே செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லும் போது தமது அடையாள அட்டைகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்து விட்டே செல்ல வேண்டும். அத்துடன் ஒவ்வொரு வள்ளங்களிலும் எத்தனை பேர் மீன்பிடிக்கச் செல்கிறார்கள் என்பதை இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தி விட்டே செல்லவேண்டும். திரும்பி வரும்போது இந்த மீனவர்களின் எண்ணிக்கை கூடவோ குறையவோ கூடாது.

அதிகாலை 5.30 மணிக்குப் பின்னரே இவர்கள் கடலுக்குச் செல்வதால் காலை 10.00 மணி முதல் மாலை 2.00 மணிக்கிடைப்பட்ட நேரத்திலேயே கரைக்குத் திரும்புகின்றனர். இதனால் பிடித்துவரும் மீனை சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. அத்துடன் பிடித்து வரும் மீனை பாதுகாத்து வைப்பதற்குத் தேவையான ஐஸ் வசதி இல்லததால் மீன்களைப் பாதுகாக்கவோ ஏனைய இடங்களுக்கு அனுப்பவோ வசதியில்லாமல் போகிறது.

1980ம் ஆண்டு 30 மெட்ரிக் தொன் ஐஸ் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், தற்போதைய தேவை 100 மெட்ரிக் தொன். ஐஸ் பிளான்ட் ஆவது இருந்ததால் தான் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மீன்களைப் பாதுகாக்க முடியும்.

1980ம் ஆண்டு ஒரு வள்ளம் வருடத்தில் 150 தடவைகள் கடலுக்குச் சென்று வந்தது. 1983ற்கு முன்னர் வடக்கிலிருந்து தினமும் பல லொறிகளில் தென் பகுதிக்கு மீன் எடுத்துச் செல்லப்படுவது வழக்கம். இதைவிட அன்ட்றீஸ் போன்ற நிறுவனங்கள் கடலுணவுகளைப் பதனிட்டு கொழும்புக்கு அனுப்பி வந்தன. அத்துடன் அக்ரோமரைன் இன்டஸ்றீஸ், அன்டன், சீநோர் போன்ற நிறுவனங்கள் மீன்பிடித் தொழிலினூடாக தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கின.

1983ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 49, 721 மெட்ரிக் தொன் மீன் உற்பத்தி செய்யப்பட்டது. இது 1997ம் ஆண்டு 2,723 மெட்ரிக் தொன்னாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு இன்னல்களை அனுபவித்து வரும் வட பகுதி மீனவர்களுக்கு விடிவு கிட்டுவது எப்போது?

- எழுவான்

# சசி: நினைவு

முகமூடியணியாத முகங்களுள் (விரல் விட்டு எண்ணக் கூடிய) ஒருவர்! அன்பும் நட்பும் அடக்கமும் சராசரிச் சுதந்திரமும் மகிழ்ச்சியும் கொண்ட முகத்துடன் என்றும் காணப்படுபவர்!

ஒரு தனி நபரின் அழகியல் அனுபவம் எந்தளவுக்கு அதி செறிவானதாக இருக்கின்றதோ, அந்தளவுக்கு அவருடைய ரசனை உயர்வாகவும், அவருடைய அறநெறியின் குவிமையம் கூர்மையாகவும் இருக்கும் என்பதற்கு நல்லதொரு மாதிரி சசி அண்ணர்!

உலகத் திரைப்படத் துறை பற்றி நாங்கள் பலதும் கற்றுக் கொள்ளத் துணை நின்ற 'பாலபாட' ஆசிரியர்களுள் அவரும் ஒருவர்!

நுண்கலைகள் மீதான அவரது ஆழமான பற்று அவரது ஆக்கங்களின் ஆழங்களில் தெரிந்தது. சிற்பம், ஓவியம், திரைப்படம் பற்றிய கட்டுரைகள் அவரது நுண்ரசனையை எமக்குக் காட்டுவதுடன் நல்ல கலானுவனுபவத்தையும் எமக்கூட்டுபவை! சத்யஜித்ராய் என்றால் யார்? விஸ்வலிங்கம் என்றால் யார்? அவர் எழுதிய கட்டுரைகள் என்றும் எம்மைக் கவரும் நல்ல பல் வண்ண ஓவியங்களே!

எளிமையும் தெளிவும் மென்மையும் கொண்ட அவரது ஆளுமை அவரது எழுத்துக்களில் இருந்தன! அவர் சொல்வார் - "சீனக் கலைஞர் லியூவின் வெற்றிக்கு அவரது தொழிநுட்பத் தேர்ச்சி மட்டுமல்ல, தனது சாதனங்கள் மூலம் சொந்த அனுபவங்களை பரிமாற்றம் செய்யும் அவரது ஆற்றலும் தான் - என்று ஒரு விமர்சகர் சொல்வாராம்" சசியின் படைப்புகளில் இது இருந்தது.

திரைப்படக் குறிப்புகளோ, கண்காட்சிகள் பற்றிய விமர்சனங்களோ எவற்றை அவர் எழுதினாலும், அவை வெறும் தகவல் தருவனவாக மட்டுமன்றி - அவர் எழுதியதன் நோக்கு நிலையும், அது வெளிப்படுத்தும் சமூக ரீதியான உண்மைகளும், ஒப்பீடுகளும் ஒன்றையொன்று பின்னிக் கொண்டவையாக இருப்பதை நாம் காணலாம்! அவரது எழுத்துக்களில் மட்டுமல்ல, அவருடன் நெருங்கிப் பழகியோருக்கும் அவருடனான உரையாடல்களில் இது புரியும். அவர் மீது மதிப்பார்ந்த அன்பினை நாம் வைப்பதற்கு அது தான் காரணமோ?

கொழும்பில் இடம்பெற்ற ஈரானியத் திரைப்படம் ஒன்றைப் பார்த்து விட்டு வெளியில் வந்த பொழுது - எனக்குப் புரிந்து கொள்ளமுடியாதிருந்த சில அம்சங்களைச் சொன்ன போது, அவர் அதை - ஒரு சமூகவியலாளன், ஒரு கலாரசிகன், ஒரு அரசியல் விமர்சகன் என்ற நிலையினின்று விளக்கினார். அதை நான் மீண்டும் பார்த்த பொழுது - 'தும்பு மிட்டாய்' போன்று ஜீரணித்துக் கொண்டேன்.

அப்படி ஒருவர் இனிக் கிடைப்பாரா?

அது மட்டுமல்ல - அந்தப் படம் முடிந்து வெளியே வந்த வேளை - வயிறு முட்டச் சுவைத்தவராய், 'ஆகா ஈரானைப் பற்றி நாங்கள் வைத்திருந்த Frame ஐ இந்தப் படம் உடைத்திருக்கிறது - என்று சொல்லி மகிழ்ந்த அந்தச் சிரிப்பு...!

ஜெர்மனிய கலாசார நிலையத்தில் ஒரு திரைப்படம் முடிந்து வரும் போது - கூட வந்த சிங்கள நண்பர்கள் - திரைப்படம் பற்றி பலதும் கதைத்துக் கொண்டு வந்தனர். கடைசியில் இவர் சொன்னார் - அத் திரைப்படத்தின் நெறியாளர் தான் ஜெர்மனியத் திரையுலகின் - இறை தூதர் என்று...! (ஃபாஸ் பைண்டர் என்று நினைக்கிறேன்)

பல விடயங்கள் அவரிடம் இருந்தாலும் அலட்டிக் கொள்ளாத பண்பு - இது! கோபத்தை அவரில் நாம் கண்டதில்லை. ஆனால், ஒரு விடயத்தில் மட்டும் அவர் 'குமுறுவது' அவருடன் நெருங்கியவர்களுக்குத் தெரியும். அது தான் யாழ்ப்பாண இடப் பெயர்வு.

தமிழ்த் திரைப்படங்கள் பற்றி அல்லது தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி அவர் பெரிதாய்க் கதைப்பதில்லை. ஆனால், திரைப்படங்கள் தொடர்பாக தொடராக ஒரு நிகழ்ச்சியை சுயாதீன தொலைக்காட்சியில் செய்வதற்கும் அதற்காக சில தூதரகங்களுக்குப் போவதற்கும் கடைசியாகச் சம்மதித்திருந்தார். அவர் சம்மதித்ததே பெரிய காரியமாகும்.

இது பற்றிக் கதைத்துக் கொண்டு டிக்மன் வீதியால் வந்து கொண்டிருந்தபோது, அவர் 'சஸ்பென்ஸ்' என்றால் என்ன - என்று சில நல்ல குறிப்புக்களைச் சொன்னார். ஆனால், அவர் வரவும் 'சஸ்பென்ஸ்' ஆகிவிட்டதே!

'முற்போக்குச் சிந்தனைகள் கொண்ட சசி- கற்பனையில் கனவுகளில் புரட்சிகளைக் காணாதவர்.

வாய் வீச்சுக்களில் அவற்றை அள்ளி வீசாதவர்: வாழ்க்கையினை நன்னெறியில் இயக்கியவர்!

வாழ்க்கை என்ற கடலை - அவர் தாண்டி விட்டார்!

"அலை கடலோரம்
அமைதியின்றிக் காத்து வாங்கியபோது
உனது ஞாபகம் வந்தது
அந்த அலை ஞாபகமூட்டிற்று
வெண்மைத் திரையின் தூய்மை போல எமது கனவு
அதற்கு அப்பால் தெரியும் இளஞ் சிவப்பு
உன்னுடையதல்லவா?
நண்பா நீ மட்டுமா,
அதைத் தொடரும் அடுத்தடுத்து....
ம்.....
கனவுக் கரைகளை அடைய முயலும் அலைகளில்
நீ மட்டுமா இருக்கிறாய்?" -

- என்ற பரதேசியின் கவிதை, தமிழர் வாழ்வுக் கடலின் யதார்த்தத்துடன் - குமுதினி, கிளாலி ஊடாக நாச்சிக்குடா வரையாக - இன்றும் பொருந்துகிறது!



சசி அண்ணா!
உங்கள் விமானத்தின் ஆயுள்
உங்கள் ஆயுளைத் தீர்மானித்தது!
உங்கள் ஆயுளை அறிந்தபோது,
எங்கள் ஆயுள் குறைந்தது!
இப்படி எத்தனை நாள் எத்தனை நாள்
எங்கள் ஆயுள் குறைவதோ?
போரின் ஆயுள்
தீர்மானிக்கப்படும் வரைக்கும்!
எங்கள் ஆயுள் குறைந்து செல்லும்!
அல்லது,
உங்களைப் போலவே
தீர்மானிக்கப்படலாம்...!
அதற்கும் நாம் தயாராய்க் காத்திருப்போம்
கடற் கரையில்.....!!

வரா


கடந்த ஒக்டோபர் 9. அன்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை அரசாங்கம் நடாத்திவரும் யுத்தம் தொடர்பான பல கேள்விகளை எழுப்புவதாக அமைந்திருந்தது.

அவரது நீண்ட உரையின் போது அவர் அரசாங்கத்தின் இந்த யுத்தம் அரசியல் நோக்கங்களுக்காக இராணுவ ரீதியான திட்டமிடல் இன்றி நடாத்தப்படுகிறது என்று சாடினார். மாங்குளம் வெற்றியை ஒரு பெரிய வெற்றியல்ல என்று தெரிவித்த அவர் அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கை படுதோல்வியடைந்து விட்டது என்று குறிப்பிட்டார்.

அவரது பேச்சிலிருந்து சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.

# அரசின் இராணுவத்திட்டம் தோற்று விட்டது!

—ரணில்



உங்கள் யுத்தத்தின் பிரதான குறிக்கோள் புலிகளை முற்றாக இல்லாதொழிப்பதாகத்தான் இருந்தது. ஆனால், 17 மாதங்களுக்குப் பிறகும் இன்னமும் நீங்கள் அரைவழி தாண்டியவர்களாகவே உள்ளீர்கள். கிளிநொச்சியை கைப்பற்றியதன் மூலம் புலிகள் ஜயசிக்குறு நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஜயசிக்குறு தொடங்கப்பட்டதே கிளிநொச்சியுடன் வவுனியாவை இணைப்பதற்காகத்தான். ஆனால் இன்று கிளிநொச்சி எதிரிகளின் கைகளுக்குப் போய்விட்டது.

அங்கே ஒரு திட்டமிடல் இல்லை, ஒரு புலனாய்வு நடவடிக்கை கிடையாது. உண்மையில் இந்த யுத்தம் வெறும் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதே. புலிகளின் பலத்தை குறைவாக மதிப்பிட்டீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக அங்கு சண்டையிட போதிய இராணுவத்தை நீங்கள் வைத்திருக்கவில்லை.

நாங்கள் கிழக்கை கைவிட்டோம் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்காக. இரவு பகலாக அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்த 90 வீதமான பகுதியை நாம் கிழக்கிலே கைவிட்டோம். இப்போது ஒரு சில நகரங்களே எம் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆனால் மட்டக்களப்பிலும் திருமலையிலும் உள்ள பல பிரதேசங்களில் இரவில் புலிகளின் நிர்வாகமே நடக்கிறது.

யாழ்ப்பாணத்திற்கு ஒப்பரேஷன் ரிவிரெச மூலமாக சென்றோம். பிறகு ஜயசிக்குறுவைத் தொடங்கி யாழ்ப்பாணத்தை பலவீன-மாக்கினோம். இராணுவத்திலிருந்து 30,000 பேர், இவர்களுக்கு துணையாக பொலிசும் என்று பெருமளவு சக்திகளை நாம் ஜயசிக்குறு மூலமாக கைப்பற்றிய வீதியைப் பாதுகாக்க பயன்படுத்தினோம். இது புலிகளுக்கு பெரும் வாய்ப்பாக இருந்தது. நாம் தாக்குதல் நடவடிக்கைக்கு போதிய பலமற்றவர்களானோம்.

மாங்குளத்தைக் கைப்பற்றும் திட்டமொன்று இருந்தது. இந்தத் திட்டம் பெருமளவுக்கு அரசியல் லாபத்தின் அடிப்படையில் அமைந்த திட்டமாகும். தளத்திலிருந்த படை அதிகாரிகள் அதைச் செய்ய வேண்டாம் என்று கோரினார்கள். ஆயினும் அரசாங்கம் அதைச் செய்தே தீருவது என்று தீர்மானித்தது. மாங்குளத்தை கைப்பற்றிவிட்டு அதை யுத்தத்தின் முடிவு என்று அறிவிக்க விருப்பியது. அப்படிச் செய்வதன் மூலமாக மாகாண சபைத் தேர்தலுக்கான ஒரு பெரிய அரசியல் பிரச்சாரத்தை செய்து விடலாமென்று கருதியது.

அரசாங்கம் மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்காக யாழ்ப்பாணத்தை விட்டு, கிளிநொச்சியைவிட்டு, ஆனையிறவை விட்டு வரவேண்டியிருந்தது. இதற்கான தயாரிப்பில் அவர்கள் ஈடுபட்டிருக்கையில் புலிகள் பரந்தனுக்காக தமது படைகளை குவித்து இதனை முறியடித்தார்கள். புலிகள் தமது படைபலத்தை மாங்குளத்தில் குறைத்துக்கொண்டார்கள். அங்கிருந்து 700 முதல் 1000 வரையான உறுப்பினர்களை கிளிநொச்சியை நோக்கி பின்வாங்கச் செய்தார்கள். அவர்கள் தமது திட்டத்தை மாற்றிக்கொண்டார்கள். மாங்குளத்தை காப்பாற்றுவதை விட்டு கிளிநொச்சியை பிடிப்பது என்று முடிவு செய்தார்கள். அவர்கள் அரசாங்கத்திடமிருந்து கைப்பற்றிய புல்டோசர்களைப் பாவித்து மன்னாருக்கான ஒரு பாதையை வெட்டிக்கொண்டபின் மாங்குளம் அவர்களுக்கு கிளிநொச்சியைவிட இராணுவ அரசியல் ரீதியில் முக்கியமற்ற ஒன்றாகிவிட்டது.

எனவே அவர்கள் 27ஆம் திகதி திடீரென ஒரு எதிர்பாராத தாக்குதலை நடாத்தத் தொடங்கினார்கள். இதனை எதிர்த்து நிற்க படையினருக்கு எந்த பலமூட்டும் சக்தியும் இருக்கவில்லை. நாம் கிளிநொச்சியையும் பரந்தனையும் கைவிடவேண்டிஏற்பட்டது. அவர்கள் கிளிநொச்சியைக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

அதே வேளை இராணுவம் மாங்குளத்துக்கு நகர்ந்தது. புலிகள் இராணுவத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தினார்கள். இராணுவத்தினரும் புலிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தினார்கள். ஆனால் புலிகள் கிளிநொச்சியைக் கைப்பற்றும் தம் குறிக்கோள் முடிந்ததும் மாங்குளத்திலிருந்து பின்வாங்கினார்கள்.

இப்போது ஜயசிக்குறு ஒரு பயனற்ற முயற்சி என்றாகிவிட்டுள்ளது. ஆனால் இந்த திட்டத்தை உருவாக்கிய அமைச்சரோ இந் நடவடிக்கையை ஜனாதிபதியே வழிநடத்தி வருகிறார் என்று கூறுகிறார். இந்தக் குழந்தைக்கு யார் பொறுப்பெடுக்கப் போகிறார்களோ நான் அறியேன். ஆனால் இதற்கான அனைத்து முயற்சிகளும் வீணாகிவிட்டன.

அரசாங்கத்தின் இராணுவத் திட்டம் இப்போது தோற்றுவிட்டது. அவர்களிடம் வேறு எந்தத்திட்டமும் கிடையாது. எவ்வளவு தான் சந்தோஷமற்றதாயினும் அதுதான் உண்மை.

அரசாங்கத்தினருக்கு வேறு வழியில்லாததால் அவர்கள் பொய் சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள். எங்களுக்கு உண்மையை சொல்லுங்கள். உங்களால் உண்மையை ஒரு போதும் மறைக்க முடியாது. நீங்கள் உண்மை பேசினால், உங்களால் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும். அப்போது தான் நாம் இப்பிரச்சினையை எப்படி தீர்ப்பது என்று சேர்ந்து தீர்மானிக்க முடியும். இதை இந்த அரசாங்கத்துக்கு சொல்லி வைக்க விரும்புகிறேன்.

நாம் எதிர்கொண்ட அழிவுகளில் மிகவும் மோசமானது கிளிநொச்சி தான். இது முல்லைத்தீவைவிடப் பெரியது. நான்கு 120 மி.மி. ஆட்டிலெறிகள், இரண்டு ரி.55 ரக டாங்கிகள் உட்பட பல ஆயுதங்களை நாம் தொலைத்துவிட்டுள்ளோம். இத்துடன் 8 பஃவல் கவச வாகனங்கள் 70 ஜீப் வண்டிகள் டிரக்குகள், டிரக்டர்கள், என்பன அங்கிருந்தன. 81 மி.மி. மோட்டார் லோஞ்சர்கள், 2500 சிறிய ரகத் துப்பாக்கிகள் மற்றும் 1000 சுற்று ரொக்கற்றுகள் எல்லாம் அங்கிருந்தன. அவை புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன.

தவிர, காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் தொகை, முதலில் இராணுவப் பேச்சாளர் ஒக்டோபர் முதலாம் திகதி 492 பேர் இறந்ததாகவும், 400 பேர் காயமடைந்ததாகவும் சொன்னார். பிறகு சண்டே டைம்ஸ் இதழில் (ஒக்டோபர் 4) பிரிகேடியர் சுனில் தென்னகோன் இறந்தவர் தொகை 623 என்று தெரிவித்திருந்தார். அன்று புலிகள் 600 இராணுவத்தினரின் சடலங்களை இராணுவத்திடம் ஒப்படைத்ததாக சண்டே லீடர் கூறிய தகவல் தணிக்கைஅதிகாரியின் அனுமதியுடன் வெளியாகியிருந்தது. இவைகளில் 401 சடலங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

ஆனால் இன்று அரசாங்கத்தின் சார்பில் இந்தப் பாராளுமன்றத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் 186 பேர் இறந்ததாக அறிவிக்கின்றார். 426 பேர் காயமடைந்ததாகவும் 783 பேர் யுத்தத்தில் காணாமல் போனவர்களாகவும் அறிவிக்கிறார்.

பைபிளில் யேசுநாதர் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் லாசரை உயிர்ப்பித்ததாக ஒரு கதையுண்டு. ஆனால் இந்த அரசாங்கம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு பிறகு 437 இராணுவத்தினரை உயிர்ப்பித்திருக்கிறது. இது தான் நீங்கள் செய்துள்ள அற்புதமா?

இராணுவச் செய்திகள் மீதான தணிக்கையை நிறுத்த வேண்டும். இது ஒன்றும் தேசிய பாதுகாப்புக்காக கொண்டுவரப்பட்டதல்ல. புலிகளுக்கு யுத்தமுனையில் என்ன நடக்கிறது என்பதுவும் விளைவுகள் என்னென்ன என்பதுவும் தெரியும். மக்களுக்கு இந்தத் தகவல்கள் போய்ச்சேரக்கூடாது என்று உண்மையை மறைப்பதற்காக ஒரு பொய் வட்டத்தை உருவாக்கவே இந்த தணிக்கையைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். இச்செய்திகள் படைவீரர்கள் ஊடாக கிராமங்களுக்கு செல்கின்றன. அங்கெல்லாம் யுத்தமுனையில் என்ன நடக்கிறது என்பதை மக்கள் அறிந்து கொள்கிறார்கள்.

1995இல் யுத்தம் தொடங்கியது முதல் 1998 செப்டம்பர் வரை கொல்லப்பட்ட படையினரின் தொகை 11,500. காயமடைந்தவர் தொகை 23,000. ஆனால் 1983க்கும் 1988க்கும் இடைப்பட்ட காலத்தில் இறந்த படையினரின் தொகை 1189உம், 1989க்கும் 1994க்கும் இடைப்பட்ட காலத்தில் இறந்தவர்களின் தொகை 2679உம் மட்டுமே.

இன்று திறமையின்மை ,சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளின் ஆலோசனைகட்கு செவிமடுக்காமை போன்றவற்றால் இறப்பின் அளவு 11,500க்குச் சென்றுள்ளது. முல்லைத்தீவு தோல்வி ஜயசிக்குறு தோல்விகள், மொசாம்பிக்கிலிருந்து வந்த ஆயுதங்களை இழந்தமை என்பனவும் முக்கியமானவை.

புலிகளுக்கு இன்னும் ஓரிரண்டு ஆண்டுகட்கு போதுமான ஆயுதங்கள் கிடைத்துள்ளன. கிளிநொச்சி வெற்றி அதற்கு போதுமான சான்றாகும்.

-சஞ்சித்

---

## சவாலிற்குள்ளாகும் வாழ்வு!

அவர்கள் யார் என நாமறிகின்றோம் அவர்கள் உருவாகிய விதம் கண்முன்னே காணுகின்றோம். அவர்களின் வளர்ச்சி எம்மை அச்சுறுத்துகின்றது. சாதாரண சிவில் வாழ்க்கைக்கே சவால் விடுகின்றனர் அவர்கள். நாளாந்த எம் நடவடிக்கைகளில் எல்லாம் அவர்களின் கை நீள்கின்றது. பயமுறுத்துகின்றது. சிங்களவர் அல்லாதவர்களிற்கு எந்த ஒரு கடையையோ வர்த்தக நிலையத்தையோ கொடுக்க வேண்டாம் என கிரிபத்கொடையில் சட்டமிடுகின்றனர். மீறி வாங்கமுயன்ற முஸ்லிம் வியாபாரியின் வியாபார ஸ்தலத்திற்கு குண்டெறிகின்றனர். அரச காவல் படை கைகட்டி நிற்கிறது. நுவரெலியாவில் "சிங்கள மக்களே சிங்கள கடைகளில் தான் சாமான் வாங்குங்கள்" என பச்சை இனவாதம் பேசுகின்றனர். ஒட்டுமொத்த சிறுபான்மை இனத்திற்கும் எதிராக நன்கு திட்டமிட்ட ரீதியில் தம்மை பலப்படுத்தி நிறுவனமயப்படுகின்றனர்.

அவர்கள் இனவாதிகள். வீரவிதான எனும் பேரில் ஒன்றுபட்ட அமைப்பாக திரண்டு கையில் தீப்பந்தம் ஏந்தி சிறுபான்மையினரின் வாழ்வை நோக்கி வீசுகின்றனர். அவர்கள் வீசத்தான் செய்வர். தமிழ், முஸ்லிம் மக்கள் என பேதம் பாராது ஒட்டுமொத்த சிறுபான்மை இனம் என முத்திரையிட்டு சிறுபான்மையினரை அடிமை கொள்ளத்தான் செய்வர், ஏனெனில் அவர்கள் இனவாதிகள். சிவில் சமூக கட்டமைப்புக்குள் கூட அவர்களின் பேரினவாத அலை நாசம் விளைவிக்க புறப்பட்டு விட்டது. அவர்களைப் பற்றி ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அவர்களின் வளர்ச்சியின் தீவிரத்தைப் பற்றியும் ஆச்சரியம் இல்லை. நாளை முழு இலங்கையுமே அவர்களால் இடப்படும் தீயில் இன்னொருமுறை எரிந்தாலும் ஆச்சரியம் வரப் போவதில்லை.

ஏனெனில் அது உருவாகக் கூடிய ஒரு அரசியல் சக்திதான். இன்று ஆட்சியில் இருக்கிறது. சகல பௌத்த பேரினவாத சக்திகளும் தம்மை பலப்படுத்தக் கூடிய விதத்தில் தான் அது இனவாத அரசையும் யுத்தத்தையும் கொண்டு நடத்துகிறது. சகல இனவாத பிறபோக்கு சக்திகளுடனும் கூட்டு சேருகின்றது.

அரசிற்கும் இந்த வீரவிதான அமைப்பிற்கும் அதன் உடன் பிறப்பான தேசிய பயங்கரவாத எதிர்ப்பு இயக்கத்திற்கும் இடையேயான உறவு பற்றி நாம் அறிந்ததே. அண்மையில் ஐ.தே.க. நிபந்தனையின்றி புலிகளுடன் பேச வேண்டும் எனும் கோரிக்கையை வெளியிட்டதன் பின் அக்கோரிக்கைக்கு எதிராக நாடெங்கும் பிரசுரம் வெளியிடுவதற்கும், ஒட்டுவதற்கும் அரசே இவ் அமைப்புகளிற்கும் காசு கொடுத்தது. மிக முக்கியமாக பொ.ஐ.மு.வின் தூண்டுதலினாலும் பண உதவியினாலுமே இது ப.எ.இ வினரால் மேற்கொள்ளப்பட்டது. எக்காலத்திலும் புலிகளுடன் பேச்சுவார்த்தை வேண்டாம் எனக் கோருவதே அப் பிரசுரத்தின் முக்கிய கருப்பொருளாக இருக்கிறது. 'சமாதான தேவதையின் கட்சியினதும் அரசினதும் பேரினவாதக் கூட்டு பற்றி எவ்வித சந்தேகமும் இல்லை.

சரி இப் பேரினவாதக் கட்சிகள் தான் இவ்வாறு செய்கின்றன. இந்த தமிழ் கட்சிகளும், தமிழ் சக்திகளும் இவ் அமைப்புகளிற்கு எதிராக என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? இவ் இனவாத அமைப்புகளின் பெயர்களையாவது இவர்கள் அறிந்து வைத்திருப்பாரா? இவர்கள் அறிந்து வைத்திருக்கின்றனரோ இல்லையோ அது வேறு விஷயம் ஆனால் இவர்களின் அரசியல் இருப்பு (அது பேரினவாதமயப்படுத்தலிற்கு சார்பாக இன்று வரை இருந்து வருகின்ற போதிலும்) இதே இனவாத சக்திகளினால் விரைவில் கேள்விக்குள்ளாகும் என்பது மட்டும் உண்மை.

நன்றி - நூலகத்திட்டம்





இலங்கையில் சமாதானப் படையினை வழி நடத்தியவரும், இந்தியப் படையின் தென்னிந்தியப் பிராந்திய தளபதியாகவும் இருந்தவருமான லெப்டினென் ஜெனரல் கல்கத் அவர்கள், சண்டே ரைம்ஸ் இதழுக்கு வழங்கிய தொலைபேசிச் செவ்வியிலிருந்து முக்கிய பகுதியை இங்கு தமிழாக்கித் தருகிறோம். இலங்கை இராணுவம் பதுங்கு குழி மனோபாவத்திலிருந்து விடுபடவேண்டும் என்று குறிப்பிடும் அவர், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தவிர இராணுவத் தீர்வு சாத்தியம் இல்லையென்று இப்பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

(ஆர்)

# "செய்தித் தணிக்கை எதிர்மறையான விளைவையே தரும்"

**- லெப்.ஜெனரல் கல்கட்**

***இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான வேறுபாடு பற்றி...***

மிக அடிப்படையான வேறுபாடு என்னவென்றால், இராணுவம் மரபு ரீதியான யுத்தத்திலும், நிலையான பிரதேசங்களைப் பாதுகாப்பதிலும் நம்பிக்கை வைத்திருக்கிறது. புலிகள் இயங்கிக் கொண்டிருத்தலில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள்.

எனவே, இருவருக்கிடையிலான யுத்தம் இருவேறு சிந்தனையோட்டங்களை - புலிகளிடம் தாக்குதல் சிந்தனையோட்டம், இராணுவத்திடம் தற்பாதுகாப்பு சிந்தனையோட்டம் கொண்டதாக உள்ளது. இலங்கை இராணுவம் ஒரு வகை பதுங்குகுழி மனப்பாங்கை உள்வாங்கி இருப்பதாகத் தோன்றுகிறது. இது அதனை ஓரிடத்தில் தங்கியிருக்க வைத்து, எதிரி வந்து தாக்கும் வரை காத்திருக்கச் செய்கிறது. இந்தத் தாக்குதலுக்காக புலிகள் 2000 அல்லது 3000 உறுப்பினர்களை தயார் செய்துள்ளதாகத் தெரிகிறது. ஆட்டிலறிகள் தாக்கக் கூடிய இடத்திற்கு தொலைவிலிருந்து நகர்த்தப்பட்டிருக்கின்றன.

இந்தத் தாக்குதல் ஒன்றும் திடீரென நடந்ததாக சொல்லமுடியாது. அதன் அளவைப் பார்க்கும் ஒருவர் அதற்கான தயாரிப்புக் காலம் ஒரு மாதமாவது இருந்திருக்கும் என்று கூற முடியும். ஆட்டிலறிகள் பயன்படுத்தப்பட்டிருப்பதால் இந்தத் தயாரிப்புக்காலம் இன்னும் அதிகமாக 2, 3 மாதங்களாகக் கூட இருந்திருக்கலாம்.

ஒரு தளமானது ஐந்து முதல் பத்து கிலோ மீற்றர் தூரம் வரை தனது ஆதிக்கத்தை வைத்திருக்க வேண்டும் என்பதை எந்த இராணுவமும் அறியும். அதாவது, படையினர் தொடர்ச்சியாக தளத்தைச் சுற்றி நகர்ந்து கொண்டும் எதிரியுடன் போராடிக் கொண்டும் இருக்க வேண்டும். இது தொடர்ச்சியாகவும், அடிக்கடியும் செய்யப்பட்டிருக்கிறதா?

எதிரியை மீள ஒழுங்கமைத்துக்கொள்ளவோ, தன்னை நிலைப்படுத்திக் கொள்ளவோ அனுமதிக்கக் கூடாது. யுத்தம் எப்போதும் முகாமுக்கு வெளியிலேயே நடாத்தப்பட வேண்டும். உள்ளே அல்ல. இலங்கையில் யுத்தம் நீண்ட காலமாகவே நடக்கிறது. இராணுவம் இதற்காக நிறைய வரி செலுத்திவிட்டது. ஒரு கெரில்லா அமைப்புடன் போரிடுவது என்பது ஒரு சவாலான விடயம் தான். அத்துடன் எந்தப் போர் வீரனும் எல்லா நேரமும் விழிப்புடன் இருக்க முடியாது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு இராணுவத்தீர்வு கிடையாது. அதற்கு ஒரு அரசியல் தீர்வு வேண்டும். பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டிய தருணம் இது.

***யுத்த இழப்புகள் பற்றி ?***

சர்வதேச ரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்ட இறப்பு மற்றும் காயப்படும் படையினருக்கான விகிதம் 1:2.5 (அதாவது ஒன்றுக்கு இரண்டரை) என்பதால், இராணுவம் வெளியிட்டுள்ள தகவலைவிட உண்மை அதிகமாக இருக்க வேண்டும். கிளிநொச்சி, பரந்தனில் கொல்லப்பட்டவர் தொகை 670 என்றால் காயப்பட்டோர் தொகை 1500 ஐவிட அதிகமாக இருக்க வேண்டும். இவர்களில் ஒரு சிலர் உடனேயே யுத்தக்களத்திற்கு சிகிச்சைக்குப் பிறகு திரும்பக் கூடுமாயினும் அப்படித்தான் இருக்க முடியும்.

இந்திய சமாதானப் படை இலங்கையில் இருக்கும் போது, நிலையான பிரதேசங்களை மூன்றில் ஒரு பகுதியினரே பாதுகாத்தனர். மீதி மூன்றில் இரண்டு பகுதியினர் பல்வேறு அளவுகளில் வெவ்வேறு இடங்களில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். ஹெலியில் வரும் கொமாண்டோக்களை இத்தகைய சிறிய ஆனால், உறுதியான தாக்குதலுக்கு நான் அறிமுகப்படுத்தினேன்.

நெதிகைக் குளம் பகுதியில் இருந்த பிரபாகரனின் இராணுவ தலைமையகத்தையும், தொடர்பு நிலையத்தையும் கொண்ட 14வது தளத்தை நகர்ந்து செல்லும் குழுக்கள் மூலமாகவே நிர்மூலமாக்க முடிந்தது. புலிகளின் தலைவர் பிரபாகரன் பல தொடரான சுரங்க வழிகளினூடாக தப்பி விட்டபோதும் இத்தளத்தை நாம் தகர்த்தோம்.

இந்த 14வது தளத்தை தகர்த்ததன் பின்னரே வடக்கு கிழக்கில் தேர்தலை நடாத்த முடியும் என்று நான் தெரிவித்தேன். அழிக்கப்பட்ட பகுதிகளை மீளமைக்க புலிகளுக்கு சில காலம் எடுக்கும் என்று எனக்கு தெரிந்திருந்தது.

***இந்திய அமைதிப்படைக்கு இலங்கைப்படையைவிட சிறப்பான உளவறியும் வாய்ப்பு இருந்ததா என்பது பற்றி...***

எமக்கு சிறப்பான உளவறியும் வாய்ப்பு இருந்திருக்க முடியாது. இது எங்களது நாடு அல்ல. இலங்கை இராணுவத்திற்கு தமிழ்ப் பிரதேசங்களில் நீண்ட கால பரிச்சயம் இருக்கிறது. ஆனால், வானொலி தொடர்புகளை இடைமறித்து கேட்பதன் மூலமாக நாம் அவர்களின் நிலைகளைத் தெரிந்து கொண்டு அவற்றை நோக்கி சென்றோம்.

***மாங்குளத்தை கைப்பற்றியதைப் பற்றி?***

மாங்குளம், கண்டி யாழ்ப்பாண வீதியில் உள்ள ஒரு பிரதேசம் என்பதைவிட அதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. ஆனால், கிளிநொச்சி யாழ் குடாநாட்டிற்கு ஒரு திறவு கோலாக இருக்கிறது. இப்போது யாழ்ப்பாணம் எப்போதும் தாக்கப்படக் கூடிய நிலையில் உள்ளது.

***எத்தனையோ பலமான கொங்கிறீற் பதுங்கு குழிகளை கட்டியிருந்த போதும் அதை கைவிட்டு பின் வாங்கும் முடிவை ஏன் புலிகள் எடுத்தனர்?***

புலிகள் மாங்குளத்தைப் பற்றி அவ்வளவாக அக்கறை காட்டி இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. எந்த ஒரு கெரில்லா இயக்கமும், பிடித்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காக ஒரு பிரதேசத்தை பிடித்து வைத்திருப்பதில்லை. பிரபாகரன் நிச்சயமாக மாங்குளத்தைவிட கிளிநொச்சியை முக்கியமானதாகக் கருதியிருப்பார்.

***கிளிநொச்சியிலிருந்து சிறிது தூரத்தில் இருக்கும் ஆனையிறவை இனி இலங்கைப் படைகள் பாதுகாப்பது பற்றி?***

அதனைப்பாதுகாப்பது, அதன் பின்பகுதியின் பலத்தில் தங்கியுள்ளது. அதாவது யாழ்ப்பாணத்தில் உள்ள படைகள் புலிகளின் தொந்தரவுக்கு உள்ளாகாமல் இருப்பார்களாக இருந்தால் அதனைப் பாதுகாக்க முடியும். மிகவும் உச்ச யுத்தம் நடந்துகொண்டிக்கும் போதும் எதிரியுடனான உரையாடலைப் பேணுவதற்கான வழிகளைத் திறந்து வைத்திருப்பது முக்கியமானதாகும். சமாதானத்தைப் பேசவோ, வேறெதையாவது சொல்லவோ இது அவசியம். யாரைப் பிடிக்க வேண்டும், எந்த வழியைப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும்.

***யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது பற்றி?***

அது அரசியல் அவசியம். ஆனால் அதைப் பாதுகாப்பதற்காக நிலையான பகுதிகளில் பாதிக்கு மேலான இராணுவம் கட்டிப்போடப்பட்டுள்ளது. இது பிற தாக்குதல் நடவடிக்கைகட்கு ஆளணிப் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது. வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கான வீதியைக் கைப்பற்றுவது என்பது இராணுவ மற்றும் பொருளாதார ரீதியாக அவசியமான ஒன்றாகும். ஆனால், இதை தொடர்ந்து தக்க வைத்திருப்பது என்பது ஒன்றும் இலேசான செயல் அல்ல. இந்தப் பாதையில் ஒரு விதமான பகுதியேனும் இராணுவத்திடம் இல்லை என்றால் அது முழுவீதியும் இல்லை என்பதற்கு சமமான ஒன்று தான்.

***செய்தித் தணிக்கை பற்றி ?***

அது எதிர்மறை விளைவைத் தரும் ஒன்றாகும். இதனால் மக்கள் அரசாங்கத்தின் எல்லாத் தகவலையும் நம்ப மறுப்பதுடன் அத்துடன் வதந்திகளையும் எதிரிகளின் செய்திகளையுமே நம்பத் தொடங்குவார்கள்.

அவர்களுக்கு எதுவும் ஒழிக்கப்படாவிட்டால் அவர்கள் அழிவுகளையும், துர்ச்செய்திகளையும் ஏற்றுக் கொள்ளப் பழகிவிடுவார்கள்.

கசப்பான தகவல்களை பின்னர் அறிவது அவர்களை கசப்பூட்டவும், ஆத்திரமூட்டவும் செய்யும்.

நான் இந்திய சமாதானப் படையினை வழிநடத்துபவனாக இருந்த போது இதை மனதில் கொண்டிருந்தேன். சர்வதேச தொடர்பு சாதனங்களுக்கு எல்லா நடவடிக்கைகளையும் பற்றி செய்தி எடுக்க அனுமதித்தேன்.

இதனை நான் இராணுவ வரலாற்றிலிருந்து. இரண்டாவது உலக யுத்தத்தின்போது வட அமெரிக்காவில் ஜெனரல் ட்வைற் ஈசன்ஹவர் தலைமையில் நடந்த சண்டையின் போது கற்றுக்கொண்டேன்.

## யாழ். செய்திகள்

யாழ்ப்பாணம் மவுண்கார்மல் வீதியைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்டன் குணசிங்கம் என்ற 26 வயது நபர் யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஷண் ரெக்கோர்டிங் பாரில் வைத்து 9.9.98 அன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

11-09-98 அன்று மாடியிலிருந்து வீழ்ந்து இறந்ததாக கூறி இவரது சடலம் திருநெல்வேலி இராணுவத்தினரால் கோப்பாய் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இச்சம்பவம் பற்றி இறந்தவரின் மனைவி மேரி கிளாரா நீதிமன்றத்தில் கூறியதாவது.

"9.9.98 அன்று காலை 10.45 மணியளவில் இராணுவத்தினர் வந்து எமது வீட்டைச் சோதனையிட்டனர். இராணுவ வாகனம் திரும்பிச் சென்ற போது எனது கணவர் இராணுவ வாகனத்தில் இருப்பதைக் கண்ட நான் வாகனத்தின் பின் ஓடிச்சென்றேன். அப்போது இராணுவத்தினர் உன்னையும் உனது கணவனையும் சுட்டுவிடுவோம் என்று கூறி எனது அடையாள அட்டையையும் பறித்துச் சென்றனர். எனக்குப் பயமாக இருக்கிறது. எனக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்" என்றார்.

அன்டனின் தந்தையான ஞானசிங்கம், மகனின் உடலில் குண்டூசியால் குத்தப்பட்ட காயங்கள் இருந்ததாகத் தெரிவித்துள்ளார். கழுத்து, கை, முழங்கை, மணிக்கட்டு, சுண்டுவிரல், தொடைகள், தோள்பட்டை முதலிய இடங்களில் கண்டல் காயங்களும், உரசல் காயங்களும் காணப்பட்டதாக மரண விசாரணையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவரின் உடலில் 15க்கும் மேற்பட்ட கண்டல் காயங்கள் காணப்படுவதாக அந்த மரணவிசாரணை அறிக்கை தெரிவிக்கிறது. சில கண்டல் காயங்கள் இரண்டு அங்குல நீளமானவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை இன்னமும் நடைபெறவில்லை.

யாழ் கஸ்தூரியார் வீதியில் உதயன் அலுவலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள வீடியோ கடையில் அண்மையில் இராணுவத்தினர் போய் டெக் ஒன்றைத் தரும்படி கேட்டனராம். அங்கு நின்ற முருகையா ஸ்ரீஸ்கந்தராஜா (26) தனக்குத் தெரிந்த இராணுவத்தினர் யாரையாவது கூட்டி வரும்படி கூறினாராம். உடனே கோபமடைந்த இராணுவத்தினர் அவருக்கு நல்ல உதை கொடுத்திருக்கிறார்கள். மறு நாள் இவரை யாழ்ப்பாணம் சிவன் கோயிலடியிலிருந்த மண்ணெண்ணெய் பெரல் மீது ஏற்றிவிட்டு தாக்கினார்களாம். இவர் தற்போது யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் லயன் எயார் விமானத் தாக்குதலை கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. ஆயுதக் கலாசாரம் வேண்டாம். மக்களின் பேரால் படுகொலைகள் இனியும் வேண்டாம். எமக்குத் தேவை சமாதானம். பிரின்ஸஸ் கேஷ்சுக்கு நட்டஈடு கேட்டோம். லயன் எயாருக்கு? வானம் எம்வசம் என்று பாடி மகிழ்ந்தவர்கள் மக்களுக்கு வழங்குவது இது தானா? போன்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. புலிகளே விமானத் தாக்குதலை செய்ததாக இந்தச் சுவரொட்டிகள் கூறுகின்றன. தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒட்டப்பட்டுள்ள இந்த சுவரொட்டிகளில் தமிழ்க் கட்சிகள் அடிக்கடி தமது துண்டுப்பிரசுரங்களிலும் பத்திரிகைகளிலும் பாவிக்கும் வாசகங்கள் காணப்படுகின்றன. பொது மக்கள் என்ற பெயரிலேயே இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

புங்குடுதீவைச் சேர்ந்த தம்பையா குணபாலசிங்கம் என்ற 42 வயது நபர் மதுபோதையால் இராணுவத்தினரைப் பார்த்து 'இவங்கள் அவங்கள் வந்தால் விட்டுட்டு ஓடிவிடுவாங்கள்' எனக் கூறியதைக் கேட்ட இராணுவத்தினர் இவருக்கு நல்ல 'சாப்பாடு' கொடுத்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளனர்.


யாழ் பல்கலைக்கழகத்தின் 17வது பட்டமளிப்பு விழாவின் போது பல்கலைக்கழக வளவினுள் "காணாமல் போன பல்கலைக்கழக மாணவன் சோமாவை நண்பர்கள் மறந்து பட்டம் பெறுகின்றனர்" என்ற வாசகங்கள் மரங்களில் காணப்பட்டன.

எழு.

நன்றி - நூலகத்திட்டம்



# அரசியல் தவறுகளும் இராணுவத் தவறுகளும் ஒன்றல்ல!



தென்மராட்சி பகுதியில் உள்ள மந்துவில் மட்டுவில் பகுதிகளில் வாழும் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கோரும் சுவரொட்டிகள் சில ஒட்டப்பட்டிருந்ததாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதால் அச்சமுற்று அங்கிருந்த மக்கள் கூட்டமாக வெளியேற முயற்சித்ததாகவும், இவ்வாறு வெளியேற முயற்சித்தவர்களை இராணுவத்தினர் தாக்கி மீண்டும் தத்தமது இடங்களில் போய் இருக்குமாறு கோரியதாகவும் அங்கிருந்து செய்திகள் வந்தன.

அச்சுவேலிப் பகுதியிலும் வடமராட்சியின் சில கிராமங்களிலும் கூடஇவ்வாறே கிராமங்களை விட்டு வெளியேறு மாறு சிலர் வீடுவீடாக வந்து அறிவித்து விட்டுச் சென்றதாகவும் பத்திரிகைச் செய்திகள் சில கூறின.

இந்த விடயம் தொடர்பான முறைப்பாடு ஒன்று யாழ்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் செய்யப்பட்டிருந்தது.

இந்தச் செய்தி குடாநாட்டு மக்களின் மனதில் பெரும் பீதியை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கெனவே யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான அரசாங்கத்தின் ரிவிரச நடவடிக்கை தொடங்க முன்பாக, 1995 இல் வலிகாமப் பகுதி மக்களை வெளியேறுமாறு புலிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையும், இந்தக் கோரிக்கையை ஏற்று அவசர அவசரமாக மக்கள் சாரிசாரியாக வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சிப் பகுதிகளை நோக்கி நகர்ந்ததையும், அந்த நகர்வின்போதும் அதைத் தொடர்ந்த நாட்களிலும் அவர்கள் அனுபவித்த துயரங்களும் மறக்கக் கூடியவை அல்ல.

வரலாற்றிலேயே முதற்தடவையாக மிகப் பாரிய அளவிலான இடப்பெயர்வை எதிர் கொண்டனர். வலிகாமம் மக்கள் அப்போது அவர்கள் வெளியேறத் தயங்கிய போதெல்லாம், அவர்களை பலவந்தமாக வெளியேற்றும் முயற்சிகள் புலி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்வு புலிகளின் அரசியல் வரலாற்றில் அவர்களுக்கு மாபெரும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்திய ஒரு நிகழ்வாகவும் இருந்தது. புலிகளுக்கு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்திய இன்னொரு நிகழ்வு வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றியதாகும். இதனால் ஏற்பட்ட நெருக்கடியில் இருந்து அவர்கள் இன்னமும் முழுதாக விடுபடவில்லை. இற்றைவரை அதன் காரணமாக எழும் கேள்விகட்கு பதில் சொல்லுமாறு அவர்களை நிர்ப்பந்திக்கும் அழுத்தங்கள் எழுந்த வண்ணமே இருக்கின்றன.

இந்த நெருக்கடியைத் தெரிந்து கொண்டே திரும்பவும் அவர்கள் 95 இல் வலிகாமம் மக்களை வெளியேறுமாறு கோரினார்கள். முதலாவது முஸ்லிம் மக்களை வெளியேறுமாறு அவர்கள் கோரியதற்கும் வலிகாமம் மக்களை வெளியேறுமாறு கோரியதற்கும் அடிப்படையில் ஒரு முக்கிய வித்தியாசம் இருந்தது. முதலாவது வெளியேற்றம் சந்தேகத்தின் அடிப்படையில், ஒரு சமூகக் இனக் குழுமத்தையே குற்றவாளியாகக் கண்டு வெளியேற்றியது. இரண்டாது வெளியேற்றம், இலங்கை அரசாங்கத்தின் படையெடுப்பைக் காரணம் காட்டிச் செய்யப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் படையெடுப்பு மாபெரும் அழிவுகளை கொண்டுவரக் கூடும் என்ற காரணத்தினால் தான் அவர்களை வெளியேறும்படி கூறினோம் என்று பிற்பாடு புலிகளே அறிவித்திருந்தார்கள்.

ஆனால், என்னதான் புலிகள் இந்த மக்களை, அவர்களின் நலனுக்காகவே வெளியேறுமாறு கோரியிருந்தாலும் கூட, அந்த வெளியேற்றத்தினால் ஏற்பட்ட துன்பங்கள் மக்களுக்கு புலிகளைப் பாராட்டும் மனோநிலையைத் தரவில்லை. மாறாக, தம்மைப் பாதுகாப்பதாக பலமுறையும் கூறிய புலிகள், இராணுவம் வந்து குவியும் போது அதனை எதிர்த்தல் போரிடுவதற்குப் பதில், அதனிடமிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கும் பதில், தம்மையே வெளியேறுமாறு கோருகிறார்களே என்ற எரிச்சல் உணர்வு தான் வெளிப்பட்டது. அவர்கள் வெளியேறி சென்ற இடமெல்லாம் பல்வேறு நகர வேதனைகளையும் அனுபவித்தார்கள். வயோதிபர்கள், நோயாளிகள் குழந்தைகள் என்று எல்லோருமாக, மிக அடிப்படையான பொருட்களுடன் மட்டுமே வெளியேறியதால், அவர்களால் நீண்ட நாட்களுக்கு தாக்குப்பிடிக்க முடியவில்லை. வெட்ட வெளியிலேயே மழையிலும் வெயிலிலும் குளித்தபடி தமது நாட்களை ஓட்ட அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இதைவிட அவர்கள் சுமக்க வேண்டியிருந்த சுமைகள் அதிகம். இத்தனையும் சுமந்து அவர்கள் இடம் பெயர் வாழ்வை நடாத்திய வேளை, யாழ்நகர் பறிபோனது. இலங்கையின் சிங்கள கொடி அங்கு ஏற்றப்பட்டது. அவர்களது வீடு வாசல்களிலிருந்த உடமைகள் சூறையாடப்பட்டன. பல வீடுகளின் கூரைகளையும் கதவுகளையும் கூட பிறர் கழற்றிச் செல்வதை கேள்விப்பட்டார்கள்.

இடம் பெயர்ந்தவர்கள், தாம் தமது சொந்த வீடுகளில் இருந்த கழற்றபட்ட கூரைகட்கும் மரங்கட்கும் பணம் கொடுத்து வாங்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகினர்.

இந்தத் துயரங்கள், ஒரு யுத்தத்தின் நேரடி பாதிப்புக்களை விடப் பயங்கரமானவை. அதுவும் குடாநாடு போன்ற சிறுகச் சிறுக ஒரு குருவி போல சேமித்து வளர்ந்த ஒரு சமூகத்திற்கு இது இலேசான துயரம் அல்ல.

ஆனாலும் அது நடந்தது. இராணுவம் கைப்பற்றிய யாழ்ப்பாணத்திற்கு திருப்பி வருமாறு கேட்டதும் பெருமளவிற்கு மக்கள் திரும்பிப் போக விரும்பினார்கள். இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாவதை விட இவ்வாறு இடம் பெயர்ந்த பிரதேசங்களில் வாழ்வது கொடுமையானது என்பது அவர்கள் எண்ணமாக இருந்தது. எம்மைக் கொன்றாலும் பரவாயில்லை. இனிநாம் வெளியேற மாட்டோம் என்று அவர்கள் கூறினார்கள்.

இவையொன்றும் புலிகளுக்குத் தெரியாதது அல்ல.

என்னதான் அரசியல் இராணுவக் காரணங்கள் கூறப்பட்டாலும் அந்த அடிப்படையில் அவை எவ்வளவு தான் நியாயமாகத் தெரிந்தாலும், ஒரு மக்கள் கூட்டத்தை அதன் வாழ்விடத்தில் இருந்து வேரோடு பிடுங்கியெறிவது போல வெளியேற்றுவதை விட கொடுமையான நடவடிக்கையாக வேறெதுவும் இருக்க முடியாது.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒரு தனிநாடு அவசியம் என்று கேட்டு போரிட முன்வந்தது கூட அவர்கள் காலங்காலமாக வாழ்ந்து வந்த பாரம்பரிய பிரதேசங்களில் தாம் கௌரவத்துடன் வாழ அனுமதி மறுக்கப்பட்டதாலேயே. அவர்களது இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படும் விதத்தில் அமைந்த அரசியல் நிகழ்வுகள் அவர்களை தனிநாடு நோக்கி நகரவைத்தது. அதே தனிநாட்டுக்காக போராடும் ஒரு இயக்கம் அவர்களது இருப்புக்கு குந்தகம் விளைவிக்கும் விதத்திலான ஒரு முடிவை எடுத்தால் அதை எப்படி ஜீரணிக்க முடியும்? வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒரு நாடோடிச் சமூகமாக இருந்தால் மட்டுமே இத்தகைய ஒரு முடிவுக்கு அவர்கள் ஒப்புக்கொள்ள முடியும்.

ஒரு புறத்தில் இருப்புக்கான நியாயம் கோரிப் போராடவும் மறுபுறம் தமது இருப்பையே சிதைக்கும் நகர்வுகட்கு உள்ளாகவும் ஒரு சமூகக் குழுமத்திற்கு நிச்சயம் முடியாது.

ஒரு கெரில்லா இயக்கம் தனது அரசியல் இராணுவத் திட்டங்களுக்கேற்ப இவ்வாறான நிலைகொள்ளல், நகர்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொளவதுண்டு. ஆனால் மக்கள் அல்ல.

புலிகள் இந்த இடத்தில் தம்மையே மக்களாக பார்க்கும் பெரும் தவறை இழைத்தார்கள். மக்கள் கடல், கெரில்லாக்க்ள் அதில் வாழும் மீன்கள் என்பதை மறந்தார்கள். மக்களையும் மீன்களாக அவர்கள் நினைத்தார்கள்.

அடுத்து வந்த யுத்த சூழலும் அதையடுத்து உருவான நிலமைகளும் பல புதிய மாற்றங்களை உருவாக்கின.

இராணுவ ரீதியில் புலிகள் இழந்தவைக்கு பதிலீடு செய்யும் விதத்தில் பல வெற்றிகளையும் பெற்றார்கள். அண்மையில் அவர்கள் பெற்ற கிளிநொச்சி அதற்கு ஓர் உதாரணம்.

இந்த வெற்றிகள் அவர்களது தவறுகளை மறந்திருக்கும் மக்களை மீண்டும் வெளியேற்றும் செயலுக்கு ஈடுகொடுக்க கூடியவை என்று புலிகள் நினைத்தால் அது மாபெரும் தவறாகும்.

மக்களை வெளியேற்றும் நடவடிக்கையில் புலிகள் வெற்றி பெறலாம். ஆனால் அதன் விளைவுகளில் இருந்தும் அவை ஏற்படுத்தப்போகும் அரசியல் நெருக்கடிகளில் இருந்தும் அவர்கள் வெற்றி பெற முடியாது.

இன்று தென்மராட்சிப் பகுதியில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளுக்கு காரணம் புலிகள் தான் என்று நம்பப்படுகிறது. இந்த வெளியேற்ற உத்தரவிற்கு புலிகளிடம் என்னதான் இராணுவ அரசியல் காரணங்கள் இருந்த போதும் அது நியாயமானதாக இருக்க முடியாது. மக்களை யுத்தத்தின் சக்திகளாக கருதாமல் பகடைக்காய்களாக கருதும் ஒரு செயல் அது. இது புலிகளையும் கூட இன்னும் மோசமாக பாதிக்கக் கூடிய ஒரு நடவடிக்கையாகும்.

மக்கள் என்ற கடல் இருக்கும் வரை தான் கெரில்லா என்ற மீனுக்குப் பாதுகாப்பு.

அரசியல் தவறுகள், இராணுவததவறுகளைப் போல உடனடி விளைவுகளைத் தருபவை அல்ல. இன்னொரு வெற்றி மூலம் இலகுவில் சமப்படுத்தி விடக்கூடியவையும் அல்ல. அவை ஸ்தாபனத்தின் உயிர் நாடியையே உலுக்கி விடக்கூடியவை.

வரலாற்றில் இதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

இவை புலிகளுக்குப் புரிந்தால் சரி!

அரசியல் தவறுகள், இராணுவத்தவறுகளைப் போல உடனடி விளைவுகளைத் தருபவை அல்ல. இன்னொரு வெற்றி மூலம் இலகுவில் சமப்படுத்தி விடக்கூடியவையும் அல்ல. அவை ஸ்தாபனத்தின் உயிர் நாடியையே உலுக்கி விடக்கூடியவை.

நன்றி - நூலகத்திட்டம்



# "நமது தலைவிதி"

ஸிராஜ் மஷ்ஹூர்

முஸ்லிம் தலைவர்கள் ஐக்கியப்பட வேண்டும் என்ற கோஷத்தை பழைய கிழட்டு நரிகள் மீண்டும் எழுப்புகின்றன. இந்த

## எழுப்பப்படாத கேள்விகளும் அளிக்கப்படாத பதில்களும்...

ஐக்கியம் பற்றிய கோஷங்களை இத்தோடு நூற்றுப் பதினோராவது தடவையாகக் கேட்கிறோம். தாம் பதவியிலிருக்கும் போது சமூகத்துக்காக எதையும் பெரிதாகச் செய்து கிழிக்காத ஏ.சி.எஸ். ஹமீட் போன்ற ஐ.தே.க. தலைவர்கள், இப்போது சமூக நலனுக்காக முஸ்லிம் தலைவர்கள் ஒற்றுமைப்படுவது பற்றிப் பேசும்போது (கவனிக்க: அதுவும் கட்சி பேதங்களை மறந்துவிட்டு) நமக்கு கொடுப்புக்குள் சிரிப்பு வருகிறது. இந்த ஒற்றுமைக் கோஷங்களைக் கேட்டு கேட்டுப் புளித்து விட்டது. இவர்கள் இவ்வாறு கிச்சுக் கிச்சு மூட்டும்போது, நமக்குச் சிரிப்பு வருவதில்லை என்பது தான் மிகப் பெரிய வேடிக்கை.

இப்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.உதுமாலெப்பை, றிஸ்வி சின்னலெப்பை போன்றோர் ஸ்ரீ.ல.மு.காவில் சேரப் போகிறார்களாம். அதுவும் முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காகத்தானாம். இதை அப்படியே நம்புமாறு நமக்குக் காது குத்துகிறார்கள். திருவாளர் பொதுஜனம் அவர்களே இதை நம்புக: பின் நம்பிக் கெடுக. அதுதானே உமது தொழில். இவ்வளவு நாளும் பேரினவாதக் கட்சியான ஐ.தே.கவிற்குத் துதிபாடிவிட்டு, இப்போது காலம் கடந்து ஞானம் பேசுகிறார்கள், இவர்களது கட்சியிலுள்ள ஏ.சி.எஸ் ஹமீட், எம்.எச். முஹம்மத், ஏ.எச்.எம். அஸ்வர் உள்ளிட்ட எல்லோருமே தலைமைக்குத் தாளம் போட்டுப் பழகியவர்கள் தான். (முஸ்லிம் சமூக நலன் பற்றி இவர்கள் என்ன பேசுவது என்று திருவாளர் பொதுஜனம் அவர்கள் எண்ணினால் அது எனது தவறு அல்ல.)

மறுபுறம், பௌஸி அன் கோவின் வீரதீர பராக்கிரமங்களும் சாகசங்களும் நமது கண்ணைப் பறிக்கின்றன. அவர்கள் ஐ.தே.க. தலைமைக்குத் தாளம் என்றால், இவர்கள் சுதந்திரக் கட்சிக்குத் தலைமைக்குத் தாளம். இந்த பௌஸி அன் கோவிற்கும் முஸ்லிம் சமூகம் பற்றி ஒருபோதும் அக்கறையில்லை. ஆனால், அஷ்ரஃப்பையும், ஸ்ரீ.ல.மு.காவையும் எதிர்ப்பதில் மட்டும் அவர்களுக்கு ஒரு அலாதியான ஆசை. அடிக்கடி முஸ்லிம்களின் இரட்சகர்கள் தாமே என்று முழங்குவர். அலுப்பு வந்தால் இடைக்கிடை தென்கிழக்கு அலகுக்கு எதிராக ஒரு அறிக்கையும் விட்டுவிட்டு பின் ஒரு மூலையில் அமர்ந்து விடுவர். இதற்கும் மேல் அவர்களிடம் ஏதாவது எதிர்பார்ப்போம் எனில், அது நமது தவறு என்பதைப் புரிந்து கொள்ளக் கடவீர்.

பத்திரிகை அறிக்கை என்றதுமே உடனுக்குடன் ஞாபகம் வரும் ஸ்ரீ.ல.மு.காவின் மூத்த துணைத் தலைவர் மருதூர்க்கனி அவர்களைப் பற்றியும் இங்கு சொன்னால் தான் மனம் ஆறும். அடிக்கடி இவர் விடும் பத்திரிகை அறிக்கைகளால் தான் கட்சியில் மூத்த துணைத் தலைவர் ஒருவர் இருக்கிறார் என்பதை நாம் ஞாபகப்படுத்திப் புளகிக்க முடிகிறது. வாழ்க பத்திரிகை அறிக்கைகள் பல அரசியல்வாதிகள் பத்திரிகை அறிக்கைகளால் தான் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஐ.தே.க. முஸ்லிம் தலைவர்கள் கட்சிக்குள்ளேயே அம்பாறை மாவட்ட முஸ்லிம்களது நியாயமான அரசியல் பிரதிநிதித்துவத்துக்காகப் போராடிச் சலித்து விட்டனராம். ரணிலை இனியும் நம்ப முடியாதாம். இனி ஸ்ரீ.ல.மு.காதான் தஞ்சமாம். ஆதலால் முஸ்லிம்கள் இனிமேல் ஸ்ரீ.ல.மு.காவுக்குத் தான் பூரண ஆதரவளிக்க வேண்டுமாம். இவ்வாறான வேடிக்கை வினோதம் (மற்றும் சண்டைக் காட்சிகள் நிறைந்த) புத்தம் புதிய ஈஸ்ட்மன் கலர்ப்படங்கள் மிக விரைவில் நமது வெள்ளித் திரைகளில் வெளிவர உள்ளன. பார்க்கத் தவறாதீர்கள். (குறிப்பு: அம்பாறை மாவட்டத்தின் - குறிப்பாக பொத்துவில் தொகுதி முஸ்லிம்கள் எவ்வாறு அரசியல் அனாதைகளாக்கப்பட்டனர் என்பது பற்றிய விரிவான தகவல்களுக்கு பார்க்க: சரிநிகர்: இதழ் 145 ஏப். 30 - மே 13 1998)

"ஒரேயொரு ஊரிலே ஒரேயொரு ராசாவாம்..." என்று தொடங்கும் அரச கதைகள் நமது தாத்தாமார், பாட்டிமார் காலத்திலிருந்து தொடர்ந்தும் வழக்கிலிருந்து வருகிறது. அதுபோல, தலைமுறைகள் பல மாறினாலும் அது இங்கே வெறும் தலைகளின் மாற்றமாகவே இருந்து வருகிறது.

இங்கே எதுவும் மாறிவிடவில்லை. அரங்கேற்றப்படும் நாடகம் ஒன்றே. நடிகர்கள் மட்டுமே மாறிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வேண்டும்போது ஐ.தே.க., ஸ்ரீ.ல.மு.கா., பொ,ஐ.மு... என வேண்டிய கோலம் பூண்டு நம்மை வியப்பில் ஆழ்த்துவார்கள். மேடைகளிலே பேசும் வீர வசனங்களால் நம்மை அசத்துவார்கள். இது போதாதா திருவாளர் பொதுஜனத்திற்கு அவ்வளவு தான் ஆள் அம்பேல். ஐஸ் கட்டி போல் திருவாளர் பொதுஜனத்தின் தலை விறைத்துவிடும். இனி என்ன? அடுத்த தேர்தலிலே புள்ளடி போடுவது தானே அவரது தலையாய பணி. எதைச் செய்யாவிட்டாலும் அதை மட்டும் அவர் செவ்வனே செய்து விடுவார். இப்படி ஒரு கூட்டம் இருக்கையில் அரசியல்வாதிகளுக்கு ஏது குறை? அவர்கள் காட்டில் மழைதான் போங்கள். "'எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?" என்ற தத்துவப் பாடல் வரிகள் வேறு இவ்விடத்தில் ஞாபகம் வந்து தொலைக்கிறது.

இன்னொரு கூட்டம் தயாரத்ன என்னும் ·ஒரு தீவிர சிங்கள இனவாதச் சிந்தனையுடைய ஐ.தே.க. முன்னாள் அமைச்சரின் பின்னால் அலைகிறது. இவர்கள் முஸ்லிம்களாய் இருப்பது வெட்கக் கேடு என்று எண்ணத் தோன்றுகிறதா? எனில், அவ்வாறு எண்ணுவது தவறு. ஏனெனில், "வெட்கக் கேடு"' என்பது அரசியல் அகராதிக்குள் அகப்படாத வார்த்தை.

இந்த தயாரத்ன, அம்பாறை மாவட்டத்தை சிங்கள மயப்படுத்தும் பாரிய சதித் திட்டத்தின் சூத்திரதாரி.



அம்பாறை மாவட்ட ஐ.தே.க. முக்கியஸ்தர்கள், ஐ.தே. க.விலிருந்து விலகி, முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து கொள்வது தொடர்பாக அக்கரைப்பற்றில் நடைபெற்ற கருத்தரங்கின் போது, முன்னாள் பொத்துவில் தொகுதி பா.உறுப்பினர் எம்.ஐ. உதுமாலெப்பை உரையாற்றுகிறார்.

இன்றும் கூட அம்பாறை நகரத்தில் முஸ்லிம்கள் கடை வைக்க முடியாது என்று எழுதப்படாத சட்டமொன்று உள்ளது. அம்பாறையில் எந்த முஸ்லிமும் நிலம் வாங்க முடியாது. சிங்களவர்கள், சிங்களவர்களுக்கு மட்டுமே நிலத்தை விற்க முடியும். அவ்வாறு சிங்களவருக்கு விற்க முடியாது போனால், இதற்கென்று உள்ள குழுவினருக்கு மட்டுமே விற்க முடியும் என்று இன்னொரு எழுதப்படாத சட்டமும் உள்ளது. இதற்கெல்லாம் பின்னணியாக தயாரத்னவே உள்ளார் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு முஸ்லிம்களுக்கு எதிராக தீவிரமாகச் செயற்படும் இந்த தயாரத்னவுக்கு, அஷ்ரஃப்பையோ அல்லது ஸ்ரீ.ல.மு.காவையோ கண்ணில் கூட காட்ட முடியாது. அப்பேர்ப்பட்ட ஒருவருக்கு வக்காலத்து வாங்கும் ஐ.தே.க. முஸ்லிம் தொண்டரடிப் பொடிகள் பற்றி யாரிடம் சொல்லி அழுவது?

இந்த லட்சணத்தில் இருக்கும் ஐ.தே.கவிடம் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் கோரி அப்போதைய கட்சித் தவிசாளர் ஏ.சி.எஸ். ஹமீட் குரலெழுப்பிய போதிலும், அவரது தவிசாளர் பதவியைத் துறக்க வேண்டி வந்தது தான் கை மேல் கண்ட பலன். திருவாளர் ரணில் அவர்களோ, தனக்கு வேண்டிய பத்திரிகையாளர் தினேஷ் தொடங்கொடவை தேசியப் பட்டியல் எம்.பியாக நியமித்து, ஐ.தே.க. முஸ்லிம் தலைவர்களது முகத்தில் கரி பூசினார். அப்போது எதுவு பேசாதிருந்த இந்த ஐ.தே.க முன்னாள் எம்.பிக்கள் இப்போது அம்பாறை மாவட்ட முஸ்லிம்களது நலனுக்காக கட்சியிலிருந்து விலகப் போகிறார்களாம். இது என்ன வேடிக்கை?

ஆயினும், நாம் இது பற்றி எதுவும் பேசக்கூடாது. ஏனெனில், இந்த அரசியல் நாடகத்தில் நாம் வெறும் பார்வையாளர்கள் மட்டுமே. ஸ்ரீ.ல.மு.காவில் இணைய விரும்போரில், கட்சி தாவலே கைவந்த கலையாக இருக்கும் முன்னாள் நிதியமைச்சர் எம்.எம். முஸ்தபாவும் அடக்கமாம். (உங்களுக்குச் சிரிப்பு வந்தால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல.) பார்க்கும் இடமெல்லாம் பதவி ஆசையேயன்றி வேறொன்றறியேன் பராபரமே!

இந்த ஐ.தே.க அரசியல்வாதிகள் இப்போது சமூகநலனுக்காகச் சேரப்போவது எந்தக் கட்சியில் என்பது சொல்லாமலேயே தெரிந்த விடயம். சமூக நலன் என்றதுமே உடனடியாக உங்களுக்கு ஸ்ரீ.ல.மு.கா. ஞாபகம் வராவிட்டால் முஸ்லிம் அரசியல் அரிச்சுவடி அறவே தெரியாத சுத்த சூன்யம் நீங்கள்.

ஸ்ரீ.ல.மு.காப் பற்றி இங்கு விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர்களைப் பற்றி நிறையவே பேசிவிட்டோம். இந்த ஐ.தே.க அணியை அஷ்ரஃப் உடனடியாக ஸ்ரீ.ல.மு.காவுக்குள் உள்வாங்குவார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எதிரணியில் உள்ளவர்களை வாங்குவதில் இரண்டு மடங்கு இலாபம் உள்ளது. ஒன்று இனிமேல் அவர்கள் எதிராகச் செயற்பட மாட்டார்கள். மற்றையது, கட்சிப் பிரச்சாரத்திற்காக அவர்களைப் பயன்படுத்தலாம். எனவே, கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஸ்ரீ.ல.மு.காவுக்குத் தான் இலாபம். முஸ்லிம் சமூகத்துக்கு? (மூச்! தயவு செய்து இங்கு முஸ்லிம் சமூகம் பற்றிப் பேச வேண்டாம்.) இப்படித்தான் நடுநிலையாக எழுதிக் கொண்டிருந்த ஒரு பத்திரிகையாளரையும் அஷ்ரஃப் வாங்கி, இப்போது கட்சிப் பத்திரிகைக்கு ஆசிரியராக்கியிருக்கிறார். இதுவன்றோ அரசியல் ஞானம்?

இது இவ்வாறிருக்க, முன்னாள் ஸ்ரீ.ல.மு.கா. தவிசாளரும், தற்போதைய முஸ்லிம் கட்சித் தலைவருமான சேகு இஸ்ஸதீன் மீண்டும் ஸ்ரீ.ல.மு.காவில் இணையப் போவதாகக் கதைகள் அடிபடுகின்றன. வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுவது ஞாபகத்திற்கு வரவில்லையா?

கடைசியாக, திருவாளர் பொதுஜனம் அவர்களே! நீவிர் கனவுகளிலேயே மூழ்கிக் கிடக்கக் கடவது. ஆறு வருடங்களுக்கு ஒரு முறை தேர்தல். அதில் புள்ளடி போடுக. மீண்டும் தேர்தல்.... புள்ளடி... என்ன அற்புதமான மனிதர் நீங்கள்?

நமது தலைவர்கள் இப்படி இருப்பது தான் நமது தலைவிதி. அதை மாற்றுவது பற்றிய சிந்தனையே நமக்கு இல்லையெனில், அதுதான் நமது தலைவிதி. இல்லை மாற்றியே ஆக வேண்டும் என்று புறப்படுவோமெனில் அதுவும் நமது தலைவிதியே. இதில் எது நமது தலைவிதி திருவாளர் பொதுஜனம் அவர்களே!

இறுதியாக கெமரூன் நாட்டைச் சேர்ந்த கவிஞன் இம்பெல்லா சோன்னே டிம்போக்காவின் 'நமது தலைவிதி' என்ற கவிதையை எடுத்தாள்வது மிகப் பொருத்தமானது. ஏனெனில், இது ஆபிரிக்க மக்களது தலைவிதி மட்டுமல்ல, நமது தலைவிதியும் கூட.

### நமது தலைவிதி

நாமனைவரும்
நாளைக்காக உழைக்கும்
நவீனர்கள்
வரலாற்றின் வெளிப்படையான
முடியரசுகளுக்காக
வெட்கி விலகுபவர்கள்
தூய்மையான கொடியின் கீழான
-உலகில்
புதிய நகரங்களை நிர்மாணிக்க
முயல்பவர்கள்,
எனச் சொல்வதெல்லாம்
- முன்னேற்றமல்ல.

அனைத்தும் பொய்.
பிரச்சினைகள்
தீர்க்கப்படாமலேயே
-உள்ளன.

சடங்குகள் வெறுமனே
-அகழிகளுக்குள்
பதுங்கி விட்டன.
பலி கொடுத்த குருதி
சாக்கடைக் குழாய்களில் ஓடுகிறது.

முன்னர் வெளிப்படையாகச்
செய்யப்பட்டவை அனைத்தும்
இரகசியமாக இன்று
நிறைவேற்றப்படுகின்றன.

மொத்த மனித குலத்தையும் போல
வெளியே ஒழுங்கும்
உள்ளுக்குள் ஒழுங்கீனமுமாய்
மாறி வருகிறோம் நாம்.

மற்றவர்களின்
துயரங்களின் மீது
ஆண்டுகளை
அளந்து கொண்டு போகிறோம்.

நன்றி - நூலகத்திட்டம்



# கலாசாரத்தையும் பாலியலையும் விளங்கிக் கொள்வது எப்படி?

**லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினரும், முன்னைநாள் நவ சமசமாஜக் கட்சியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார "பாராதீசய" எனும் சிங்கள மாற்று சஞ்சிகைக்கு அளித்த பேட்டியின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது. பாலியல் விவகாரங்கள் குறித்து அதிக சர்ச்சைகளைக் கிளப்பி பெரும் விவாதங்களை நடத்தி வரும் இச் சஞ்சிகையின் ஒக்டோபர் இதழில் இது வெளியானது.**



*இளைஞர்களை தரம் பிரிக்க முடியுமா?*

ஆம். சமூகத்திலுள்ள இளைஞர்களை பல தரப்பட்ட பகுப்புகளுக்கூடாக தரம் பிரிக்க முடியும்.

*இன்று மூலை முடுக்கெங்கும் நிலவுகின்ற சமூக கலாசாரப் போக்கில் பல்வேறு சமூக. பொருளாதார பின்புலன்கள் காரணமாக இருந்தாலும் கூட அது குறித்த இளைஞர்களின் ஈடுபாடு பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?*

சமூக ஆதிக்க சிந்தனைகளின் விளைவை தனதாக்கிக் கொண்டு இயங்கி வருகின்ற தொடர்பூடகங்களின் தாக்கங்களினால் ஆதிக்க நுகர்வுக் கலாசாரங்கள் விரவியுள்ளமையை நாம் இனங்காண முடியும். இரண்டாம்தர கலாசார செயற்பாடுகள் அந்த ஆதிக்க கலாசாரமே. அரச தொடர்பு சாதனங்களுக்கூடாகவும் வெகுஜனப்படுத்தப்படுவது இந்த ஆதிக்க கலாசாரமே. இன்றைய பெரும்போக்குக் கலாசாரத்தை மறுதலித்து அதிலிருந்து எதிர்கலாசார போக்கொன்றும் இன்று வளர்ந்து வருவதையும் நாம் அவதானிக்க முடிகிறது.

*இவ்வாறு புதிய கலாசார நடத்தைகளின் மூலம் பாரம்பரிய கலாசாரத்துக்கு பெருத்த அடிவிழும் என்று நினைக்கிறீர்களா?*

இல்லை மாற்றம் என்பது எல்லாவற்றிலும் நிகழ்கிறது. மாற்றமுற்று வருகின்ற பூகோளமயமயமாகிவரும் கலாசார பண்பாட்டு மரபுகள் சமூகம் என்கின்ற ரீதியில் எந்த இடத்தில் ஒருங்கிணைவது என்பது குறித்து விவாதங்கள் இருக்கின்றன. பழையன அப்படியே நிலவ வேண்டும் என்ற நம்பிக்கையை தொடர்பவர்கள் நிச்சயமாக பிற்போக்கானவர்களாகவே இருப்பர். அதே வேளை உலக ஏகாபத்திய சக்திகள் உலகம் முழுவதும் பரப்பி வரும் கலாசாரங்களுடன் எங்களின் உரிமைக்குரிய கலாசாரத்தினைப் போட்டு குழப்பிக் கொள்ளக்கூடாது. ஏகாதிபத்திய கலாசாரத்தை தழுவுவது என்பது அடிமைப்படுவதற்கு ஒப்பாகும். அதன் மூலம் எம்மத்தியில் ஒருவித அடிமையுணர்வு தான் மிஞ்சும். அது எமது வளர்ச்சிக்கு தடை. எங்களின் கலாசார இறைமைக்குள் தான் நாம் எதனையும் உள்வாங்க முனைய வேண்டும்.

*ஆனாலும் இளைஞர்களைப் பொறுத்தவரை ஆதிக்க தொடர்பூடகங்களினால் பாதிப்புற்று அதனையே விரும்புகிறார்களே?*

அதனை விரும்பவில்லை. அதற்குப் பலியாகிறார்கள்.

*அதாவது அந்த இளைஞர்களை நீங்கள் நிராகரிக்கிறீர்கள் என்ற அர்த்தமா?*

இல்லை... இல்லை.... நுகர்வுக் கலாசாரத்தின் பிடியில் சிக்காதிருக்கத் தேவையான புதிய சிந்தனைகளை எப்படி சமூகத்தில் பரப்புவது என்பது குறித்து நாங்கள் ஆராய வேண்டும். நாங்கள் இது குறித்து தீவிரமாக கருத்தாட வேண்டும். அதன் மூலம் இந்த நுகர்கலாசாரவாதத்தை எதிர்கொண்டு வெல்லலாமென நான் நம்புகிறேன்.

*நிலவுகின்ற கலாசாரப் பண்புகளை ஆதிக்க கலாசார பண்புகளாக நீங்கள் கருதுகிறீர்களாயின் உங்களிடம் ஒரு மாற்று கலாசார மாதிரி (Model) உள்ளதா?*

இல்லை. மாதிரி (Model) என்று ஒன்றை என்னால் கூற இயலாது. எங்களிடமுள்ளது எங்களின் சிங்களத்தனம். அந்த சிங்களத்தனத்துக்கு ஒரு கலாசார தனித்துவம் உண்டு. அதே வேளை உலக வளர்ச்சிப் போக்கை எதிர்கொள்ளாமல் நாங்கள் இயங்குதளத்தை சவால் கொள்ள முடியாது. பல்வேறு கலாசாரப் பண்புகள் முட்டி மோதுகின்ற உலகில் தேசங்களின் தனித்துவங்களைப் பாதுகாக்கக் கூடிய உலக கலாசாரமொன்றை கட்டியெழுப்புவதே இன்றைய சூழலில் உகந்தது.

*இளைஞர்களின் பாலியல் போக்கு குறித்து கருத்து கூறுவீர்களா?*

நான் அண்மைக்காலமாக இது குறித்து சிந்தித்து வந்திருக்கிறேன். எனது டயரியில் இது குறித்த குறிப்பொன்றையும் எழுதியிருக்கிறேன். சகல பாலாருக்கும் 12 வயதிலேயே பாலியல் கல்வியூட்டிவிட வேண்டும். 15 வயதிலேயே அவர்களுக்கு பாலியல் ஈடுபாடு கொள்ளுகின்ற தேவையேற்பட்டு விடுகின்றது. அதற்கென்று ஒரு புரிதல் அவசியம். ஆனால் எமது சமூகத்தில் அது பெரும் குறறம். விவாகமாகும் வரை அதை செய்யாதிருக்க வேண்டும் என விதித்திருக்கிறது. இது மிகவும் பிழையான முறை. விவாகம் கொள்ளாமல் பாலியலை 15 வயதில் அனுபவிப்பதை தடுக்கும் முறையை வீழ்த்துகின்ற சமூக அமைப்பொன்று உருவாவது அவசியமானது. விவாகம் குறித்து அவர்கள் தமக்குள் பின்னர் தீர்மானித்துக் கொள்ளலாம். பாலியல் ரசனையை அனுபவிப்பது குறித்த ஈடுபாட்டையும், ஆர்வத்தையும் வெளிப்படுத்துவது என்பது இன்று பெருங்குற்றத்துக்கும், தயக்கத்துக்கும் உரிய ஒன்றாகவே உள்ளது. ஆனால் இவை குறித்த சரியான புரிதல்களை எட்ட வகை செய்வது மிகவும் அவசியம். இவற்றுக்கு எல்லாம் மேல் பாலியல் குறித்து எமது சமூகத்தில் நிலவி வரும் சமூக ஐதீகம் தகரவேண்டும்.

*பாலியலை இயற்கையான ஒன்றாகவா நீங்கள் காணுகிறீர்கள்?*

ஆம், அது நிச்சயமாக இயற்கையானது தான். இயல்பானது தான்.

*அது முன்னைய சமூக அமைப்பினால் அனுப்பப்பட்ட ஒன்றென்றும். எங்களால் ஏற்றுக்கொள்ள வேண்டியேற்பட்ட ஒன்றென்றும் கூறினால்...?*

அது எப்படி என்பது குறித்து நான் கூறமாட்டேன். நான் என் அனுபவங்களுடன் பேசுகிறேன்.

*பாலியலில் பல்வேறு முறையியல்கள் நிலவுகின்றன. ஒருபால் உறவு குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

குறிப்பிட்ட சிலர் மத்தியில் நிலவிக் கொண்டிருக்கிற ஒரு பாலியல் இரசனை வகை அது.

*அதனை ஏற்பது ஏற்காதது குறித்த உங்கள் கருத்தை கூறுங்களேன்?*

இல்லை. இல்லை.. அது குறைந்த அளவிலான நடைமுறை வகை. ஆண் பெண் பாலுறவு பொதுவான ஒன்றாக இருக்கின்றது. எவ்வாறிருந்த போதும் ஒருபாலுறவை அவமானப்படுத்த முனையக் கூடாது.

*நீங்கள் முன்னர் கூறியவற்றை மறுதலிக்கின்ற ஒன்றாக இது ஆகிறதல்லவா?*

எங்களின் காமசூத்திரமல்லவா எங்கள் கலாசாரத்துக்கு ஆரம்பம். அதிலுள்ள புராணக்கதைகளிலும் இவைபற்றி உண்டு. அவற்றை புரிந்துகொள்ளாமல் எமது கலாசாரத்தையும் பாலியலையும் விளங்கிக் கொள்ள முடியாது.

—19

# லயன் எயார்: துலங்காதிருக்கும் மர்மம்!

*கடந்த மாதம் வடபகுதியில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடந்தேறின. இரண்டுமே அப்பகுதியில் நடந்து கொண்டிருக்கின்ற தொடர்ச்சியான யுத்தத்தின் பாதிப்புகளையே பிரதிபலித்துள்ளன.*

*முதலாவது சம்பவம் கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சி இராணுவ தளத்தின் மீது புலிகள் தொடுத்த பாரிய அதிரடித் தாக்குதல். இரண்டாவது 29 ஆம் திகதி யாழ். பலாலி விமானத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட லயன் எயார் விமானம் திடீரென வானில் காணாமல் போன மர்மமான சம்பவம்.*

*முதலாவது சம்பவம் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் யுத்த முனைப்பு மிக்க பிரச்சினை தீர்வு முயற்சியைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. அத்துடன், விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்று சொல்லப்படுகின்ற யுத்தத்தை வெற்றிகரமாக நடாத்துவதற்காக அமுல் செய்யப்பட்டுள்ள செய்தித் தணிக்கையை கேலிக் கூத்தாக்கி உள்ளது. கிளிநொச்சி மீதான புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட, காயமடைந்த இராணுவத்தினர் தொடர்பாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்ட முரண்பாடான தகவல்கள். அரசு மீது பொதுமக்கள் கொண்டிருக்க வேண்டிய நம்பகத்தன்மையைக் குலைப்பதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை விடுதலைப் புலிகளின் பேச்சாளர் என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் வர்ணிக்கக் கூடிய அளவிற்கு யுத்த நிலைமைகள் தொடர்பான விபரங்களை விலாவாரியாக எடுத்துரைத்து, அரச படைகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்த பட்டியல் ஒன்றையும் அவர் வெளியிட்டு பாராளுமன்றத்தைக் கலங்க வைத்தார்.*

*இரண்டாவது சம்பவமாகிய காணாமல் போன லயன் எயார் விமானம் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட வகையில் தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. அந்த விமானத்திற்கு என்ன நடந்தது, அதில் பிரயாணம் செய்த 55 பேரும் என்னவானார்கள் என்பது குறித்த விடயம் இன்னும் மர்மமாகவே உள்ளது.*

*இந்த விமானம் தலைகுப்புற கடலில் வீழ்ந்ததைத் தாங்கள் கண்டதாக, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நாச்சிக்குடா பகுதிக்கு அண்மையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மன்னார் மாவட்ட மீனவர்கள் சிலர் தெரிவித்ததாகத் தகவல்கள் வெளியாகின. அத்துடன் மன்னாரைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுரு ஒருவரும் அப்பகுதிக்கு விஜயம் செய்து காணாமல் போன விமானத்தில் பிரயாணம் செய்த இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் பற்றி அறிய முற்பட்டபோது, அப்பகுதியில் விமானம் விழுந்ததை உறுதிப்படுத்தக் கூடியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்ததாகவும், மிதந்து வந்த இரண்டு சடலங்கள், விமானப் பயணிகளுடையவையாக இருக்கலாம் என்றும் தகவல் தெரிவித்திருந்தார்.*

*இந்தத் தகவல்கள் எதுவுமே உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்பது முக்கியமான ஒரு விடயமான இன்னும் உள்ளது.*

*விமானத்தில் இருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல், அவர்களுடைய உறவினர்கள் தவித்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் அவர்கள் வேதனையில் வாடுகின்றார்கள். இந்தச் சூழ்நிலையில், கொழும்பில் இருந்து வெளிவருகின்ற தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற தினசரியாகிய வீரகேசரி கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை இந்த விமானம் பற்றியதாக ஒரு தலைப்புச் செய்தி வெளியிட்டது.*

*"இரணைதீவு கடலில் விமானம் விழுந்த இடத்தில் சுழியோடிகள் தேடுதல். விபத்துக்கான காரணத்தை கறுப்புப் பெட்டி காட்டிக் கொடுக்கும் என எதிர்பார்ப்பு" - என்று கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.*

*மன்னார் நாச்சிக்குடா இரணைதீவு கடலில் விமானம் விழுந்து நொறுங்கிய இடத்தில் கொழும்பில் இருந்து சென்ற ஆழ்கடல் சுழியோடிகள் பத்துப்பேர் தேடுதல் முயற்சிகளை நேற்று பிற்பகல் ஆரம்பித்துள்ளதாகவும் விமானத்தின் கறுப்புப் பெட்டியைத்தேடி எடுக்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் கொழும்புக்குக் கிடைக்கும் தகல்கள் தெரிவிக்கின்றன என்று அந்தச் செய்தி தொடங்கி எழுதப்பட்டிருக்கின்றது.*

*அடுத்த நாளும் முதல் பக்கத்தில் இந்த விடயம் தொடர்பாக செய்தி வெளியாகி இருந்தது.*

*"நடுக்கடலில் சுழியோடிகள் விமானத்தின் சிதைவுகளைத் தேடி தொடர்ந்து வேட்டை" என்று தலைப்பிட்டு, முதல் நாள் வெளியாகி இருந்த செய்தியை ஊர்ஜிதப்படுத்துவது போல தகவல் வெளியாகி இருந்தது.*

*விபத்து நடந்து இரண்டு வாரங்கள் ஆகிவிட்ட இன்றைய நிலையிலும், விமானம் சரியாக எவ்விடத்தில் விழுந்தது என்பதுபற்றி எவரும் உறுதிப்படுத்தி தகவல் தெரிவிக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், விமானம் விபத்துக்கு உள்ளாகியதா இல்லையா என்பது கூட இன்னும் தெளிவாகவில்லை.*

*இந்த விமானத்துக்கு நேர்ந்த கதி குறித்து பொறுப்பற்ற முறையில், வீரகேசரி ஏன் செய்தி வெளியிட்டது என்று தெரியவில்லை.*

*இதே வேளையில், காணமல் போயுள்ள விமானத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் கைங்கரியத்தில் லயன் எயார் நிறுவனமும் உளப்பூர்வமாக நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.*

*யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையே தமிழ்ப் பயணிகளை ஏற்றிச் சென்று லாபம் சம்பாதித்த அந்த நிறுவனம், காணாமல் போன விமானத்தில் இருந்த 48 பயணிகளைப் பற்றி எடுத்திருக்க வேண்டிய அக்கறையுடன் கூடிய செயற்பாட்டை மேற்கொள்ளவில்லை என்றே பயணிகளின் உறவினர்கள் கருதுகின்றார்கள்.*

*அதே போல அரசாங்கமும் இந்தப் பயணிகள் குறித்து எவ்விதமான அக்கறையும், கரிசனையும் காட்டவில்லை என்பதையும் அவர்களில் பலர் சுட்டிக்காட்டுகின்றார்கள்.*

*விமானம் விழுந்ததாகக் கருதப்படுகின்ற பிரதேசத்தைச் சேர்ந்த அரசாங்க அதிபரோ அல்லது அப்பகுதியைத் தமது கட்டுப்பாட்டினுள் வைத்துள்ள விடுதலைப் புலிகளோ கூட இது குறித்து எந்த விதமான அக்கறையும் காட்டவில்லை என்பதையும் அந்த உறவினர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் தமிழர்கள் தானே அவர்களுக்கு என்ன நேர்ந்தால் என்ன அது எமக்குச் சம்பந்தமில்லை என்று, இன்றைய யுத்த சூழ்நிலையின் மனப்பாங்கில் வாளாவிருக்கக் கூடும். ஆனால், இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியில் உள்ளவர்கள் ஏன் இது விடயத்தில் சம்பந்தமற்றவர்களைப் போல இருக்கின்றாரகள் என்பது தெரியவில்லை.*

*இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்குள் விமான விபத்து நடந்துள்ளதாகக் கருதப்படுவதனால், விடுதலைப் புலிகளின் அனுமதியின்றி அணுவும் அசையாது. ஆகவே லயன் எயார் நிறுவனம் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு அனுமதி பெறுவது போல, புலிகளுடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டு தேவையான ஏற்பாடுகள் குறித்துப் பேசினால், காணாமல் போனவர்களின் கதி பற்றி திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள வழிபிறக்கும். அத்துடன், அதற்குப் பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிக்கவும் இலகுவாக இருக்கும் அல்லவா?*

*—திரு*

நன்றி - நூலகத்திட்டம்



# பாடநூல்களிலிருந்தே ஆரம்பமாகும் இனவாதம் !

"இந்த ஆய்வில் பங்குபற்றியவர்களைப் பாராட்ட வேண்டும். அவர்களுக்கு சமாதானத்தை விரும்புபவர்கள் நன்றி செலுத்த வேண்டும். ஆய்வுக் குறிப்பு நூல் தமிழ் மொழியிலும் வெளிவர வேண்டும்.

இனரீதியான நிகழ்வுகள் ஏற்படும் போது எல்லாளன் துட்டகைமுனு வரலாற்றைத் தான் நம்மவர்கள் இழுப்பது வழக்கம். இதனைப் பாடநூலில் சேர்த்துக் கொள்வது அவசியம் தானா? அந்த யுத்தத்தின் போது துட்டகைமு னுவின் படையில் இருந்தவர்களில் தமிழர்களும் அடங்குவர். அங்கு இன ரீதியான சண்டை இடம் பெறவில்லை. இரண்டு மன்னர்களுக்கிடையில் அது நடைபெற்றது. அது மதரீதியான போர் ஆகும். வரலாறு என்னவாக இருந்தாலும் பல்லின மக்கள் வாழும் நாட்டில் பாடவிதானம் தயாரிக்கப்படும் போது இது விடயத்தில் கவனமெடுத்திருக்க வேண்டியது அவசியமானதாகும்! அக்காலத்திலிருந்து நாம் பார்க்கும் பொழுது பாடநூலைத் தயாரிப்பது யார்? யார் பாடசாலைகளில் பாடநூலைப் போதிப்பது? என்ற பிரச்சினைகள் எழுகின்றன. பாடநூலைத் தயாரிப்பவர்களுக்கு இன நல்லுறவு தொடர்பான பயிற்சி கிடைக்கிறதா என்பது முக்கியமானது.

எமது பாடசாலைகள் இனப்பிரச்சினையைத் தீவிரப்படுத்தும் நிறுவனங்களாகவே உள்ளன. சிங்கள தமிழ் என்ற "மொழிமூலமாகவே' பாடசாலைகளில் சிங்கள மொழிமூல தமிழ்மொழிமூல என்று மாணவர்கள் பிரிக்கப்பட்டு வருகின்றனர். பாடசாலை நாட்களிலேயே நாம் வேறுபட்டுப் பிரிக்கப்பட்டு விடுகின்றோம்.

இந்த வகையில் மாணவர்களுக்கிடையில் ஒற்றுமை, புரிந்துணர்வு என்பவற்றை நாம் எப்படி ஏற்படுத்த முடியும்? இவ்வளவு நாளும் இருந்த இந்த நிர்வாக முறையும் பாடநூல்களின் தயாரிப்பும் இனநல்லுறவுக்கான நல்ல பணியைச் செய்யவில்லை."

இவ்வாறு 29-09-98 அன்று கொழும்பு சவ்சிறிபாய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற "பல்லின சமூக சகவாழ்வுக்கு பாடசாலைப் பாடநூல்களின் பங்கு" என்ற தலைப்பிலான சிங்கள ஆய்வு நூல் வெளியீட்டு வைபவத்தில் உரையாற்றிய கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் பீடத்தைச் சேர்ந்த கலாநிதி சசங்க பெரேரா தெரிவித்தார்.

"குடும்ப நல சேவைகள் நிலையம்" என்ற அரச சார்பற்ற நிறுவனமொன்றின் அனுசரணையுடன், பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட இந்த ஆய்வறிக்கை, இலங்கையின் பாடவிதான தயாரிப்பில் உள்ள பல்லின, கலாசார அம்சங்களை சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது. "இலங்கையில் இன நல்லுறவை ஏற்படுத்துவது தொடர்பான ஒரு தேசியக் கல்விக் கொள்கையை உருவாக்கும் எண்ணத்துடன், தமிழ், சிங்கள, ஆங்கில மொழிப் பாடப்புத்தகங்களை ஆய்வுக்கெடுத்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் "இலங்கையில் இப்போது பயன்படுத்தப்படும் பாடநூல்களில் உருவாகும் பிணக்குகள் என்ற தலைப்பில் இந்த செயற்திட்டத்தின் அமைப்பாளர்களில் ஒருவரான எஸ்.ஜி.தர்மசிறி அவர்கள் சிங்களத்திலும், விஜேகிருஷ்ணன் அவர்கள் தமிழிலும் உரையாற்றினார்கள்.

"இந்த நாட்டில் உடைந்து போயிருக்கும் இன நல்லுறவை இறுக இணைப்பதற்கு மிகவும் பலம் வாய்ந்த ஊடகமான கல்வியில் ஒரு தேசியக் கொள்கையை ஏற்படுத்துவது அவசியமாகும்" என்று தெரிவித்த தர்மசிறி அவர்கள் பாடநூல்களில் உள்ள இனக்குரோதத்தை வளர்க்கும் கருத்துக்களை சுட்டிக் காட்டினார்.

"சிங்கள மொழி பாடநூல் ஆறாம் ஆண்டு 64ஆம் பக்கத்தில் சிங்கள வீரர்கள் ஆயிரக்கணக்கான தமிழர்களின் தலைகளைச் சீவிக் கொணர்ந்ததாக கூறப்படுகிறது. வடக்கில் புலிகளும் இதனையே ஊட்டுகின்றனர். இதைத் தான் நாமும் மாணவர்களுக்கு ஊட்டுகின்றோம். அதேபோல் 40வது பக்கத்தில் பௌத்த சாசனங்களையும் பௌத்த விஹாரைகளையும் அழிப்பதற்கு எல்லாளன் ஆக்கரமிப்பு காரணமாக அமைந்தது என்று மாணவர் மத்தியில் இன ரீதியான மத ரீதியான கருத்து வேற்றுமைகளை பாடசாலை மட்டத்திலேயே ஊட்டப்படுகின்றன. பாடவிதானத்தை திட்டமிட்டவர்கள் தூர நோக்குடன் செயற்பட்டிருக்க வேண்டும். நாம் பாடநூல்கள் பற்றி நன்கு ஆராய்ந்து இந்த நாட்டில் சமூக சக வாழ்வை ஏற்படுத்தக்கூடிய பல மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளோம். இந்த மதிப்பீடுகள் எமது சமூக நலனை தூர நோக்குடன் பார்க்கும் வகையில் அமைந்துள்ளன. தமிழ் பாடநூல்களிலும் தமிழ் முஸ்லிம் பிள்ளைகளைப் பிரிக்கின்ற வகையில் தான் அமைந்துள்ளன. சமூகக் கல்வி பாடநூல் தமிழ் முஸ்லிம் மாணவர்களிலிருந்து விலகி நிற்கிறது. சித்திரப் பாடத்தை பரீட்சைக்காகத் தெரிவு செய்யும் தமிழ் அல்லது முஸ்லிம் மாணவன் அதில் அதிவிசேட திறமைச் சித்தியை எடுப்பதில்லை. ஏனெனில் சித்திரப் பாடத்திட்டம் சிங்கள கலாசாரத்தைப் பின்னணியாகக் கொண்டதாகவே அமைந்துள்ளது. இலங்கை பல்லின மக்களைக் கொண்ட கலாசார ஒழுகுமுறைகளைக் கொண்ட நாடு என்பதை நாம் இன்றைய தருணத்திலாவது உணர்ந்து கொண்டும் எதிர்காலத்தை மனதில் கொண்டும் எமது நாட்டுக்குத் தேவையான பாடத்திட்டம் பற்றிய ஆய்வு அறிக்கையை, அதாவது ஆழமாக செய்யப்பட்ட இந்த முயற்சியை யாவரும் புரிந்து கொண்டு செயற்படுத்தினால் ஒளிமயமான எதிர்காலமொன்று நிச்சயம் உருவாகும் என்பது எமது எண்ணம். இது அதற்கான தொடக்கம் மட்டுமே." என்று அவர் தமதுரையின்போது குறிப்பிட்டார்.

இவரைத் தொடர்ந்து உரையாற்றிய விஜயகிருஷ்ணன், அசினால் வெளியிடப்பட்டுள்ள பாடப்புத்தகங்கள் எவவாறு இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் விதத்தில் அமைந்துள்ளன என்பதை உதாரணங்களுடன் விளக்கினார். சிங்கள, தமிழ் மொழிகள் இரண்டிலுமே இந்தப் போக்கு இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

உதாரணமாக சிங்கள மொழிப்பாடநூலில் இந்து, இஸ்லாமிய மதவைபவங்கள், கொள்கைகள் பற்றிய குறிப்புகள் இல்லை என்றும் தமிழ் மொழிப் பாடநூல்களில் தென்னிந்தியப் பெரியார்களின் நூல்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் அளவுக்கு சிங்களப் பெரியார்களின் நூல்கள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஆங்கிலப் பாடநூல்களில் சிங்களப் பெயர்களே கூடுதலான பாத்திரங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் ஆங்கிலம் படிக்கும் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் சிறுவயதிலேயே இலங்கைச் சமூகத்தில் அந்நியமாகும் தன்மை ஏற்படுகின்றது.

சமூகக்கல்வி-வரலாறு என்பன பௌத்த மன்னர்களின் வரலாறாகக் கொள்ளப்படுகிறது.

விஜயன் இந்தியாவிலிருந்து தம்பபண்ணை என்ற இலங்கையின் மேற்குக்கரையினை வந்தடைந்ததாக இலங்கையின் பூர்வீக வரலாறு இங்கு குறிப்பிடப்படுகிறது.

ஆனால் இலங்கையில் ஏற்கெனவே வாழ்ந்த பூர்வீகக் குடிகள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

இதனால் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் சமூக ஒழுங்கு விதிகளை மதிக்காத ஒருவரே சிங்கள இனத்தின் முதலாமவர் என்ற தப்பான உணர்வும் எற்படுகிறது. சிங்களவர்கள் கலகக்காரர்கள் என்ற எண்ணத்தை இவர்களின் அடிமனத்திலே தோற்றி இனமுரண்பாட்டுக்கு அடித்தளம் இடப்பட்டு விடுகின்றது.

சமூகக்கல்விப் பாடத்தினதும், வரலாறு பாடத்தினதும் பாடவிதான நூலாக்கக் குழு உறுப்பினர்களாக சிங்களவர்களே இருக்கின்றனர்.

தம்பிமுத்து, புஸ்பா சிவகுமாரன், வேலாயுதப்பிள்ளை போன்றவர்கள் வெறும் மொழி-பெயர்பபாளர்கள் மட்டுமே! சிங்கள பௌத்தமயமாக்கம் என்பது இப்பாட நூல்களில் தெளிவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தமது உரையின் போது குறிப்பிட்டார்.


வரலாறு-11 நூலின் அட்டைப்படம் அசோகத்தூண் பராக்கிரமபாகு, தலதாமாளிகை விஜயனின் வருகை என்பவற்றை சித்திரிக்கின்றது. தமிழ் மொழிமூலம் பயிலும் மாணவர்களுக்கு இந்த அட்டைப்படமே வெறுப்பை ஏற்படுத்தும்.

ஆண்டு-1 தமிழ்ப்பாடம் விளக்கு ஏற்றுவோம், கடவுளை வணங்குவோம் என்று தொடங்குகிறது. இது முஸ்லிம், கிறிஸ்தவ மாணவர்களுக்குப் பொருத்தமானது அல்ல. அவர்களுடைய மனதை இது பாதிக்கலாம். ஆண்டு-2, தமிழ்ப்பாடத்தில் இந்துக் குடும்பத்தைப் பற்றியே குறிப்பிடுகிறது.


ஆண்டு-4 தமிழ்ப்பாடத்தில் கண்டியில் படிக்கும் கணேசன் விடுமுறைக்கு கந்தளாய்க்குப் போகும் போது முஸ்லிம் நண்பனைக் கூட்டிப் போகிறான். அதில் சிங்கள மாணவனையும் சேர்த்திருக்கலாம். எழுதியவர்கள் அதைச் சிந்திக்கவில்லை. சித்திரப்பாடத்தில் பயன்படுத்தப்படும் பெரலிய/ பேசாவளமு/ ரத்னபிரசாத/ மானெல்மல/நிசங்கமல/ வக்கதென/ இக்கிரிகட்டுவ/ வாகல்கட போன்ற சொற்களின் அர்த்தம் தமிழ் பேசும் மாணவர்களுக்குத் தெரியாது படிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

பௌத்த கலாசரத்துடன் பௌத்த மன சின்னங்களுடன் தொடர்பான இந்த அம்சங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மாணவர்கள் வந்து பார்க்கக் கூடிய நிலை இன்று இல்லை."

இது போலவே-பாடவிதான தமிழ் நூல் வெளியீட்டு ஆசிரியர் குழுவில் தனியே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் வன்னி, கிழக்கு, மலையகப் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இடம்பெற வேண்டும் என்றார் திரு விஜயகிருஷ்ணன்.




**கண்ணன்**



# ஒருபாலுறவு: அந்தரங்கத்திலிருந்து அரசியலுக்கு!

இன்று "ஒருபாலுறவு" குறித்து சூடான விவாதம் நடந்து வருகின்றது. இது குறித்து "சிரச" தொலைக்காட்சி சேவை, மற்றும் யுக்திய, ராவய, மாதொட்ட, பாராதீச போன்ற மாற்று பத்திரிகை, சஞ்சிகைகளிலும் விவாதம் தொடர்ந்து வருகிறது. இந்தளவுக்கு தமிழில் இது குறித்த விவாதம் இடம்பெறாதது ஒரு வகையில் துரதிருஷ்டவசமான ஒன்று.

இந்த விவாதத்துக்கு ஆரம்பம் எங்கிருந்து தொடங்கியது என்றால், அமைச்சர் மங்கள சமரவீர தனது கிரெடிட் கார்ட்டைப் பாவித்து இன்டர்நெட்டுக்கூடாக பாலியல் படங்களைப் பார்த்தார் என்ற குற்றச்சாட்டு பாராளுமன்றத்தில் ஐ.தே.க. வினரால் சுமத்தப்பட்டு பின்னர் அவர் மீதும் பொதுவாகவும் "ஒருபாலுறவு"க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இதனை ஒரு சந்தர்ப்பவாத அரசியலுக்கு மாறி மாறி காறி உமிழும் விவாதமாக அன்று பாராளுமன்றத்தில் இந்த சச்சரவு நிகழ்ந்து முடிந்தது. இதனைத் தொடர்ந்தே இந்த விவாதம் கட்சி அரசியலுக்கு அப்பால் தொடர்பு சாதனங்களில் நடத்தப்பட்டது.

இன்றைய மைய நீரோட்டத்தில் பெரும்போக்காகவே "ஒருபாலுறவு"க்கு விரோதமான கருத்துக்கள் ஆழமாக வேரூன்றியுள்ளன. இதற்கு எமது சமூக அமைப்பின் பண்பாடு, மதம், வர்க்கம், ஆணாதிக்கம் போன்ற ஆதிக்க மரபுவழிக் காரணிகளின் செல்வாக்கின் வழியாக வந்த ஐதீகங்கள் காரணமாக உள்ளன. எனவே இந்தக் கருத்தியலை முறியடிப்பது என்பதற்கு முன்நிபந்தனையாகவே மேற்படி காரணிகளை தகர்ப்பது என்பது அமைகிறது. ஒரு பாலுறவு நடைமுறையில் வழக்கிலுள்ள ஒன்றென்பதையும், அது குறித்து அவமானப்படுத்த, வெட்கங்கொள்ள, அசிங்கம் கொள்ள எந்தவித விஞ்ஞானபூர்வ காரணங்களும் இல்லையென்பதையும் ஒப்புக்கொள்ளத் தடையாக இந்த ஐதீகங்களே இருக்கின்றன.

ஒரு பாலுறவு என்பது திடீரென்று வானத்தில் இருந்து குதித்த அபூர்வமான ஒன்றல்ல அது ஏலவே எமது கலாசாரத்தில் நீண்ட காலம் புழக்கத்திலுள்ள ஒன்று. நிலவி வந்த ஐதீகங்கள் காரணமாக அது வெளிப்படைக்குரிய ஒன்றாக இருக்கவில்லை. அவ்வளவே. இன்று உலகமுழுவதும் ஜனநாயக உரிமைகளின் விரிவாக்கத்தினால் இன்று பகிரங்க உரிமை கோரி கருத்துகள் வெளியாகின்றன.

இன்று தன்னுடைய நண்பி தனது சக நண்பியை அல்லது நண்பன் தனது சக நண்பனைத் தழுவவோ, அல்லது கை கோர்த்து நடக்கவோ, தோளில் கைபோடவோ, மடியில் சாயவோ அஞ்சுகின்ற நிலைக்கு இந்த ஐதீகங்கள் கொண்டு வந்து நிறுத்தியுள்ளன. இதன் விளைவுகளாக பாலியல் குறித்த எந்தவித கலந்துரையாடலுக்கோ, அல்லது அது குறித்த புரிதலை நாடவோ விடாதது வரை விளைவுகளாக்கியுள்ளது. அவ்வாறான பேச்சு ஒரு நடத்தைக் குறைவாகவும், ஒழுக்கக்கேடாகவுமே நோக்கப்படுகின்றது. சொந்த மனைவி பாலியல் குறித்த கலந்துரையாடலை ஆரம்பித்து வைக்க தயக்கம் கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது. அது அவள் ஏற்கெனவே அனுபவம் கொண்டவள் என்கின்ற நம்பிக்கையை ஏற்படுத்தி விடுகிறது. இவற்றுக்கு பாலியல் குறித்த திறந்த கலந்துரையாடல் எம் சமூகத்தில் இல்லாததே காரணம். இதன் விளைவுகள் மோசமானவை என்பது கூறித்தெரிய வேண்டியவையல்ல.

1883 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சட்டவிதிகளிலேயே முதன் முதலில் ஒரு பாலுறவு தடை செய்யப்பட்டு தண்டனைக்குரிய குற்றமாக ஆக்கப்பட்டது. பிரித்தானிய காலனித்துவ சக்திகள் தமது ஆட்சியிலேயே அந்தச் சட்டத்தை உருவாக்கினார்கள். ஆனால் இன்று அந்தச் சட்டத்தை பிரித்தானியாவில் நீக்கிவிட்டார்கள். இங்கு இன்னமும் அது நிலவுகிறது. இன்று ஒருபாலுறவு தண்டனைக்குரிய குற்றம். அது இயற்கைக்கு முரணானதாம். இலங்கை குற்றவியல் சட்டத்தின் 365ஆவது பிரிவின் பிரகாரம் இதற்கு 12 வருட சிறைத்தண்டனையும் கசையடியும் கொடுக்கப்படும்.

அண்மையில் நடந்த பாராளுமன்ற விவாதத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் மோசமான அவதூறுகள் காரணமாக அமைச்சர் மங்கள சமரவீர தான் ஒரு தன்னினச் சேர்க்கையாளன் தான் என்று ஆத்திரத்துடன் திருப்பித் திருப்பிக் கூறினார். இதைக் கூறியதும் அங்கிருந்த ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ராஜித்த சேனாரத்ன மேற்படி சட்டத்தின் பிரகாரம் அவர் தண்டனைக்குரியவர் என்று தம் சந்தர்ப்பவாத அரசியலுக்கு சாதகமாக இதனை பாவித்தார்.

இதனைத் தொடர்ந்து இது குறித்த ஒரு விவரண நிகழ்ச்சி ஒன்றை "சிரச" தொலைக்காட்சி செய்தது. அதில் பல புத்திஜீவிகள், மனித உரிமையாளர்கள், தன்னினச்சேர்க்கை உரிமையாளர்கள், மற்றும் பத்திரிகையாளர்கள் என்போரின் பேட்டியும் இடம்பெற்றது. "சிரச" கூறிய தகவலின்படி ராஜித்தவை இது குறித்து கருத்து தெரிவிக்க அழைத்திருந்தும் அதனை நிராகரித்து நழுவினார் என்று கூறுகின்றனர். ஆனால் ராஜித்த சேனாரத்ன பரவலாக எல்லா இடங்களிலும் ஒருபாலுறவு குறித்து கருத்து தெரிவித்து வந்தார்.

யுக்திய பத்திரிகைக்கு அவர் வழங்கியிருந்த செவ்வியில்...

"..நான் ஒருபாலுறவை கடுமையாக எதிர்க்கிறேன். இதற்கென்று இருக்கின்ற நிறுவனங்களில் அரசாங்கத்தைச் சேர்ந்த இரு அமைச்சர்மார் உள்ளனர். இந்த நிறுவனங்களுக்கு அரச அனுசரணை கிடைக்கிறது. இதன் மூலம் நாடு முழுவதையும் (Sex Club) பாலியல் சமூகமாக ஆக்கப் பார்க்கின்றனர். 2500 வருடகால பாரம்பரிய கலாசாரமுடைய இந்த சிங்கள பௌத்த நாட்டை அழிக்கப் பார்க்கின்றனர். இதனைக் கேட்டுக்கொண்டு மகா சங்கத்தினர் அமைதியாக இருப்பது என்னை ஆச்சரியமூட்டுகிறது. நான் கற்றிருக்கின்ற வைத்தியத்துறையைப் பொறுத்தவரை ஒரு பாலுறவு என்பது மனநோயின் விளைவு. மனநோயாளர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும். அவர்களை புனருத்தாரனம் செய்ய வேண்டும். அதற்கு மாறாக அதனைப் பேண ஜனநாயக உரிமை வழங்குவதை நான் எதிர்க்கிறேன். எமது குடும்ப கட்டமைப்பை சீரழிக்கிற இயற்கைக்கு முரணான விடயத்துக்கு சட்ட அங்கீகாரம் வழங்க முடியாது. பைத்தியக்காரத்தனமான சுதந்திரத்தை கதைத்துக் கொண்டு இதனை செய்ய முயல்வதை நான் இறுதி வரை எதிர்த்தே தீருவேன்....."

என்றார்.(யுக்திய செப்டம்பர் 06)

இவரின் இந்தக் கருத்தோடு சேர்த்து ஐ.தே.க. பிரமுகர் சீ.ஏ. சந்திரப்பிரேம, ஜே.வி.பி. பிரச்சார செயலாளர் விமல் வீரவங்ச, ந.ச.ச.கட்சி பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன பெண் பத்திரிகையாளரும் பெண்ணியவாதியுமான அனோமா ராஜகருணாநாயக்க, மற்றும் தன்னினச் சேர்க்கை அமைப்பின் தலைவர் சேர்மன் டி ரோஸ் ஆகியோர் யுக்தியவுக்கு கருத்துத் தெரிவித்திருந்தனர்.

ஜே.வி.பி. பிரச்சார செயலாளர் விமல் வீரவங்ச குறிப்பிடுகையில்...

"பாலியல் ஒருவரின் தனிப்பட்ட உரிமை. ராஜித்தவுக்கு இது குறித்து பேச எந்த அருகதையுமில்லை. இதனை ஒரு இழிவுக்கும் குற்றத்துக்குமுள்ளாக்கும் ராஜித்த ஐ.தே.க.வுக்குள் இருக்கின்ற ஒருபாலுறவினரை எவ்வாறு காண்கிறார்.... இன்று ஐ.தே.க.வும் பொ.ஐ.மு.வும் மாறி மாறி குறை சொல்ல ஒன்றும் மிச்சம் இல்லை. ஏனென்றால் இரு கட்சிகளும் ஒன்று தான். ஒரே கொள்கை, ஒரே நடைமுறை. எனவே தான் அரசியல் கொள்கைகளுக்காக சண்டை பிடிப்பதை விட்டுவிட்டு தனிப்பட்ட விவகாரங்களை சந்திக்கு இழுத்து இழிவுபடுத்தி அரசியல் நடத்தத் தொடங்கியிருக்கின்றனர்...."

இன்றைய மைய நீரோட்டத்தில் பெரும்போக்காகவே 'ஒருபாலுறவு'க்கு விரோதமான கருத்துக்கள் ஆழமாக வேரூன்றியுள்ளன. இதற்கு எமது சமூக அமைப்பின் பண்பாடு, மதம், வர்க்கம், ஆணாதிக்கம் போன்ற ஆதிக்க மரபுவழிக் காரணிகளின் செல்வாக்கின் வழியாக வந்த ஐதீகங்கள் காரணமாக உள்ளன. எனவே இந்தக் கருத்தியலை முறியடிப்பது என்பதற்கு முன்நிபந்தனையாகவே மேற்படி காரணிகளை தகர்ப்பது என்பது அமைகிறது.

விக்கிரமபாகு கருணாரத்ன குறிப்பிடுகையில்...

"...இன்று உலகம் முழுவதும் ஒரு பாலுறவை மானுடரீதியில் அணுகி அங்கீகாரமளிக்கின்ற போக்கை காணக்கூடியதாக இருக்கின்றது. ராஜித்தவிடம் ஒருபாலுறவு குறித்த மாறுபட்ட கருத்து இருந்தாலும் கூட அதனை ஏனைய சமூக, பொருளாதார காரணிகளுடன் நிறுவ முயலவில்லை. தனது இயலாமையை மூடி மறைக்க தனிப்பட்ட தாக்குதலைப் பிரயோகித்தமை குறித்து ராஜித்த வெட்கப்பட வேண்டும். இது ஐ.தே.க.வின் சீரழிவையே வெளிப்படுத்துகிறது. இவ்வாறான கருத்துகள் அசட்டை செய்யக்கூடியதல்ல...."

பெண்ணியவாதி அனோமா ராஜகருணாநாயக்க கூறுகிறார்..

"....குறுகிய அரசியல் சந்தர்ப்பவாதத்துக்கு இப்படிப்பட்ட தனித்துவமிக்க பாலியல் இறைமைகளை பலியாக்குவது என்பது துரதிருஷ்டவசமான ஒன்று. இப்படிப்பட்ட இழிவுபடுத்தல் எமது நாட்டில் நிலவுகிற வங்குரோத்துத்தனமிக்க அரசியல் போக்குக்கு சிறந்த எடுத்துக்காட்டு. ஒருபாலுறவு என்பது ஏதோ திடீரென்று வானத்திலிருந்து குதித்த அபூர்வமான ஒன்று அல்ல...."

சீ.ஏ.சந்திரபிரேம இது குறித்து கருத்து தெரிவிக்கையில்...

"...பௌத்தத்தின் படி பாலியல் குற்றம் என்று இல்லை. கிறிஸ்தவ / மதத்தில் தான் அப்படிப்பட்ட விதிகள் இருக்கின்றன. பௌத்தத்தில் பிக்குபிக்குனிகளுக்கு மாத்திரம் சகல பாலியல் இன்பங்களும் மறுக்கப்பட்டுள்ளன. எவ்வாறிருந்த போதும் இந்த பிரச்சினையின் மூலம் எமது சமூகத்தில் பாலியல் கருத்தாக்கம் குறித்த விடயம் பகிரங்க விவாதத்துக்கு வந்துள்ளது. அது எதிர்கால சமூகத்துக்கு மிகவும் நன்மை பயக்கத்தக்கது...."

சேர்மன் டி ரோஸ் கருத்து தெரிவிக்கையில்....

"....ஒருபாலுறவினர் என்கின்ற ரீதியில் நாங்கள் அமைப்பொன்றை உருவாக்கியதே அதற்குரிய உரிமையை ஏற்கச் செய்வதற்காகவே. அரசியல் நோக்கங்களுக்காக பாலியல் உரிமையை பலியாக்கியுள்ளனர். ஒருவருக்கு இந்த உரிமையை ஏற்காதிருக்க உரிமையுண்டு. ஆனால் நாகரிகமான ஜனநாயக முறையியல் என்று ஒன்று உண்டு. ஒருவர் ஒருபாலுறவு கொண்டதற்காக அவர் ஒருபாலுறவினர் என ஆகிவிடமாட்டார். அதற்கு பல காரணங்கள் உண்டு. இது தெரிவைப் பொறுத்தது. இலங்கையில் ஆயிரக்கணக்கான ஒருபாலுறவினர் உள்ளனர். அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருபவர்கள். ராஜித்தவின் கருத்தானது அந்த ஆயிரக்கணக்கான அனைவருக்கும் எதிரான தாக்குதல். இந்த மோசமான கருத்து குறித்து மக்கள் முன்னிலையில் ராஜித்த பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்...." என்றார்.

இப்படி இந்த விவாதம் சென்று கொண்டிருந்த போது "மாதொட்ட", மற்றும் "பாராதீச" (இப்பத்திரிகைகள் இரண்டும் மங்கள சமரவீரவின் அனுசரணையுடன் நடத்தப்படும் மாதாந்த சஞ்சிகைகள். இதன் ஆசிரியர் குழுவில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் முன்னைநாள் ஜே.வி.பி. இளைஞர்கள். இவை தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் மாற்று சஞ்சிகைகளில் குறிப்பிடத்தக்கவை. அரச சார்பற்றவை. பின்நவீனத்துவம், மார்க்சீயம், பெண்ணியம், அமைப்பியல்வாதம், உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து விவாதித்து வரும் முக்கிய இரு சஞ்சிகைகள். அது மட்டுமன்றி பாலியல் குறித்த விடயங்களை பகிரங்கமாக விவாதித்து வருகின்றவை.) பத்திரிகைகள் இது குறித்து நிறையப் பக்கங்களை ஒதுக்கி விவாதித்தது (ஒக்டோபர் இதழ்கள்). அச்சஞ்சிகைகள் ராஜித்தவை 12ஆம் நூற்றாண்டின் அரசியல்வாதியென்று கூறியிருப்பதுடன் அவரை பகிரங்க தொலைக்காட்சி விவாதத்துக்கு வரும்படி சவால் விடுத்துள்ளன.

ராஜித்தவோ சிரசவுக்கு பின்னர் அளித்த பேட்டியொன்றில் "பாராதீச" சஞ்சிகை ஒரு தூஷன பத்திரிகை என்று கூறியிருக்கிறார். அதன் பின்னர் பாராதீச சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் "தூஷனம் என்றால் என்ன? கனவான்களே முடிந்தால் மோதுங்கள்!" என்று விவாதத்துக்கு அழைத்துள்ளனர்.

இந்த விவாதம் இவ்வாறு தொடர்ந்து செல்கின்றது. இது எவ்வாறிருந்த போதும் உண்மையிலேயே இது குறித்து பகிரங்க விவாதத்துக்கு வந்துள்ள இக்கருத்துப் பரிமாறலை உச்ச அளவு பயன்படுத்துவது சமூகத்தின் ஆரோக்கியமான சமூக மாற்றத்துக்கு அத்தியாவசியமான ஒன்று.

—கோமதி

எட்டு வருடங்களாகி விட்டன.

வாழ்க்கை இன்னும் அப்படித்தான் இருக்கிறது. தாயகத்துப் பசுமை நினைவுகள் இன்று பூத்ததாய்த் தான் இன்னும் செழிப்பாக இருக்கிறது. மனது இன்னும்மண்ணை விட்டு மாறவில்லை. மயக்கங்களும் இன்னும் தீரவில்லை. வயதின் உச்சத்திலிருப்போருக்கும், இங்கு வந்து பிறந்தோருக்கும் ஏக்கங்கள் அதிகமாயிருக்கிறது. 'நீங்க எங்க?' என்று எட்டு வயதிற்குட்பட்ட ஒரு பிள்ளையைக் கேட்டாலும் வடக்கின் ஒரு ஊரையே தாயகமாய்ச் சொல்கிறது.

புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்டியது இந்த ஒக்டோபருடன் எட்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது. இந்த ஆண்டு நிறைவு எல்லாவற்றையும் மீள்பரிசீலிக்கின்ற அவர்களைப்பற்றி ஞாபகமூட்டிக் கொள்கிற நிலைமைகளை எல்லோரிடமும் தோற்றுவித்து விடுகிறது. ஒவ்வொரு ஆண்டின் முடிவின் போதும் நல்லது நடக்கும் என்ற எதிர்பார்ப்போடு அகதி மக்கள் தாங்கள் வெளியேற்றப்பட்ட நாட்களை நினைவு கூருகிறார்கள். அமைப்புகள், புத்திஜீவிகள், தனி நபர்கள் எனப் பலரும் இவர்களைப் பற்றிய அக்கறையை இந் நாட்களில் அதிகப்படுத்திவிடுகிறார்கள், அரசியல்வாதிகளுக்கு இது சந்தர்ப்பமாகவும் ஆகிப்போய்விடுகிறது.

அகதிவாழ்வின் நிறைவு நாட்களை சகலருக்கும் அழுத்தம் தெரிவிக்கும் நாட்களாக பல நிகழ்ச்சிகளூடு ஏற்பாடு செய்துவருவதனைக் காணக் கூடியதாயிருக்கிறது. இந்த ஆண்டு ஒக்டோபர் நாட்கள் கூட சமாதானத்தை வலியுறுத்தும் எழுச்சி நாட்களாக வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.


''நாம் ஏற்றுக் கொண்ட தவறை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி ஏன் நீங்கள் எழுதுகிறீர்கள்?'' என்று வடக்கு முஸ்லிம்கள் பற்றி எழுதுகையில் புலிகள் சிலர் கேட்டிருக்கின்றனர். உண்மையில் இது ஒத்துக்கொள்ளப்பட்ட விடயமாயினும், ஆண்டு தோறும் அல்ல நாள்தோறும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகவே இருக்கிறது. முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது பற்றி ரஊப் ஹக்கீம் இப்படி அழகாகச் சொன்னார்: புலிகள் அனைத்து பின்னடைவுகளுக்கும், யுத்தத் தோல்விகளுக்கும், தந்திரோபாயங்கள் என்ற வகையில் காரணங்கள் சொல்கிறார்கள். ஆனால், அவர்களால் காரணம் சொல்ல முடியாமலிருக்கிற வரலாற்றுப் பின்னடைவு ஒன்று இருக்குமானால் அது அவர்கள் முஸ்லிம்களை வெளியேற்றியதாகத் தான் இருக்கும். (பார்க்க ரஊப் ஹக்கீமின் உரை)

உண்மைதான் இந்தப் புலிகளன் மாபெரும் 'வரலாற்றுப் பின்னடைவும்', அது ஏற்படுத்திய/ ஏற்படுத்தி வரும் தாக்கங்களும் அகதி மக்களின் வாழ் நிலையைப் பார்த்துணர்பவருக்கு இலகுவிலேயே புரிய வரும்.

இந்த வகையில் சரிநிகரும் கடந்த இருநாட்களை (9, 10-10-1998) புத்தளத்தில் கழித்து பலமுறை சொல்லப்பட்ட அறியப்பட்ட சில விடயங்களாயினும் சில அவதானங்களைப் பெற்று வந்தது.

**இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும் மாந்தை- நானாட்டான் முஸ்லிம்கள் நூல் வெளியீடு.**

இந்த எட்டு வருடத்தை நினைவுகூரும் ஒரு முதல் நிகழ்ச்சியாக வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினரால் மேற்படி நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இது இத்தொடரில் ஆறாவது நூலாகும். முஸ்லிம்களின் வெளியேற்றம்



# வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள்:
# எதிர்பார்ப்புமிகு எட்டாவது ஆண்டில்!

### எம். ராபி (தலைவர் - முசலிப் பிராந்திய மக்கள் ஒன்றியம்)

*'வெளியேற்றப்பட்டபோது மக்களுக்கிருந்த சிந்தனை தாம் அநியாயமாக வெளியேற்றப்பட்டு விட்டோம், சொத்துக்கள் பறிக்கப்பட்டு விட்டோம் என்பதாக இருந்தது. இது பற்றியே வருந்திக் கொண்டிருந்தார்கள். இது நீண்ட காலத்தில் குறைந்து, பிரச்சினைகளில் மூழ்கிப்போய் அதிலிருந்து வெளியேற முடியாத கட்டத்திலேயே இருக்கிறார்கள்... பிரச்சினைகளோடு வாழ்க்கை போகிறது.'*

*''மக்களின் சிந்தனை ஒருமுகப்படுத்தப்பட்டு நெறிப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டாலே ஓர் எழுச்சியை மக்களிடமிருந்து எதிர்பார்க்கலாம். இதைச் செய்வதற்கான இடைவெளி இன்னும் இருந்து கொண்டேயிருக்கிறது...''*

*''...சிலர் உடனடித்தீர்வுகளை எதிர்பார்க்கின்றார்கள். சிலர் சமூகப் பிரச்சினைகள் என்றபடியால் நின்று நிதானித்த ஆழமான தீர்வுகளை எதிர்பார்க்கிறார்கள். இவை நெறிப்படுத்தப்பட வேண்டும்... இஸ்லாமிய அடிப்படைகளில் நாம் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்....''*

*''... மாணவர்களின் கல்விநிலை மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது. இந்த மாணவ சமுதாயத்தை - அமைப்பென்ற வகையில்- திட்டமிடலூடாக வழிநடத்துவது அவசியம் எனக்கருதுகிறோம். அவர்கள் ஸ்கூல் போகிறார்கள். போய் வந்து கிரிக்கெட் 'பெட்'டுடன் போனார்களென்றால் 9, 10 மணிக்கு வந்து படுக்கிறார்கள். அதே முகத்தோடு மறுநாள் பாடசாலைக்கு போகிறார்கள். அவர்களிடம் படிப்பென்ற சிந்தனை இல்லாமலிருக்கிறது. இந்நிலையை மாற்றியமைக்க வேண்டும்.இதற்காக முகாம்களில் கல்வி முகாம்களை அமைத்துச் செயற்படலாம்... பெண்கள்தான் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவர்கள் என்று நாங்கள் கருதுகிறோம். இவர்களுக்கும் தெளிவை ஏற்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும்...''*

*''ஆரம்பத்திலிருந்ததை விட இப்போது அகதிமக்களின் சில அடிப்படைத் தேவைகள் நிறைவ்பெற்றிருக்கிறது. இப்போது தேவைப்படுவதாக உள்ளது. பாதைகள், சுய தொழில்வாய்ப்பு முயற்சிகள்.. மல:/கூட வசதிகள்... என்பனவே."*

*'இப்போதைக்கு ஏதோ ஒரு வகையில் கட்டியிருக்கும் கொட்டில்களை, வீடுகளை புனரமைத்து திருத்துவதென்றால் அதற்கு அவர்களிடம் தற்போது வசதியில்லாத நிலைதான் இருக்கிறது.''*

*''மக்களின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டும். தீர்வு ஏற்படவேண்டும் என்று எல்லோருமாக விரும்புகிறார்கள். ஆனால் அதற்காக சிறு தியாகம் செய்யவும் தயங்குகிறார்கள். ஆனால், இவர்கள் கட்டாயம் ஏதோ ஒரு வகையில் பங்களிப்புச் செய்ய வேண்டும். எம்மில் வசதியுள்ள குறிப்பிடத்தக்கோர் சிலரின் மனநிலையும் மாறவேண்டும் என எதிர்பார்க்கிறோம். கிழக்கிலுள்ள பிரச்சினையை விட வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களது பிரச்சினையே இன்று மிக முக்கியம் வாய்ந்தது. இது ஏனைய எவருக்கும் இலங்கையில் ஏற்படாத் பிரச்சினை... இது பற்றிய தெளிவும் மக்களிடம் ஏற்படவேண்டும்...''*

ஏற்படுத்திய சாதகமான நிலைப்பாட்டில் ஒன்று தான் முஸ்லிம்களை தங்கள் வரலாற்றைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கவைத்தது. இந்த அடிப்படையில் வடக்கின் பல பிரதேசங்கள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வடக்கு முஸ்லிம்களின் தாயகம் தான் என்று அடித்துச் சொல்லப்பட்டு வருகிறது. இந்த வெளியீட்டு நிகழ்வு தில்லையடி மகா வித்தியாலத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டவர் மு.கா. பிரதிநிதி ரஊப் ஹக்கீம் அவர்கள். வடக்கு முஸ்லிம்கள் விடயத்தில் போதிய அக்கறை காட்டாத முஸ்லிம் காங்கிரஸ், பொதுவாக அரசியல்வாதிகள் இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொள்வதை விமர்சிக்கிறார்கள். ஒக்டோபர் மாதங்களில் மாத்திரம் முகாம்களில் தலைகாட்டும் பிரதிநிதிகளையிட்டு விசனம் தெரிவிக்கிறார்கள். எதிர்வரும் 15ம், 16ம் திகதிகளில் கூட இந்த ஒக்டோபரை குறிவைத்து அமைச்சர் அஷ்ரஃப் பல வேலைத்திட்டங்களை புத்தளத்தில் ஏற்பாடு செய்துள்ளார். மக்கள் இந்த ஒக்டோபர் செயற்பாடுகளை முஸ்லிம் தலைமைகளிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. உண்மையில் இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்?

'அஸ்வர் எம்.பி. எங்களை நாயே என்று கூட ஏசினார். அஷ்ரஃப் வந்துதான் எங்ளுக்கு எல்லாம் கிடைத்தது' என்கிறார் கட்சி விசுவாசி ஒருவர். இந்த 'எல்லாம்' என்பது என்ன? முகாம்களை விட்டும் தனித்தனியாக குடியிருக்கக்கூடிய விதத்தில் வாங்கப்பட்டிருக்கும்/ வழங்கப்பட்டிருக்கும் காணிகள், சிறுவீடுகள் கட்டுவதற்கான உதவிகள். உண்மையில் இங்கு அகதிகள் மக்களிடத்தில் சொல்லத் தக்கவித்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் இது ஒன்று தான். பெரும்பாலானவர்கள் குறிப்பாக புத்தளம் மாவட்டத்திலுள்ளோர் சொந்தக் காணிகளில் தங்கள் இல்லறங்களை அமைத்திருக்கிறார்கள். இந்த நிலைமை ஏற்பட வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் ஓயா நெருக்குதலும், கோரிக்கையுமே காரணம் என்கிறார் இவ்வமைப்பின் செயலாளர் மௌலவி சுப்யான். UNHCR முன்னால் தாம் நடத்திய ஆர்ப்பாட்டத்தினாலும், விடுத்த கோரிக்கையின் பயனாகவுமே 400 கோடி ரூபாய் புனர்வாழ்வு அமைச்சுக்கூடாக வழங்கப்பட்டு அகதிகளிடையே புனர் நடவடிக்கைகளுக்காகப் பங்கிடப்பட்டதெனவும் அவர் தெரிவிக்கிறார்.

பொதுவாக அக
மக்கள் அமைப
சார்பற்றவையா
மென்பதைத்த
னோர் எதி
இந்நிகழ்வில்
காங்கிரசோடு
போட்டுவிட்டதே
தெரிவிக்கிறார்க
எந்தவொரு அ
சார்ந்ததோ எந்த
தூக்கவோ
அமைக்கவில்லை
உரிமைகளை
கட்சிகளை அணு
முடியுமோ அவ்
அதற்காகச் சந்
இதில் முதன்மை
முஸ்லிம் காங்
என்று இவ்வமை
அமீன் கூறுகிறா
மு.காவுடன் ப
நடக்காத வி
குறிப்பிட்டார்.
தொடர்பாக ஆ
அமைக்கப்பட
கோரிக்கை இவ்
புறக்கணிக்கப்ப
பதையே இவர்

*முகாம்க*
*தல*
*இருப்பி*

அகதி மக்கள்
எதிர்கொண்ட பி
பிரச்சினையாகு
கொண்
அடைபட்டு மி
சகல விதத்தி
டவர்கள் தற்
ஓரளவு
தனியான இரு
பெற்றிருக்கிறா
சொந்த உழைப்
நிவாரண அமை
சூடாகவும் இ
பெற்றிருக்கின்
ஓரளவு வசதி அ
ருக்கின்றனர்.
தமதான
கிடுகுகளால்
பட்ட வீடுகளை
றனர். இப்போ
பகுதிகளில் அக
அகதி ஊராக
அவதா க்க
இருக்கிறது.
திருப்தியானதா
அளவுக்கு போ

மழைக்காலம்
பிடங்களை ஈர
பள்ளத்தாக்கா
அநேகர்
ஏற்படுத்தி இரு
விடும் அபா
அத்துடன் கி
பிடிக்கும் கா
இருக்கிறது.
முக்கிய பிரச்சி
குடிநீர்ப் பிரச்சி
உவர்நீரே கிண
தால் நன்னீ
வேண்டியும் இ
தங்கள்
முதன்மைப்படு
நிலையமாக
அமைத்திருப்ப
அவதானிக்கக்கூ

*பொருளாத*

சொந்தத் தாய
துறவு, வயல்,
கடல்வளங்கள்
சுயத்தில் இரு
எல்லாவகையி
நிலையிலிருக்கி
ணங்களுக்கும்
கப்பால் மி
போட்டிமிகு உ
வருமானத்தினா

நன்றி - நூலகத்திட்டம்



இவர்கள் நகர்த்த வேண்டியிருக்கிறது. அகதி மக்களுக்கு தொழில் தேர்வு இல்லை. எல்லாமும் செய்ய வேண்டியிருக்கிறது. குறித்த சில முகாம்களுக்குச் சென்றவேளை புல்பிடுங்க பெண்களைத் தேடி சில முதலாளிகள் வந்திருந்தார்கள். காலையில் வீதியில் நின்றால் ட்ரக்டர் பெட்டி நிறைய அகதிப் பெண்கள் வெங்காயக் களனிகளுக்கு தொழில் பார்க்கச் செல்வதனை அவதானிக்கலாம். இவர்கள் குறைந்த கூலியில் சுரண்டப்படுகிறார்கள். நிலைமையின் தேவை இத்தொழில்களுக்கு இவர்களை நிர்ப்பந்திக்கிறது.

அரச உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு நிரந்தரமெனக்கூடிய தொழில்களில்லை. மீன்பிடித்தொழில் செய்தவர்கள் வளப் பிரச்சினையை எதிர் கொள்கிறார்கள். வயற்றொழில் அகதிவாழ்வில் இல்லாத ஒன்று. சிலர் புத்தளத்தில் வாடகைக் காணிகளில் விவசாயமும் செய்துவருகிறார்கள். அத்துடன் பொருளாதாரம் தொடர்பில் அவதானிக்கக்கூடிய ஒன்று என்னவெனில் ஊரில் வசதிவாய்ப்போடு இருந்தவர்களில் பலர் இங்கும் பல இழப்புக்களோடு அதேநிலைய தக்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பொருளாதார நிலைமை கல்வியை வெகுவாகப் பாதித்திருக்கிறது. ஐந்தாம் வகுப்போடு கல்வியைக் கைவிட்டு தொழில்

''80 வீதமான இருந்த எங்கள் பல்கலைக்கழகத் தேர்வு இப்போது இரண்டு, மூன்று பேராகிவிட்டது'' என்கிறார் ஆதங்கமாக மன்னாரைச் சேர்ந்த சகோதரர் அனீஸ். போதிய வசதிகளற்ற அகதிக் கல்வி வாழ்க்கை மாணவர்களிடையே விரக்தியை ஏற்படுத்தியிருக்கிறது. ''ஸ்கூல் விட்டு வந்ததுமே கிரிக்கெட் விளையாடப் போய்விடுகிறார்கள்... இரவு ஒன்பது மணிக்குத்தான் வீடுகளுக்குத் திரும்புகிறார்கள்...'' என்று கவலையோடு சொல்கிறார் முசலிப் பிரதேச மக்கள் ஒன்றியத் தலைவர் பொறியியலாளர் ராபி. இவ்வமைப்பினர் மக்களை கல்வியூட்டும் நடவடிக்கைகள் முக்கியமானதெனக் கருதி பல வேலைத்திட்டங்களையும் அமுல் படுத்தி வருகிறார்கள்.

இப்படித்தான் அகதிவாழ்க்கை நிறையப் பிரச்சினைகளோடும் மாற்றங்களோடும் முன்னேற்றமின்றிச் சென்று கொண்டிருக்கிறது. பிராந்திய ரீதியிலாக அகதிகளிடையே சில அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. ஒட்டு மொத்தமாக வடக்கு அகதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு அரசியல் ரீதியான நிரந்தரத் தீர்வொன்றைக் காணும் வகையில் தேசியமட்டத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இது பல நிகழ்ச்சிகளை



### பி.ஏ.எஸ்.சுபியான் (செயலாளர் NMRO)

''தற்போதைய எங்களுடைய மக்கள் தங்களுக்குரிய இடத்தைப் பெற்றுக்கொண்டவர்களாக ஓரளவு வித்தியாசமான நிம்மதியான நிலைமையில் வாழ்கிறார்கள். இது எதனால் கிடைத்தது என்பதை மக்கள் பலர் அறியவில்லை. அல்லாஹ்வின் கிருபை எமது முஸ்லிம் அமைச்சருடனான சந்திப்புக்கள் மூலமாக இவ்வாறு கிடைத்ததாகத் தோன்றினாலும் கூட இவ்வாறு தீர்மானத்திற்கு வரக் காரணமாயிருந்தது எமது அமைப்புத்தான்...''

பார்க்கப் போன பல இளைஞர்கள் இருக்கிறார்கள். கற்பிட்டி முகாமில் சந்தித்த 16,17 வயதான இருவர் தாம் கடற்றொழில் செய்வதாகத் தெரிவித்தனர். இவ்வாறு தங்கள் படிப்பைக் கைவிட்டு பொருளாதாரத்தில் கவனத்தைக் குவித்த இளைய தலைமுறையினர் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர்.

### *கல்வி நிலைமை*

ஒரு சமூகத்தின் அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்யவேண்டுமெனில் அவர்களின் கல்வியில் கையைவைக்கவேண்டும் என்பார்கள். இந்த வகையில் புலிகளும் முஸ்லிம்களை வெளியேற்றியதன் மூலம் அச்சமூகத்தின் சகல துறைகளையும் ஆட்டம் காணச்செய்து, அவர்களை ஒருவகையான இனச்சுத்திகரிப்பிற்கு இட்டுச் சென்றுள்ளனர். கல்வித்துறையில் முஸ்லிம்கள் பின்னடைந்தவராகக் கருதப்படினும், வடக்கு முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் கல்வியில் முன்னேறியே இருந்தனர். இன்று இலங்கையின் பல பாகங்களிலும் இப்பிரதேசத்தவர்கள் கல்வி ரீதியாக தடம்பதித்தவர்களாக உள்ளனர். இந்த நிலை 90களின் பின் பின்னடைவுக்குட்பட்டது. பெண்களின் கல்வியையும் இது வெகுவாகப் பாதித்தது.

நடாத்தியும், வடக்கு முஸ்லிம்கள் பற்றி ஆவணங்களைத் தொகுத்தும் வெளியிட்டும் வரலாற்றுப் பங்காற்றிக் கொண்டிருக்கிறது. பிராந்திய அமைப்புக்களில் குறித்துச் சொல்லத்தக்க செயற்பாட்டுகளுடன் இயங்கி வருவது முசலிப் பிரதேச மக்கள் ஒன்றியமாகும். முகாம்களுக்குச் சென்று பலரைச் சந்திக்க இவ்வொன்றியத்தின் செயலாளர் மிஹ்லார் பெரிதும் உதவினார். இது போன்ற பிராந்திய அமைப்புக்கள் அகதிமக்களின் நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய விதத்தில் தோற்றம் பெற வேண்டிய அவசியமிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், ஆண்டுகளை எண்ணி நினைவு கூர்வதைவிட ஆக்கபூர்வமான செயற்பாடுகளை அமுல்படுத்தி அகதிவாழ்வில் திருப்பம் காணும் நடவடிக்கையில் பேதங்கள் மறந்து எல்லோரும் ஒன்றுபடவேண்டும்.

அத்துடன் சம்பந்தப்பட்டவர்களும் இம்மக்கள் தொடர்பில் தங்கள் கரிசனையான பார்வையைத் திருப்பாவிடின் 9ம், 10ம் ஆண்டுகளாகவும், நாமும் 9ம், 10ம் முறைகளாகவும் இப்படியே தொடர்ந்து போய்க்கொண்டிருக்கத்தான் நேரும். 0

**எம்.கே.எம்.ஷகீப்**

### *மைமூன் உம்மா (கரடிக்குழி)*

''வாழ்க்கை கஷ்டத்தில் தான் இருக்கிறது. கஷ்டத்தோடு வந்தோம்; கஷ்டப்படுகிறோம். அங்கேயச் செல்வம் இங்கே இருக்குமா? அங்கே வசதியாய்த்தான் இருந்தோம். வீடு, வாசல், சொத்து, சோழி, தெரியாதா...? எல்லாச் சனமும் போனால் போகத்தானே வேண்டும்! பிள்ளைகளின் படிப்புத் தான் கஷ்டமானது. பல மைல்களுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது.''


### *ரஷீத் (17), தஸ்லீம் (16)*

''அகதி வாழ்க்கை பரவாயில்லை. ஆனால், ஊரில் இருந்தால் நன்றாகயிருந்திருப்போம். ஐந்தாம் வகுப்பு படிக்கையில் வெளியேறினோம். அத்தோடு படிப்பைக் கைவிட்டுவிட்டோம். இப்போது கடற்றொழில் செய்கிறோம். குடும்ப கஷ்டத்தால் தொழிலுக்கு வந்தோம். அங்கிருந்தால் படித்திருப்போம். கூலியாட்களாகத் தான் நாட்கூலித் தொழில்புரிகிறோம்.''

### *அமீன் (பொருளாளர் - NMRO)*

''இந்த நாட்டிலே எந்த நாட்டிலும் நடக்காத ஒரு சம்பவம் எங்களுடைய மக்களுக்கு நடந்தது. ஒரு சாதாரண 'ஷொப்பிங் பேக்'குடன் புறப்பட்டோம...''

''மு.கா. தலைவரிடம் ஒரு ஆணைக்குழு அமைத்துத் தருமாறு கேட்டோம். அவர் தருவதாக வாக்குறுதியளித்தார்... ஆனால்...?''



## வடக்கு முஸ்லிம்கள் தொடர்பில் மு.கா. பிரதிநிதி ரவூப் ஹக்கீம் :

# புத்திஜீவித் தனமானதும் அரசியற் தனமானதும்!

''நேற்று பாராளுமன்றத்திலே அவசரகால சட்ட நீடிப்பு விவாதம். வழமையாக ஒவ்வொரு மாதமும் இந்த நாட்டிலே அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கும், யுத்தத்தை முன்கொண்டு செல்வதற்கும் அவசியமான மிக முக்கியமான விவாதமாக நாங்கள் மாதாந்தம் இதை நடாத்தி வருகிறோம். எல்லோரும் கூடி நடக்கிற இவ்விவாதம் நேற்று மிக உக்கிரமாக நடைபெற்றது. எதிர்த்தரப்பிலே கிளிநொச்சியை இழந்தது பற்றி அரசாங்கத்துக்கு வசை பாடினார்கள். அரச தரப்பிலே மாங்குளத்தைக் கைப்பற்றியது பற்றி பெரிய சிலாகிப்புக்கள். இவ்வாறு எதிரும் புதிருமாக இரண்டு தரப்பினரும் தங்கள் வீரபிரதாபங்களை மிகக் காரமாகக் காட்டிக்கொண்டிருந்தார்கள்.''

''இன்று இந்த நாட்டிலே யுத்தமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இராணுவம் யுத்தத்தில் பின்னடைகையில் அது பற்றி எதிர்க்கட்சி அரசாங்கத்தையும் அதில் ஈடுபட்டுவரும் அரசியல்வாதிகளையும் விமர்சித்து வருகிறது. அதேவேளை பின்னடைவுகளைச் சந்தித்தாலும், அவை பின்னடைவுகள் அல்ல, எங்கள் போராட்டத்தில் நாங்கள் காணுகின்ற மைல்கற்கள் என்ற அடிப்படையிலேயே, ஈற்றிலே நாம் வெற்றியடைவதற்கான முனைப்பான ஒரு உத்தியின் அடிப்படையில் ஈடுபட்டு வருகிறோம் என்ற தோரணையில் தான் அரசாங்கத் தரப்பிலே கதைக்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் புலிகள்பற்றிக் கதைக்க யாருமில்லை. ஒரு சில தமிழ் உறுப்பினர்கள் ஆங்காங்கே யுத்தத்தால் பாதிக்கப்படுகிறவர்கள் பற்றி அரசாங்கத்துக்கு எடுத்துரைக்கும் வகையில் கதைப்பார்கள்.

முஸ்லிம் பா.உக்கள், முஸ்லிம்கள் ஆங்காங்கே தாக்கப்படுவது பற்றி அவ்வப்போது பேசுவார்கள். நேற்று தோட்டத் தொழிலாளர் தொடர்பில் அண்மைய இரத்தினபுரிச் சம்பவம் தொடர்பாக பேசிய ஒரு உறுப்பினர் மிக ஆக்ரோஷமாகப் பேசினார். 'இனிமேல் நாங்கள் அடித்துக் கொண்டிருக்கப் பொறுக்க மாட்டோம். அடித்தால் திருப்பியடிப்போம்' என மிக ஆக்ரோஷமாகப் பேசினார். இப்படி நிறையப் பேச்சுக்கள் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் அவர்களுடைய இனம் பாதிக்கப்படும் வேளையில் அது பற்றி கதைக்கப்படுகிறது''


''புலிகள் சார்பிலே அவர்களின் வெற்றிகளைப் பற்றி பிரஸ்தாபிக்கவும், அதன் பின்னடைவுகள் பற்றிப்பேசவும் பாராளுமன்றத்தில் யாருமே இல்லை. இங்கு கடந்த பல வருடமாக நடந்து வரும் யுத்தத்திலே எவ்வளவு தான் புலிகள் பின்னடைவுகளைச் சந்தித்தாலும் ஒவ்வொரு பின்னடைவுகளின் பின்னணியிலும் யுத்த தந்திரோபாயங்கள் இருக்கின்றன என்ற அடிப்படையில் தான் அவர்களுடைய போராட்டத்தை முன் எடுத்துச் செல்கிறார்கள். ரிவிரச நடந்து யாழ்ப்பாண தீபகத்தை படைகள் கைப்பற்றினார்கள். இன்று தீபகற்பம் அரச கட்டுப்பாட்டில் இருப்பதாகப் பேசப்படுகிறது. அதற்கு மத்தியிலேயே மூன்று பிரிகேட் கொமாண்டர்கள், இரண்டு மேயர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சிவில் நிர்வாகம் அங்கு சீர்குலைந்திருக்கிறது. எனவே வடக்கு கிழக்கு மாகாணத்திலும் வெறுமனே 5%மான பிரதேசத்தைக் காப்பதற்காக 40 ஆயிரம் படையினரை அரசாங்கம் அங்கு குவித்துள்ளது. எனவே, அரசாங்கத்துக்கு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற விட்டது தமது யுத்த உபாயம் என்று மறைமுகமாக புலிகள் இன்று சொல்லிக் கொண்டிருக்கின்றனர். சத்ஜய நடந்தது, கிளிநொச்சியைக் கைப்பற்றவென்று. ஆனால், இப்போது புலிகள் வசமாகி விட்டது அது. 'எடிபல' மன்னார்ப் பிரதேசத்தை கருத்திற்கொண்டு 'மடு' ஊடான பாதை திறப்பதற்காக இடம் பெற்றது. இப்போது மன்னார் இராணுவ வசமா உள்ளது என்பது கேள்விக்குறி. எனவே படிப்படியாக நடக்கின்ற யுத்தங்களிலே புலிகள் பின்னடைவுகளையே சந்திக்கவிலலையென்ற தோரணையில் அங்குமிங்குமாக பேசிக் கொள்கிறார்கள். யுத்த உபாயங்களிலேயே நாம் இருக்கிறோம் எனக் கூறுகின்ற புலிகள், அதை மறைமுகமாக உணர்த்துகிற புலிகள், அவர்களுடைய வரலாற்றிலேயே சந்தித்த பெரிய பின்னடைவு இருக்குமானால் அவர்கள் வடபுலத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியதாகத் தான் இருக்கும். எந்த உபாயத்தின் அடிப்படையில் அவர்கள் வெளியேற்றினார்கள் என்பது யாருக்கும் இதுவரை தெரியாது. அது புதிரானது. யுத்த உபாயம் என்று சொல்லவும் அவர்களுக்குத் தைரியமிருக்க முடியாது. இந்த நாட்டில் மட்டுமல்ல உலக வரலாற்றிலேயே, உலகில் அங்குமிங்குமாக வாழும் தமிழர்கள் மத்தியிலே ஒரு வரலாற்று அவமானம் இருக்குமென்றிருந்தால், அது வடபுலத்திலிருந்து முஸ்லிம்களை விரட்டியது என்று தான் வரலாறு சொல்லும். இந்த அவமானம் குறித்து எவ்வளவு தான் இன்று வருந்திக் கதைத்தாலும் அதற்கான பூரண இழப்பீட்டை மீளவும் வடபுலத்திலேயே முஸ்லிம்கள் தங்களுடைய சொந்த நிலத்திற்கு மீளச் சென்று வாழ்வதற்கான சூழலை அவர்கள் பெற்றுக் கொடுக்காத வரையிலே அந்த வரலாற்று வடுக்கள் அவர்களின் முகங்களில் என்றைக்குமே இருக்கும். ஆனால், மேடைகளில் நாளும் இவ்வாறு முழங்குவதால் மட்டும் இந்த முயற்சியிலேயே நாம் வெற்றி பெற்று விடமுடியாது.

''NMRO வடபுலத்து முஸ்லிம்கள் மீளக்குடியேறும் விடயத்தில் மிகத் தீவிரமான முயற்சிகள் எடுத்து வருவதை நாம் அறிவோம். பல கட்டங்களில் NMROக்கும் ஸ்ரீ.ல.மு.காவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஓர் அரசியல் இயக்கம் என்ற வகையில் அதன் செயற்பாடுகளில் விமர்சனங்கள் செய்யப்படுவது நியாயமானது. அதன் பின்னணியில் இருக்கின்ற NMROவின் ஆதங்கத்தின் அடிப்படை வடபுலத்திலிருந்து பெயர்ந்த முஸ்லிம்கள் தங்களுடைய மண்வாசனையை சுவாசிப்பதிலிருந்து அவர்களை எந்த சக்தியும் தடுத்து வி க்கூடாது என்ற அடிப்படையில் இருப்பதால் அந்த விமர்சனங்கள் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் எந்தவி த்திலும் விசனப்படவில்லை; வருந்தி விடவில்லை. அவர்களுக்கு உரிமை இருக்கிறது. வடபுலத்து மக்கள் மண்ணுக்கு மீண்டும் வாழச்செல்ல வழிவகுக்கும் தார்மீகப்பொறுப்பு மு.காவுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டின் தன்மானமுள்ள முஸ்லிம்களின் எண்ணத்தில் இருக்க வேண்டிய விஷயமாயிருக்கிறது. வடபுலத்து முஸ்லிம்கள் மீளச்சென்று குடியேறுவதில் அனைத்து ஆதரவையும் பெற்றுக் கொடுக்கின்ற முயற்சியில் உதவி செய்கின்ற தார்மீகப் பொறுப்பு எனக்கு மட்டுமல்ல என் கட்சிக்கு மட்டுமல்ல, அனைத்து அரசியல் தலைமைத்துவங்கள் மீதும் சுமத்தப்பட்டிருக்கிறது....''

''புலிகள் பேச்சுவார்த்தைக்கென மேடைக்கு வருகின்ற போது வடபுலத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களின் உரிமை சம்பந்தமான விடயம் அந்தப் பேச்சுவார்த்தையின் நிகழ்ச்சி நிரலிலே முக்கிய அம்சமாக இடம்பெற வேண்டும் என்பதிலேயே மு.கா திட்டவட்டமாக இருக்கிறது. அணுகுமுறைகளில் எம்மிடையே வித்தியாசமிருக்கலாம். புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட காரியங்களில் ஒரு சில விமர்சனங்கள் இருக்கலாம். புனர்வாழ்வு அமைச்சூடாகச் செய்யப்படும் சொந்தக் காணிகளிலான குடியேற்ற எண்ணத்தை, தங்கள் மண்வாசனையை மறந்துவிடுவார்களோ என்ற ஆதங்கம் NMROவுக்கு இருக்கிறது. இதன் பின்னால் இருக்கிற யதார்த்தங்களை மு.கா உணர்ந்து கொள்கிறது. அதை அங்கீகரிக்கிறது. இதன்பின்னால் எந்த மறைமுகப் பின்னணிகளும் முஸ்லிம் காங்கிரசுக்கு இல்லை''

*(புத்தளம் தில்லையடியில் 10.10.1998 அன்று இடம் பெற்ற கூட்டமொன்றில்...)*

நன்றி - நூலகத்திட்டம்



பாலினம் மற்றும் தேச வழமைச் சட்டம் பற்றி...

# சீர் திருத்தப்பட வேண்டிய தென்னாசிய சம்பிரதாயபூர்வச் சட்டங்கள்!

முத்துகிருஷ்ணா சர்வானந்தன். வேல்ஸ் பல்கலைக்கழகம், இங்கிலாந்து.

(இறுதிப்பகுதி)

*தேசவழமைச் சட்டமும் பெண்களின் வறுமையும்:*

இந்தப் பகுதியின் நோக்கம், தென் ஆசியாவின் சம்பிரதாயபூர்வமான உரிமையாட்சி சட்டங்கள் பொருளாதார, சமூக, கலாசார துறைகளில் பால் சமத்துவத்திற்கு விரோதமானவை என Bina Agarwal (1994 a & b) முன் மொழிந்த அனுமானத்தை பரீட்சிப்பதற்கான ஒரு நிகழ்ச்சிக் கற்கையாக இலங்கையின் 'தேச வழமை' சம்பிரதாய சட்டத்தின் விமர்சனப் பகுப்பாய்வு ஒன்று மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் பகுதி அதிக அளவில் IAWID (1994, P 29-32) இலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடமாகாண தமிழரை 'தேசவழமை'ச் சட்டம் ஆட்சிபுரிகிறது. இச்சட்டத்தின் கீழ்வரும் விதிகளாவன;

(1) தேசவழமைச் சட்டம்,

(2) விவாக உரிமைகளும் உரிமையாட்சி (யாழ்ப்பாணம்) சட்டம் 1947, மற்றும் (3) Law of Pre- emption of 1947. இந்த சாசனங்கள் வடமாகாண தமிழர்களின் சொத்துரிமையையும், விவாக உரிமைகளையும் ஆட்சி புரிகின்றன.

மூலப் படிவத்தில் 'தேச வழமை', 'மருமகதயம்' (கேரளத்தின் பெண்வழி சட்டம்) மற்றும் தென் இந்திய ஆண்வழி இந்துச் சட்டங்களினதும் ஒரு கலவை ஆகும். காலப்போக்கில் இந்த மூலபடிவம் வடக்கு தமிழர்களின் 'சம்பிரதாய சட்டமாக' அவர்களின் 'மலபார்' அங்கத்தவரின் சம்பிரதாயங்களை பிரதிபலிக்கும் விதத்தில் விருத்தியுற்றது.

வடமாகாண தமிழர்கள் இலங்கையின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் 'தேசவழமை'ச் சட்டத்தினால் பிணைக்கப்பட்டுள்ளனர். ஏனைய தமிழர்கள் இலங்கையின் பொதுச் சட்டத்தினால் ஆட்சி செய்யப்படுகின்றனர் (இது ரோமன் - டச்சு சட்டம்).

'தேசவழமை'ச் சட்டம் பெண்களுக்கு பொருள்மீது 'சொத்துரிமை' வழங்குகிறது. ஆனால் அவற்றின் மீது 'அதிகாரம்' (ஆட்சி) ஒப்படைக்கவில்லை. பெண்கள் சொத்துக்களின் 'முதுசத்திற்கும்' (தகப்பன் வழி உரிமையாட்சி) 'உரிமைக்கும்' (தகப்பன் வழியற்ற உரிமையாட்சி) உரியவர்களாவர். பெண்கள் தமது சீதனத்தை (பணம் மற்றும் சொத்து இரண்டையும்) வைத்துக் கொள்ள உரித்துடையவர்களாவர். இதனைவிட, பெண்கள் 'தேடிய தேட்டத்தின்' (திருமணத்தின் பின் இருவராலும் அல்லது ஒருவரால் சம்பாதிக்கப்பட்ட சொத்துக்களும் செல்வமும்) அரைப்பங்கிற்கும், மற்றும் திருமணத்திற்கு முன் அல்லது விவாகரத்து, விதவை நிலை ஏற்பட்ட பின் போன்ற கையிருப்பில் இருந்த சொத்துக்களுக்கும், செல்வத்திற்கும் உரித்துடையவர்களாவர்.

பெண்கள், சொத்துக்கள் மீது உரிமையுடையவர்களாயினும், அவர்கள் கணவரின் எழுத்துமூல ஒப்புதல் இன்றி அசையா சொத்துக்களை நிர்வகிக்கவோ, முதலீடு செய்யவோ (வியாபாரத்தில்), அடமானம் வைக்கவோ, குத்தகைக்கு விடவோ, விற்கவோ அனுமதிக்கப்படவில்லை. பெண்களுக்கு சட்டமன்றத்தில் 'Locus Standi Stande' இல்லை. மற்றும் இதிலிருந்து அவர்கள் ஒரு வழக்கில் சிறார் (Minor) போன்றே நடாத்தப்படுகின்றனர். இதன் விளைவாக ஒருவரும் எந்தவொரு பெண்ணுடனும், அவரது கணவனையும் சேர்க்காமல், தனிமையாக ஒரு ஒப்பந்தம் செய்ய முற்படார். ஆகவே, 'தேச வழமை'ச் சட்டம் பெண் மீது பெயரளவிலான சொத்துரிமையை அளிக்கின்றபோதும் அச்சொத்துக்கள் மீதும் செல்வம் மீதும் உண்மையான ஆட்சியதிகாரத்தை வழங்கவில்லை.

அதாவது, பெண்களின் தனிமையான சொத்துக்கள் ஆயினும் சரி, பொது சொத்துக்கள் ஆயினும் சரி, ஆண்களே அவற்றின் மீது நிறைவேற்று ஆட்சியதிகாரமும், கட்டுப்பாடும் கொண்டுள்ளனர். ஆயினும், 1947ம் ஆண்டு சட்டத் திருத்தத்திற்குப்பின், ஒரு கணவன் துணைவியின் பேரில் வாங்கிய ஒரு பொருளை (சொத்தை) அவரின் எழுத்துமூல ஒப்புதல் இன்றி விற்க இயலாது. சில சந்தர்ப்பங்களில், பெண்கள் தமது சொத்துக்களை கணவரின் ஒப்புதல் இன்றி குத்தகைக்கு விட இயலும் என சட்டமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

'தேசவழமை'ச் சட்டத்தின் கீழ், சொல்லளவில், பெற்றோரின் சொத்துக்களில் பெண்பிள்ளைகள் சமனான உரிமையாட்சிக்கு உரித்துடையவர்கள். ஆயினும், நடைமுறையில், பெற்றோரின் சொத்துக்களை உரிமையாளுபவர்கள் ஆண்பிள்ளைகள் தான். அதாவது, பெண்பிள்ளைகள் சீதனம் பெற்றிருந்தால் மற்றும் ஆண் சகோதரர்களை கொண்டிருந்தால், கூடியளவில் பெற்றோரின் சொத்துக்களை உரிமையாள மாட்டார்கள்.

'தேடியதேட்டம்', 'தேசவழமை' சட்டத்தின் ஒரு தனித்துவமான அம்சமாகும். 'தேடியதேட்டம்', திருமணத்தின் பின் ஒருவரால் அல்லது இருவராலும் வாங்கப்பட்ட சொத்துக்கள், மற்றும் இருவருள் ஒருவரின் சுதந்திர உரிமை கொண்ட சொத்துக்களில் இருந்து பெறப்பட்ட இலாபங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கியதாகும். இவையாவன, கணவன் மற்றும் துணைவியினால் பகிர்ந்து கொள்ளப்படும் பொதுவுடைமைகளாகும். அதாவது, கணவனால் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்ட சொத்தாயினும் அதன் அரைப்பங்கு துணைவிக்கு சொந்தமாகும். மேலும், கணவனின் மரணத்தின் போது, உயில் எழுதாத சொத்துக்களின் தன்னுடைய அரைப்பங்கிற்கு மேலாக தனது கணவரின் பங்கின் அரைவாசிக்கும் துணைவி உரித்துடையவர் ஆவார் (அதாவது, மொத்தத்தில் முக்கால் பங்கு). இதிலிருந்து 'தேடியதேட்டம்' சொந்தமாக சொத்துக்கள் வாங்கக் கூடிய சந்தர்ப்பம் மிகக்குன்றிய வகையில் வீட்டுத்துணைவியருக்கு ஓரளவு பொருளாதாரப் பாதுகாப்பினை வழங்குகிறது. (ஆனால், மற்றைய பெண்களுக்கு அவசியமாக அல்ல). இருப்பினும், இது ஒரு பெயரளவிலான பாதுகாப்பே ஒழிய உண்மையானது அல்ல. (கணவர் உயிருடன் இருக்கும் போது) ஏனெனில், துணைவி ஒரு பகுதி சொந்தம் கொண்டாடும் சொத்துக்களை சுதந்திரமாக நிர்வகிக்கவோ, முதலீடு செய்யவோ, அடகு வைக்கவோ, குத்தகைக்கு விடவோ, விற்கவோ சட்டம் அனுமதிக்கவில்லை.

தற்போதைய போர்ச் சூழ்நிலையில், 'தேசவழமை'ச் சட்டம், அதனால் பிணைக்கப்பட்ட பெண்களுக்கு கூடுதல் கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. உள்ளூர் போர் பல குடிமனைகளை பெண் - தலைமை கொண்டதாக ஆக்கியுள்ளது. ஏனெனில், பல ஆண்கள் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர், மற்றும் மேலும் பலர் உள்ளூரில் ''காணாமல் போயுள்ளனர்''. இவை பெண் தலைமைத்துவ குடிமனைகளை தமிழர்கள் மத்தியில் அலையாய் அதிகரிக்கச் செய்துள்ளது. கணவர்கள் இல்லாமையால் (வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளதால்) பெண்கள் தமது சொத்துக்களை விற்கவோ, உற்பத்தித்திறன் கொண்டதாக்கவோ இயலாமல் உள்ளது. இதனைவிட, ''காணாமற் போன'' ஆண்கள் விடயத்தில், பெண்கள் தமது சொத்துக்களை விற்கவோ, உற்பத்தித்திறன் கொண்டதாக்கவோ இயலாதுள்ளது. ஏனெனில், தமது ''காணாமற்போன'' கணவன்மார்களுக்கு இறப்புச் சான்றிதழ் பெறுவது என்பது மிகக் கடினமான ஒரு விடயமாகும். இப்படியான சந்தர்ப்ப சூழ்நிலையில் சாதாரணமாக, பெண்கள் சட்டமன்றங்களை தமது சொத்துக்கள் சம்பந்தமான செய்கைகளை அங்கீகரிக்கும்படி வேண்டிக் கொள்ளலாம். இருப்பினும், சமர் நடைபெறும் இடங்களில் சட்டமன்றங்கள் இயங்காமையினால் நீதிபெறுவதற்கான இந்த வழி நழுவப்படுகிறது.

மீதித் தமிழர்களை பிணைக்கும் இலங்கையின் பொதுச் சட்டத்தின் அடிப்படையில் பெண்கள் ''திருமணமான பெண்களின் சொத்துச் சட்டத்தின் (Married Women's Property Ordinance)'' கீழ் சுதந்திர சொத்துரிமைக்கும் அதிகாரத்திற்கும் உரித்துடையவர்கள் ஆவர். திருமணத்தில், சொத்துக்களுக்கும், செல்வத்திற்கும் மீதுள்ள உரிமையும் அதிகாரமும் சம்பந்தமாக பெண்கள் ஒரு தனிநபராகவே கருதப்படுகின்றனர். பெண்கள் தமது சொத்துரிமைக்கு கீழ் உள்ள சொத்துக்களையும், செல்வத்தையும் கணவரின் ஒப்புதல் இன்றி நிர்வகிக்க, முதலீடு செய்ய, அடகுவைக்க, குத்தகைக்கு விட அல்லது விற்க முடியும். அதாவது, சட்டமன்றத்தில் பெண்களுக்கு 'Locus Standi' உள்ளது, மற்றும் அவர்கள் 'Femme - Sole' ஆக கருதப்படுகின்றனர்.

எவ்வாறாயினும், பொது சட்டத்தின் கீழ் 'தேடியதேட்டம்' வழங்கும் பொருளாதார, பாதுகாப்பு பெண்களுக்கு கிடைக்கப் பெறவில்லை. இதிலிருந்து, பொதுச் சட்டத்தின் கீழ் குடிமனை - சார்ந்த பெண்கள் நஷ்டம் அடைந்தவர்களாக ஆகலாம். இருந்த போதிலும், என்றும் அதிகரித்து வரும் ஊதிய மற்றும் சம்பள வேலையில் ஈடுபடும் பெண்களினாலும் மற்றும் சமூகத்தில் பெண் தலைமை கொண்ட குடிமனைகளினாலும் 'தேசவழமை' முழுமையாக சீர்படுத்தப்பட வேண்டிய ஒரு பிற்போக்கான சட்டம் ஆகும்.

'தேடியதேட்டம்' குடிமனை - சார்ந்த பெண்களுக்கு ஒரு பொருளாதார பாதுகாப்பு மூலமாயினும், இது வீட்டுப்பெண்கள் உட்பட்ட அனைத்து பெண்களினதும் சமூக, கலாசார விடுதலைக்கு கேடுவிளைவிக்கின்றது. 'தேசவழமை'யின் கீழ் ஒரு 'சுதந்திர தனிநபர்' ஆக அங்கீகரிக்கப்படாத சுபாவத்தால் பெண்கள் சமூகத்தில் இரண்டாந்தர பிரஜைகளாக தாழ்த்தப்பட்டுள்ளனர். இது. சமூகத்தில் பெண்ணியத்தின் சுய - நம்பிக்கை மற்றும் சுய - மதிப்பு போன்றவற்றின் மீது ஆழ்ந்த விளைவை கொண்டுள்ளது. அதாவது, 'தேடியதேட்டம்' குடிமனை - சார்ந்த பெண்களுக்கு ஓரளவு பொருளாதார நன்மை பயக்கும் ஆயினும், கலாசார, சமூக ரீதியாக அல்ல.



### முடிவு

தொகுப்பில், தென் ஆசியாவில், சொத்துக்களின் மேல் உள்ள சொத்துரிமையிலும், அதிகாரத்திலும் உள்ள பால் வேற்றுமைதான் பாலின சமமின்மைக்கும், குறிப்பாக வறுமையின் பால் பகுப்பிற்கும் அதி முக்கிய நிச்சயகாரணி எனும், Bina Agarwal இனால் முன்மொழியப்பட்ட அனுமானத்திற்கு முன் கூறிய பகுப்பாய்வுகள் மேலும் உரமூட்டுகிறது. தென்னாசியாவின் சம்பிரதாயபூர்வமான உரிமையாட்சி சட்டங்கள் தான் சொத்துக்களின் மீதுள்ள சொத்துரிமையிலும் அதிகாரத்திலும் உள்ள பால் பாகுபாட்டிற்கான பிரதான காரணிகள் ஆகும்.

ஆகவே, பால் சமமின்மை மற்றும் குறிப்பாக வறுமையின் பால் பாகுபாடு ஆகியவற்றினை ஒழிப்பதற்கு தென்னாசியாவின் சம்பிரதாயபூர்வமான உரிமையாட்சி சட்டங்கள் முழுமையாக சீர்திருத்தப்பட வேண்டும். எமது நிகழ்ச்சிக் கற்கைப்படி வடக்கு சமூகத்தில் நிலவும் பால் சமத்துவமின்மையும், குறிப்பாக வறுமையின் பால் பகுப்பையும் வெற்றிகொள்வதற்கு 'தேசவழமை'ச் சட்டம் முழுமையாக சீர்திருத்தப்படுதல் ஒரு முன் - தேவை ஆகும். இந்த மாற்றத்தின் அவசியத்தினை நடைபெறும் உள்ளூர் சமரினால் எழும் பெண்களின் துர்ப்பாக்கிய நிலை வலியுறுத்துகிறது. இதைவிட, சீதனம், உடன் சட்டபூர்வமற்றதாக்கப்பட வேண்டும். ▭

# உரிமை மறுப்பிலும் உயர்ந்த சிறுவன்:
# முஸ்லிம் சமூகத்திலிருந்து ஒரு நாடகம்.

கடந்த செப்டெம்பர் மாதம் 15ம் திகதியன்று மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் நலன்புரித் திணைக்களத்தினர் அரங்கக் கலைகளின் போட்டி நிகழ்ச்சியொன்றை கல்லடி விவேகானந்தா பெண்கள் கல்லூரி மண்டபத்தில் நடத்தி முடித்தனர். அங்கு தாளலயம், வில்லிசை என்பனவற்றுடன் காத்தான்குடி சிறுவர் இல்லத்தினரின் **''உரிமை மறுப்பிலும் உயர்ந்த சிறுவன்''** என்னும் நாடகமும் இடம்பெற்றது. இந்நிகழ்த்துகைகளின் வெளிப்பாட்டில் சிறுவர் துஷ்பிரயோகத்தின் பல படிவங்களையும் புலப்படுத்தல் முதன்மை பெற்று இருந்தது.

இங்கு இடம்பெற்ற நிகழ்த்துகைகளில் கலந்து கொண்ட சிறுவர்கள் யாவரும் அநாதைச் சிறுவர்களாவர். இவர்கள் இளமையிலேயே அனாதரவற்ற நிலைக்குள்ளாகி அவர்களின் எதிர்காலத்தைச் செப்பனிடுவதை நோக்காகக் கொண்டு சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்பட்டோர்.


இன்றைய எமது சூழலில் சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகள் முக்கிய பிரச்சினைகளாக உருவெடுத்துள்ளன. எமது சூழலில் சிறுவர்களின் சிதைவில் பல காரணிகள் தாக்கம் செலுத்திய போதும் வறுமை, யுத்தத்தின் தாக்கம் என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கன. அனாதைச் சிறுவர்களின் உருவாக்கத்தில் யுத்தமே கூடியளவு தாக்கம் செலுத்துகின்றது. நாட்டிலேற்படும் உயிரிழப்புக்கள் பல சிறுவர்களைக் கதியற்றவர்களாக்குகின்றன. இது இன்றைய எமது நாட்டின் தவிர்க்க முடியாத அவலமாக உள்ளது. யுத்த கால சூழ்நிலையின் பின்னர் மாத்திரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 அனாதைச் சிறுவர் இல்லங்கள் ஆரம்பித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் நலன் புரித்திணைக்களத்தின் தகவல் தெரிவிக்கின்றது.

இக்கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிறுவர்கள் யாவரும் அனாதைச் சிறுவர்களாக இருந்ததால் அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட பிரச்சினைகள் யாவும் அவர்களால் அனுபவித்து உணரப்பட்டவையாக இருந்தன. அவர்களின் அனுபவ எல்லையைத் தாண்டாதவையாக அமைந்திருந்ததால் தங்களை வெளிப்படுத்தலே இங்கு முக்கியத்துவம் பெற்றிருந்தது. கலையில் வெளிப்படுத்தல் சொந்த அனுபவத்தின் ஊடாக வரும் போது அதன் வெளிப்பாட்டுத் திறன் சக்தி வாய்ந்ததாக அமைவது தவிர்க்க முடியாததே.

இக்கட்டுரையில் காத்தான்குடி சிறுவர் இல்லத்தினர் அளிக்கை செய்த 'உரிமை மறுப்பிலும் உயர்ந்த சிறுவன்' என்னும் நாடகம் தொடர்பான பார்வை மிகவும் அவசியமானது எனக் கருதுகின்றேன். இந்நாடகம் தொடர்பான பார்வையை வெளிப்படுத்தல் வேண்டும் என்னும் நோக்கே இக்கட்டுரையை வரையத் தூண்டியது.

முஸ்லிம் சமூகத்திலே அரங்கக் கலை நிகழ்த்துகைகள் மிகவும் குறைவாகவே உள்ளன. தான் இன்னொரு வேடம் தாங்கல் கூடாது, மேடையேறி நடிக்கக் கூடாது என்னும் மரபுகளுக்கு முஸ்லிம்கள் கட்டுப்பட்டு வாழ்வதால், அரங்கக் கலைச் செயற்பாடுகளைத் தவிர்த்து வந்தனர். ஆனால், சமீப காலங்களிலே மாறிவரும் ஒரு நிலைமையை உணரக் கூடியதாக உள்ளது. குறுகிய கால இடைவெளிக்குள் முஸ்லிம்களின் இரண்டு மேடை நிகழ்வுகளைக் கண்டு ரசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஒன்று இங்கு குறிப்பிடும் நாடக நிகழ்த்துகை, மற்றையது திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் தமிழ் இலக்கிய விழாவிற்காக கல்முனைப் பிரதேசப் பாடசாலையினால் வழங்கப்பட்ட 'மாப்பிள்ளை அழைப்பு' என்னும் கலாசார நிகழ்ச்சி. இவற்றைவிட கல்முனைப் பிரதேசத்தில் மேலும் சில அரங்க முயற்சிகள் இடம்பெற்று வருவதாக அறியக் கூடியதாக இருந்த போதும் அவற்றைக் கண்டு ரசிக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இவ் அவதானிப்புக்கள் முஸ்லிம் சமூகத்தில் அண்மைக் காலங்களில் அரங்க முயற்சிகளில் ஆர்வம் ஏற்பட்டுள்ளதைப் புலப்படுத்துகின்றது. இவ்விரு நிகழ்ச்சிகளையும் கொண்டு முஸ்லிம் கலாசாரப் பாரம்பரியத்தையும் அவர்களின் அரங்கியல் ஆர்வத்தையும் மட்டக்களப்பின் அரங்க வளர்ச்சியில் முஸ்லிம் சமூகத்தின் நாடகச் செயற்பாட்டின் நிலையையும் கணிப்பிடக் கூடியதாக இருந்தது. இப்பின்னணியிலேயே இந்நாடக நிகழ்த்துகையின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது.

உரிமை மறுப்பிலும் உயர்ந்த சிறுவன் என்னும் இந் நாடகத்தை காத்தான்குடி அனாதைச் சிறுவர் இல்லத்திற்காகத் தயாரித்தவர் ஓய்வுபெற்ற ஆசிரியரான எம்.எம்.எம்.பாருக் என்பவராவார். இவரை ஒரு நாடகத் தயாரிப்பாளராகவோ, நாடகத் துறையுடன் தன்னை இணைத்துக் கொண்டவராகவோ கொள்ள முடியாது. நாடகம்



தொடர்பாக அவருக்கு உள்ள புலமை மிகக் குறைவானதாகவே தெரிந்தது. இருந்தும், முஸ்லிம் சமூகம் பற்றிய பின்புலத்தின் ஊடாக அனாதைச் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அவர் வெளிப்படுத்திய விதம் பாராட்டத்தக்கது.

நாடகம் மட்டக்களப்பின் நாடகப் பாரம்பரியத்தில் நாடகம் பற்றிய புலமை அற்ற நிலையில் அநேகமான நாடகத் தயாரிப்பாளர்களால் வெளிப்படுத்தப்படும் சினிமாப்பாணி வெளிப்பாட்டு முறையில் இருந்து பிரிந்து யதார்த்த நாடக உத்திகளை இணைத்து மேடையில் மலர்ந்தது.

விபத்தில் தாய், தந்தையரை இழந்த சிறுவனை முதுமையின் கடைக்கட்டத்தை அடைந்த தாத்தா சிறுவனின் கல்விச் செயற்பாட்டைத் தொடர்தல், பிழைப்பூதியத்திற்கான ஒரு தொழிலைக் கற்றுக் கொடுத்தல் என்னும் இரு நோக்கங்களுக்காக ஒரு கடையில் வேலைக்கு அமர்த்துகின்றார். அங்கு தனது நோக்கத்துக்கு மாறாக சிறுவனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட துன்புறுத்தலைக் கண்டு சிறுவனைத் தன்னுடன் இணைத்து தன்னுடைய தொழிலான தச்சு வேலையை சிறுவனுக்குக் கற்றுக்கொடுக்க முன்வருகின்றார். பின் சிறுவன் ஒரு மௌலானாவால் அறியப்பட்டு ஒரு அநாதை இல்லத்தில் சேர்க்கப்பட்டு கல்வியைத் தொடர்ந்து ஒரு வைத்தியனாக வெளிவருகின்றான். தன்னை இம்சித்த கடை முதலாளியையே வைத்தியம் செய்து குணப்படுத்தும் ஒரு நிலையுடன் ''நன்மை செய்தால் நன்மை விளையும், தீமை செய்தால் தீமை விளையும்'' என்னும் அறப்போதனையுடன் நாடகம் முடிவடைகிறது.

முஸ்லிம் சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பில் வர்த்தகம் பெறும் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தி பணத்தைச் சம்பாதித்தலும், அதன் மூலம் பெறும் சௌகரியமான வாழ்வை உயர்வாக மதித்தலும் பிரதானப்படுத்தப்படுவதையும், மனிதம் மனிதத்துவம் என்பன எள்ளி நகையாடப்படுவதையும் சூசகமாகச் சுட்டிக்காட்டி அதன் மூலம் அனாதைச் சிறுவர் பற்றிய சித்திரிப்பை மேற்கொண்டுள்ளார்.

மேடையில் வியாபாரத் தளம், தச்சு வேலை செய்யும் இடம், வைத்தியச் சிகிச்சை நிலையம் என்பன காட்சிகளாக மலர்ந்தன. சிறுவர்கள் யாவரும் தாங்கள் அனுபவித்த பிரச்சினைகளாக இருந்ததால் நடிப்பு என்பது அவர்களிடம் இருந்து இயல்பாக வெளிப்பட்டது. இது இயல்பை மீறாத நடிப்புக்கு பெரும் பங்களிப்புச் செலுத்தியது. தனக்குள் தான் அனுபவித்த பிரச்சினையை ஒரு கலைஞன் புலப்படுத்த முற்படுகின்றபோது அங்கு இயல்பு நடிப்பு முறையை முழுமையாகப் பயன்படுத்தலாம் என்பதை இங்கு விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

நாடக உருவாக்கத்தில் உடை, ஒப்பனை, பேச்சு போன்ற பலவும் முஸ்லிம் கலாசாரப் பின்புலத்தில் நின்றே ஒழுங்கமைக் கப்பட்டிருந்தது. இருந்தும் சிறுவனுடன் முதலாளி கோபமாகப் பேசும் போது சிங்கள இராணுவ வீரன் ஒருவன் தமிழில் பேசும் முறையில் பேசினார். இங்கு இவ் உரையாடலை இயல்பில் நின்று ஆசிரியர் மாற்றியமைத்தது ஏன் என்று நோக்க வேண்டியிருந்தது. அதிகாரத்தின் ஆதிக்கத்தின் மொழியாக சிங்களத்தைக் குறியீடாகப் பயன்படுத்தினாரா? அல்லது ஆதிக்க சக்திகளுக்கு கட்டுண்டு வாழ்ந்த மக்கள் தங்களைப் புலப்படுத்தும்போது அவர்களில் இருந்து இயல்பாகப் புலப்பட்ட மொழியாக இது அமைந்ததா? எனச்சிந்திக்க வேண்டியிருந்தது.

நாடகம் சிறப்பான முறையில் கட்டமைத்து வளர்த்துச் செல்லப்பட்ட போதும், நாடக வெளிப்பாட்டில் சில பின்னடைவுகளையும் இனங்காணக் கூடியதாக இருந்தது. நாடகப் பாத்திரங்கள் யாவும் இயல்பான முறையில் தங்கள் அனுபவங்களைப் புலப்படுத்தி நடித்த போதும் அனேகமான இடங்களில் உரையாடலுக்குக் கொடுத்த முக்கியத்துவம் உரையாடலுடன் இணைந்த உணர்வு நிலைப்பட்ட நடிப்புக்குக் கொடுக்கப்படவில்லை. இதனால் சில இடங்களில் ஆசிரியரின் யதார்த்தச் சித்திரிப்பு முழுமை பெறவில்லை.

நாடகத்தின் இறுதியில் ஆசிரியர் நீண்டதொரு போதனைக்கு முக்கியத்துவம் கொடுத்து நீண்ட தொரு உரையாடலை வளர்த்துச் செல்கின்றார். அப்பகுதியைத் தவிர்த்திருந்தால் அல்லது தேவைக்கேற்ப அதில் சில பகுதிகளை குறைத்து இருந்தால் நாடக ஓட்ட த்தில் தளர்வு ஏற்படாமல் இருந்திருக்கும்.

நாடகக் கட்டமைப்பு, பாத்திரங்களின் வளர்ச்சி என்பன ஒரு இலட்சியப் பாத்திரத்தை ஆசிரியர் கட்டி வளர்க்க எடுத்த முயற்சியைக் காட்டி நின்றன. இதனால் சமூகத்தில் அடிபட்டுப் போகும் அனாதை ஏழைச் சிறுவர்களின் முழுமையான பார்வையை வழங்கத் தவறி விடுகின்றார். இலட்சியமயப்பட்ட பாத்திரச் சித்திரிப்பைத் தவிர்த்து இருந்தால் அனாதைச் சிறுவர்களின் சிதைவின் முழு வடிவத்தையும் கொண்டு வந்து இருக்க முடியும்.

இவ்வாறு நாடகத்தில் சில விமர்சனத்துக்குரிய பகுதிகள் இருந்தபோதும் முஸ்லிம் சமூகத்தில் இருந்து உருவான அவர்களின் அரங்கியல் ஆர்வத்தைப் பிரதிபலிக்கும் ஒரு முன்னோடி முயற்சியாகவே இதைக்கொள்ள வேண்டும். இவர்களுக்கு உள்ள நாடக ஆர்வம் புதிய தேடல்களுக்கு வழி வகுக்குமாயின் இவர்களின் நாடகச் செயற்பாட்டை வளமூட்டி இன்னும் பல கட்டங்களுக்கு வளர்த்துச் செல்ல உதவும். அது முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால நாடகச் செயற்பாடுகளுக்கு வளமூட்டும் முயற்சியாக அமையும். இந்நிலையில் சிறுவர் நன்நடத்தைத் திணைக்களத்தின் இப்போட்டி நிகழ்ச்சி மட்டக்களப்பின் நவீன அரங்க வளர்ச்சியின் முக்கியமானதொரு முயற்சியாகவே கொள்ளப்பட வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் நாடகச் செயற்பாடு தொடரட்டும்...

**வடிவேல் இன்பமோகன்**

---

## ஒரு நாள் நதிச் சொர்க்கம்

இறுக்கிப் பிணைந்து இருந்த
துயர் வரிகளினூடு
நீ விடுவித்து
சலீரென துள்ளி
ஓடும் ஒரு
நதியின் நினைவுகளாய்
ஆகினாய்

பளீரிடும் சூரிய
சிதறல்கள் தாங்கி
சலசலத்து
ஓடியும் நின்றும்
நிதானித்தும் ஓடாது
அசைவற்றதாய் படுத்து
போக்கு காட்டியும்
திடீரென பாய்ந்து
நுரைச் சிதறல்களை அள்ளித்
தெறித்து விட்டு ஓடுமே
நதியின் நீர் வீழ்ச்சி
அதுவாய் எனக்குள்
உன் ஞாபகங்கள்...
ஏன்
உண்மையில் நீ
அன்று ஒரு
நதியாகவே ஆகினாய்
பாரடி

உன் ஒரு துளி
மூச்சுக் காற்றில்
என் கோடி நரம்புகளின்
புத்துயிர்ப்பும்
சிறு விரல்களின் கலப்பில்
பல் கோடி கவிதைகளின்
ஊற்றெடுப்பும்

அசம வெளிகள் தோறும்
ஏறியும், இறங்கியும்
காட்டுச் செடிகளின் சிறு
பூக்களை நுகர்ந்தும்
ரசித்தும் அடர்
மரங்கள் நிரப்பியும்
நிரப்பா வெளிகளிலும்
தழையத் தழைய நடந்தும்
நடந்த என் பாதங்கள்
சேற்றில் புதைய
உன் பாதங்கள் புதையா
காத்த கணங்களும்
அர்த்தமற்று வீணாய்க் கழியும்
என் வாழ் நாளில்
அர்த்தங்கள் நிறைந்த
அற்புதங்கள் நிகழ்ந்த
சொர்க்க நாழிகைகள்

விரைதலும்
ஆகாசப் பசி கொண்ட
இலக்கற்ற தேடலும்
தேடியதைப் பெற முன்பே
அதைத் தொலைத்தலும் ஆகி
போன
நரகங்களும்
சுய நல மனங்களும்
காக்கைகளின் எச்சங்களின்
நாற்றமும் நிறைந்த
நாட் கழிதல்களின்
போது தானடி
நீ
நதியாகிப் பிரவகித்து
ஓடிய ஒரு
வசந்த நாளின் வருகையும்
வந்தது. போனது

இனி என்ன
இப்படியான இன்னொரு நாளின்
வருகை வரும் வரையில்
இந்நாளின் நினைவுகளில்
தனிமையில் நான்
சிலாகித்து சிரித்து
சில கணங்களில் அழுது
வாழ்வை மெய்ப்பிக்க வேணுமடி
தோழி

**ரஜீசன்**

06031998

நன்றி - நூலகத்திட்டம்

# புழுதி

அ. இரவி

வந்தபோதும் புழுதி பறந்தது. இதென்ன காற்று? ஆட்களையே தூக்கி எறிகிறது. பனைகள் கிறீச்சிட்டபடி ஆடுகின்றன. அவரவர்கள் தலையைக் குழப்பியபடி செல்கின்றனர். பலர் விறகு பொறுக்கப் பனங் காணிக்குள் செல்கின்றனர். காவோலை, கொக்கறை, பன்னாடை, பாளை என்று கையில் அகப்பட்டதைப் பொறுக்குகின்றனர். அணில் கோந்திய நுங்குகள் விழுகின்றன. ஒற்றைக் கண் அல்லது இரட்டைக் கண் கோந்தியபடி இருக்கின்றது. நுங்கின் மூளை வெட்டி, ஒற்றைக் கண்ணை விரலால் தோண்டி, பணிவில் வழித்து சிறுவர்கள் குடிக்கிறார்கள். வாழ்வு கசந்து போய் இருக்கிறது. ஆயினும் நுங்கு இனிக்கிறது. கள்ளு மிகவும் ருசியாக இருக்கின்றதாக சிலர் பேசிக்கொள்கின்றனர். அத்துடன் நிறையக் கள்ளும் பனையில் இருந்து ஒழுகுவதாகக் கூறுகின்றார்கள். அனேகமான கோவில்களில் திருவிழாக்கள் நடப்பதால் தூரத்து லவுட்ஸ்பீக்கரிலிருந்து பாடல்கள் சன்னமாகக் கேட்கின்றன. நிறைய வேர்க்கின்றது கோடைக்கு சோளகத்தின் குளிர்மை சந்தோசமளிப்பதாக சிலர் நினைக்கின்றனர். புழுதி மணத்துக் கொண்டிருக்கிறது. ஒரு மழை தூறினால் போதும். புழுதி மணம் மூக்கை நிரப்பும். ஆனால் மழை தூறாது.

தேவன் இந்த ஊருக்கு வந்தது இந்தச் சோளகத்தை ரசிப்பதற்கல்ல; புழுதியை மணப்பதற்கல்ல. அவன் இங்கு கடை ஒன்று நடத்துவதற்கு ஆயத்தங்கள் செய்தான்.

தேவன், சுந்தர வாத்தியாரிடம் சென்றான். கடைக்கு நூறு ரூபா வாடகை என்றார். தஞ்சிட்டிச் சந்தியில் முகப்பில் இரட்டைக் கடையாக இருக்கிறது. அது அவ்வளவாக விளங்காத கடை என்பது தேவனுக்குத் தெரியாது. தேவன் அயலூர்.

சுந்தர வாத்தியார் கடை கட்டிய புதிதில் மகன் ஆனந்தனை கடையில் இருத்தினார். லாச்சியில் காசுசேர, ஆனந்தன் கள்ளு தருவித்துக் குடித்தார். வாசிகசாலை பக்கம்தான் என்றாலும், ஆனந்தன் வாங்குகிற பேப்பர் பார்க்க சிலர் கூடுவர். ஆளுக்கு ஒருவராக, ஒரு துண்டுடன் வாசிக்கத் தொடங்கினால் வாய்த்தர்க்கம் வரை போகும். முருகையாவும் சிறீகாந்துவும் வெட்டுப்பட்டார்கள். தஞ்சிட்டிச் சந்தியில் நடந்த இரண்டு சம்பவங்கள் ஆனந்தனிற்கு தொடர்ந்து கடை நடாத்தும் தைரியத்தைக் கொடுக்கவில்லை. ஒன்று, சங்கக்கடை லொறி ஒன்றிற்கு குணமண்ணர் தஞ்சிட்டிச் சந்தியில் வைத்துக் கல்லெறிந்தார்,. அந்த லொறி கடைக்குப் பக்கத்தில் உள்ள பனையில் மோதி நின்றது. அப்போது மழை பெய்து கொண்டிருந்தது. மோதிய பனையிலிருந்து பனம்பழம் ஒன்று லொறியின் கூரையில் விழுந்தது. விமான நிலையத்தில் வந்திறங்கும் பிரதமரை வரவேற்கச் சென்ற சனம் லொறிக்குள்ளிருந்து திக்குமுக்காடியது. பொலிஸ் வந்த பிறகு அல்லோல கல்லோலப்பட்டது.

இரண்டு, அதுவும் குணமண்ணையின் வேலையாக இருக்க வேண்டும். ஒரு பஸ்ஸைக் கடத்தி வந்து, தஞ்சிட்டிச் சந்தியில் ஆனந்தன் கடைக்கு முன்னால் பெற்றோல் ஊத்திக் கொளுத்தினர். அன்றைக்குப் பிறகு ஆனந்தன் கடைதிறக்கிற பாடாக இல்லை.

கோபாலண்ணை கடையைப் பொறுப்பேற்ற காலத்தில் இப்படியொரு அனர்த்தமும் நிகழவில்லை. ஆனந்தன் செய்த ஒரேயொரு வேலையை அவரும் செய்தார். கள்ளு தருவித்துக் குடித்தார். அவரது சிக்கல் வேறுவிதமாக இருந்தது. ஒரு பெண்ணைத் தூக்கியதில் பிரச்சினை முளைத்தது. கடை திறந்து அவ்வளவு காலம் இல்லை. பழம் பிள்ளையார் கோயில் பக்கத்தில் மணல் கும்பியில் பொலிடோல் குடித்துச் செத்துப் போய்க் கிடந்தார் கோபாலண்ணை.

தேவன்.. இவையொன்றும் தெரியாதவனாக இருந்தான்.

வியாபாரம் சுமாராய் நடந்தது. சிறிது நாட்கள் பொறுத்தான். தாயையும், தங்கையையும் இங்கு கூட்டி வந்து குடும்பம் நடாத்தலாம் என்றுபட்டது. கடைக்கும் காவலாகிறது. ஓய்ந்துபோக ஒரு நேரம் கிடைக்கிறது. சாப்பாட்டுப் பிரச்சினை குறைகிறது. கண்ணுக்கு முன்னே அவர்கள் தென்படுகிறார்கள். அது நல்லது. கடையின் பின்னே சிறிய அறை



இருக்கிறது. பின்னால் தட்டு அடித்துவிட்டால் சமைக்கலாம்.

பத்தாயிரம் ரூபா வட்டிக்கு எடுத்தது. நானூறு ரூபா வட்டி.

ஒரு நாள் இரவு, கடைமுடிந்து கதவைப் பூட்டிய பிறகு கணக்குப் பார்த்தான் தேவன். மாதா மாதம் வட்டியை ஒழுங்காகக் கட்டுகிறான். எவ்வளவு மாதங்கள்? ஆனியோடு ஆனி பதின்மூண்டு. ஆடி பதினாலு. ஆவணி பதினைஞ்சு. புரட்டாசி பதினாறு, ஐப்பசி பதினேழு, கார்த்திகை பதினெட்டு, மார்கழி பத்தொம்பது. தை இருபது. பனிக்குளிரில் அதைத் தேவன் எண்ணினான். இருபது மாதம் நானூறு ரூபா வட்டி. வட்டியா எண்ணாயிரம் கட்டியாச்சு. இன்னும் அஞ்சுமாசம் கட்டினால் அது தான் முதலாகிவிடும். ஆனால், முதல் ராட்சசனாகி, மலைபோல ஒன்றும் அதனை அசைக்க முடியாதிருந்தது.

இருபத்திரண்டு வயது. அறுபதாம் ஆண்டு பிறந்தவள். தேவன் வந்து குதித்து மூன்று வருடத்தால் தாயின் வயிற்றால் குதித்தவள். கலியாணம்? அது யோசிக்க வேண்டிய விசயம். சீதனம்? எங்கை போகலாம்? பாவம் தங்கச்சி. அல்லது அண்ணனா?

உழைப்பிலை கொஞ்சத்தை சேமிக்கலாம்; சேமிக்க வேணும். அது எப்படி? வட்டிக்கும் கட்டவும், சாப்பிடவும் சரியாக இருக்கிறது. சனிக்கிழமைகளில் சின்னமணி கிடாய் அடித்தால் இப்போது இறைச்சிக் குடலையையும் வாங்குவதில்லை.

அம்மா புலம்பிக் கொண்டிருக்கிறார் - வீட்டையும் ஈடுவைச்சு எடுத்த காசு.

இருபது மாதமானால் இதற்குள் நிறைய மாற்றங்கள் நடக்க வேண்டும். நடந்தது. அண்ணன் தேவனுக்கும், தங்கைக்கும் அம்மாவிற்கும் இந்த ஊர் மிகப் பரிச்சயமானது.

சின்னத்தம்பி என்ன சாதி என்று தெரிந்தது. வல்லிபுர வாத்தியார் என்ன சாதி என்று அதுவும் தெரிந்தது. செல்லப்பனின் இரண்டாவது மகள் சின்னக் கணேசிற்குப் பிறந்தது என்று அதுவும் தெரியும். பறைமேளப் பிரச்சினையால் ஒரே சாதி இரண்டாய் நின்று அடிபடுகிற கதையும் தெரியும். அம்மாவிற்கு அக்கம் பக்கத்தில் நல்ல சினேகிதம். கடையிலிருந்து கோயில் தாண்டி ஒரு கல் வீடு. அம்மா பொழுதுபட அங்கு போவார். கதைக்க என்ன இருக்கிறதோ? நாளும் நாளும் கதைக்க புதினங்கள் பெருகிக் கொண்டே போகும். அம்மா வீடு திரும்பும்போது இரவு பத்து மணிக்கு மேலிருக்கும். அனேகமான தினங்களில் ''அண்ணை படத்துக்குப் போட்டார்'' என்று தங்கை சொல்வாள்.

அண்ணன் ஒன்பது மணிக்குக் கடை பூட்டி, உடனே சாப்பிட்டு, பத்துமணிப் படத்துக்குப் போவான். அயலில் அநேக ஊர்களிலும் தியேட்டர் இருக்கிறது. கூட்டிப்போக பாஸ்கரன், பாலன் வருவார்கள். ஒரு முறை, ஒரேயொரு முறை படம் என்று விட்டு வேறொரு படத்திற்குப் போனான். தியேட்டருக்குப் போகவில்லை. பாலன், பாஸ்கரனுடன் போனான். போனபோது அங்கு வேறுசிலரும் [illegible]றனர். எல்லாம் தெரிஞ்ச முகங்கள். வெட்கமாக இருந்தது.

கடை தாண்டி வாத்தியார் வீட்டு முன் ஒழுங்கையால் இறங்கினால் கிறவல் றோட்டு வரும். அந்த றோட்டில் சைக்கிளில் போனால் சைக்கிள் காற்றுப் போகாத நாள் கிடையாது. அன்று காற்றுப் போகவில்லை. கிறவல் றோட்டால் அங்கால் இறங்கினால் 'கிறஸர்' போஸ்றறில் வயர் கொளுவி, கரண்ட் எடுத்து, ரீவி, டெக் வைத்துப் படம் பார்த்தார்கள். ஆளுக்குப் பத்துரூபா கேட்டான் கிருபா. பாம்பும் வரலாம்; பல்லியும் ஊரலாம். அப்படியொரு பத்தை. பார்த்த படம் 'அந்த' மாதிரி இருந்தது. தேவன் அன்றிரா நித்திரை கொள்ளக் கஷ்டப்பட்டான். ''மூண்டு தரம்'' எண்டு அடுத்த நாள் பாலனுக்குக் கண்சிமிட்டி, வம்புச் சிரிப்புச் சிரித்துச் சொன்னான்.

''என்ன அண்ணை ராத்திரி நித்திரை கொள்ளேல்லையோ?'' என்று தங்கை கேட்டாள்.

தங்கைக்கு இரண்டு, மூன்று பேர் பழக்கம். ஒட்டுறவில்லாத சினேகம். மலரக்காவுடன் போய்க் கதைத்துக் கொண்டு நிற்பாள். அம்மா நின்றால் சரி. அல்லது அண்ணைக்குச் சாப்பாடு கொடுக்க, தேத்தண்ணி கொடுக்க அந்த நேரத்திற்கு நிற்பாள். சில பெடியங்களிலை விருப்பம். கதைக்க வேணும். சிரிக்க வேணும். பாலனின் முகம் நன்றாகச் சிரிக்கும். அண்ணையின் நண்பன். அவள் கதைக்கப் பிரியப்படுவதை முகம் சொல்லும். சிரித்தபடி அவள் கதைக்க வருவாள்.

ஒரு பெடியனுக்கு இவளில் விருப்பம். ஏதோ ஒரு லிங்கத்தில் முடியும் பெயர். சிவலிங்கமோ, நாகலிங்கமோ, சண்முகலிங்கமோ அவன் இவளை விரும்பினான்.

ஆனால், எல்லாவற்றிற்கும் காலம் என்ற ஒன்றிருக்கின்றது. அதனை வகுத்திருந்தார்கள் வல்லோர்கள். இவள் காலத்துக்காகக் காத்திருந்தாள். வயது வீட்டுக்குள் போகின்றது. அண்ணன் ஆண். பொறுப்பான். அவள் காலம் வரவேண்டும். அவன் தங்கை பெண். காலம் போனால் போனது தான். கலியாணம் கனியாது.

தங்கை ஒவ்வொரு செவ்வாயும் வலு ஒழுங்காக துர்க்கையம்மன் கோயிலுக்குப் போனாள். காலையில் எழுந்து குமாரசாமியண்ணையின் தோட்டக் கிணத்துக்குப் போனால், எப்படியும் ஓர் இறைப்பு நடக்கும். தலை அலசி நன்றாகத் தோயலாம். சவர்க்காரத் தண்ணி தோட்டத்துக்குப் போகக் கூடாது. அது ஒன்றுக்குத்தான் குமாரசாமியண்ணை ஏசுவார். வாளியில் தண்ணீர் எடுத்து வெளியில் சவர்க்காரத்தைக் கழுவி விட்டுப் பிறகு தோயலாம்.

தோய்ந்து வெளிக்கிட்டு றோட்டிற்கு வந்தால் தட்டி வான் அல்லது பஸ் வரும். அனேகமாகத் தட்டி வான் தான்.

கோயில். கும்பிடு. உலாத்து. கடலைக் கொட்டை. மதியச் சாப்பாட்டிற்கு வீடு வந்து விடலாம். மரக்கறியுடன் தயிர் விட்ட நல்ல சாப்பாடு. சில செவ்வாய்களில் மதியச் சாப்பாடு. மூன்றரை நாலுமணிக்கும் சாப்பிடுவதுண்டு. மதிய வெய்யிலுக்குக் குளிர் வீசத்தக்க ஓரிருவன் வருவான் போவான். அன்றைக்கென்று அவளுக்குத் தட்டிவான் நிறைந்து வழியும்.

அண்ணன் - அவன் தேவன் தன்னளவில் கடுமையாக உழைக்கிறான். ''உனக்கென்ன உன்ர மோனும் முதலாளியாயிட்டான்'' என்று ஆரும் அம்மாவுக்குச் சொன்னால், அம்மா, வீடு ஈடுவைச்ச துண்டையும், மற்றும் நிறைய அடைவு வைச்ச துண்டுகளையும் எடுத்துக் கொண்டு வந்து காட்டுவாள். இந்தத் துண்டுகள் வைக்க வென்று ஒரு நகைப்பெட்டி இருந்தது. அந்தப் பெட்டியில் ஒரு காலத்தில் நகைகள் இருந்தன. நகைகள் இருந்த காலத்தில், குட்டியைக் கௌவிக்கொண்டு திரிகின்ற பூனைபோல, அம்மா ஒவ்வொரு நாளும் பெட்டியை இடம் மாற்றுவாள். ஒரு இரவில்

→

நன்றி - நூலகத்திட்டம்



அம்மாவின் தலையணையின் கீழ் இருக்கும். ஒரு இரவில் பெட்டகத்துள் உறங்கும். ஒரு இரவில் அரிசிப் பானைக்குள் ஒளிக்கும். ஒரு இரவில் குசினிப் பாத்திரங்களுடன் இன்னொரு பாத்திரமாய் இருக்கும். இப்போது அதற்கெல்லாம் தேவையிருக்கவில்லை. நகைப்பெட்டிக்குள் அடைவுத் துண்டுகள் இருக்கின்றன.

அடைவுத் துண்டுகளை உணர்ந்து தானோ என்னவோ மைந்தன் தேவன் கடுமையாக உழைக்கிறான். விடிய எழும்பி பண்டத்தரிப்புக்குப் போய் மாமூட்டை, அரிசி மூட்டை, மரக்கறிகள், மற்றும் சில்லறைச் சாமான்கள் வாங்கி வருவான். பண்டிகை நாட்களில் வாழ்த்து மடல்கள் வாங்கிக் கொள்வான். பொங்கல் நாளில் வெடி வகைகள் நிறைய வைத்திருப்பான். தட்டி வானிலிருந்து மூட்டையைத் தட்டிவிட்டு தட்டி வானைப் போகச் சொல்வான். அங்கு நிற்கும் யாரோ ஒருவரைப் பிடித்து கடைக்கு மூட்டையை எடுத்துச் செல்வான்.

பகல் முழுநேரமும் கடையைத் திறந்து வைக்கிறான். காலையில் மஞ்சள் தெளிப்பான். செவ்வாய், வெள்ளியில் சுவாமிப் படங்களுக்குச் சரம் கோர்ப்பான். மதிய நேரங்களில் வியாபாரம் கொஞ்சம் படுக்கை. மதிய நேரத்துக் கடும் வெயிலில் தூரத்துச் சுடலையில் இருந்து ஆவி ஆடும். பார்த்தபடி கண்ணயர்வான். அயர்ந்து போவிடாதபடிக்கு அந்த நேரம் சிலர் வந்தார்கள். அவர்கள் நண்பர்களானார்கள். நண்பர் குழாம் வளர்ந்து பெருகிற்று. லிங்கமும் அந்த நண்பர் குழாத்தில் சேர்த்தி.

வெய்யில் உச்சியைப் பிளக்கும் சில காலங்களில் கடைக்குப் பின் பக்க வேலியோடு ஒரு போத்தல் கள்ளு இருக்கும். செல்லப்பன் வைத்து விட்டுப் போவார். எல்லா நாட்களும் என்றில்லை. சித்திரை மாத வெய்யிலுக்குப் பிறகு, ஆவணி மாத வெய்யிலுக்கு முன்னம்.

எல்லாம் சரிதான். என்றாலும் தேவன் பொறுப்பானவன். தங்கையின் கலியாணம் பற்றி யோசிப்பான். காலாகாலத்திலை அதது நடக்க வேணும். தங்கச்சி துர்க்கை அம்மன் கோயிலுக்கு ஏழு செவ்வாய்களுக்கு மேல் வலு ஒழுங்காகப் போகிறாள். கலியாணம் நடந்திருக்க வேணும். நடக்கவில்லை. தன்னிலும் பிழைதான். அதற்கான ஆயத்தங்கள் செய்திருக்க வேண்டும்.

தாயிற்குச் சினேகம் பெருகியதும், தேவனிற்குச் சினேகிதர்கள் கூடியதும், பல வழிகளில் நட்டத்தைத்தான் கொண்டு வந்தது. பலர் வாங்கினார்கள். கடையில் கடன் வாங்கினார்கள். லிங்கம் ஒரு நாள் அவசரமாகப் படத்துக்குப் போகவேண்டுமென்று காசு கூடக் கடையில் கடனாக வாங்கினான். பார்த்துக் கொண்டிருந்த சுப்பையா வாத்தியார், ''தம்பி, காசு கூட இப்ப கடனா குடுக்க வெளிக்கிட்டிட்டியோ? அடைவு கடை எண்டு எழுதிப் போடலாமே?'' என்று நக்கல் அடித்தார்.

கடன் வாங்கினால் கடை உருப்படுமா? அதற்காத் தானே ''நீங்கள் நாணயமானவர் தான். ஆனால், நாங்கள் தான் கடன் கொடுக்க முடியாத நிலையிலிருக்கிறோம்'' என்றும், ''உறவுக்குப் பகை கடன்'' என்றும் கடைகளில் மட்டை மாட்டி வைத்திருக்கிறார்கள், தேவனும் அதனை மாட்டி வைத்திருக்கிறான் தான்.

யார் அதனைக் கவனத்தில் எடுத்தார்கள்? பலரில் சிலர்தான் கடனை ஒழுங்காகக் கட்டி வந்தார்கள். வாத்தியாரம்மா கடன் புத்தகமும் காசும் மாதம் முடியக்கொண்டு வருவார். மற்றவர்கள் ஒன்றிரண்டு நாள் பிந்தும். முந்தும். பலர் கடன் பற்றியே கதை இல்லை. சின்னையன் தரவளிகள் கடனைக் கேட்டால் முறைப்பார்கள். சிலர் அசடுவழியச் சிரிப்பார்கள். சிலர் இப்பதாறன் பின்னை தாறன் என்பார்கள். வெளியில் கடனாகவே அதிகம் இருந்தது.

கடை சிதைய ஆரம்பித்த காரணங்களில் இது மிக முக்கியமானது. தேவன் இதனையிட்டு இரவுகளில் யோசித்தான். கடன் கொடுக்காமல் புது வழிகளைக் கையாண்டு பார்த்தான். பலர் ஒளித்து அழகரண்ணையின் கடைக்குப் போனார்கள். கடன் கொடுத்தால் தான் வாடிக்கையாளர் பலரைக் கையிற்குள் வைத்திருக்கலாம். இது நச்சுவட்டம். இந்தச் சுழல் வட்டம் தேவனை மிக மோசமாகப் பாதித்தது. இப்போது மதியத்தில் செல்லப்பனிடம் இரண்டு போத்தல் கள்ளு வைக்கச் சொன்னான் தேவன்.

இப்பவெல்லாம் கடைக்குள் அவ்வளவாக சாமான்கள் இல்லை. கடை தொடங்கும் போது கடைக்குள் தன்னை வைத்து எடுத்த கலர்ப் படம் கடையில் மாட்டப்பட்டிருக்கிறது. சுவாமிப் படத்துடன் மினைக் கெடுவதிலும் பார்க்க அந்தப் படத்தைப் பார்ப்பதிலேயே நேரத்தைச் செலவளிப்பான் தேவன். படத்தைப் பார்த்துப் பிறகு கடையைப் பார்ப்பான். மிக அசாதாரணமாக வெளியாகிறது கடை. பிள்ளை வளரும் விதம் தாயிற்குத் தெரியாது போல, கடைவெளியாகிறவிதம் அவனுக்குத் தெரியா மல் போனது.



அவனுக்கு அப்படித் தெரியாமல் போன இன்னொரு விசயம் பிறகு தெரியவந்தது. தங்கைக்கு ஆரோடையோ சினேகிதமாம். லிங்கன் எண்ட பெடியனாம். அண்ணன் கேள்விப் பட்டான். மனது குறு குறுத்தது.

கடைக்கு முன்னால் ஒரு செட்டி நாகம் படமெடுத்துவிட்டு சரசரவென ஊர்ந்து ஓடி ஒளிய, தம்பிப்பிள்ளை கிளுவங்கதியால் முறித்து ஒரு அடியில் செட்டி நாகத்தின் மூஞ்சையைச் சப்பளித்த காட்சி தேவன் முன் சடாரெனத் தோன்றியது.

# புழுதி

அண்ணன் அவன். ஆண் மகன். அவனால் என்ன செய்ய முடியும்? அடித்தான். உதைத்தான். கிளுவங்கதியால் முறிக்கவில்லை. ஆனால், அடித்தான். மூஞ்சையைச் சப்பளிக்கவில்லை. ஆனாலும் உதைத்தான்.

தங்கை என்ன செய்வாள்? அவள் பெண். இவன் உப்பைத் தின்றவள். அவள் மௌனமாகி இருந்தாள்.

அவள் மௌனம் இவனிற்கு இன்னும் வேகத்தைக் கொடுத்தது. நல்ல அடி. முறையான உதை.

அவள் உறைந்து போயிருந்தாள். அவன் வேகம் இன்னும் வீறு கொண்டது. பலமான அடி. காலகாலத்திற்கும் மறக்கவொண்ணா உதை.

ஈற்றில் நிமிர்ந்து அண்ணனை அவள் ஒரு பார்வை பார்த்தாள். கசப்பா, வெறுப்பா, என்ன பார்வை அது? எல்லாம் கலந்த ஒரு பார்வையா?

அண்ணன் துடித்துப் போனான். அன்றுதான் முதன் முறையாக செத்துப்போன குடிகாரத் தகப்பனின் மீது வெறுப்பு வந்தது. குடித்து குடித்தே குடும்பத்தைச் சீரழித்த கொடுமையில் ஆத்திரப் பட்டான். அப்பனாம் அவன். மண்ணாங்கட்டி.

அன்றைக்குக் கடை பூட்டப்பட்டிருந்தது. அண்ணனவன் இனிப் பேசாது இருந்தான். எல்லோரிடமும் கதையைக் குறைத்துக் கொண்டான். உள்ளே எதுவோ கனன்று கொண்டிருந்தது.

அன்றைக்குப் பிறகு தங்கையும் கொஞ்சம் அடக்கம். துர்க்கையம்மனையும் மறந்தாயிற்றுப்போல. செவ்வாயில் அவள் தன்னை அழகு படுத்தவில்லை. அம்மாவும் அப்படியே இரவுப் புறப்பாட்டை நிறுத்திக்கொண்டாள். ஒரு குளிர் அடிக்கிறது என்பது போல இரவுகளில் குடங்கிப் படுத்தார்கள்.

தேவன் சில இரவுகளிலும், சில பகல்களிலும் யோசித்துப்பார்த்தான். அதுதான் சரி போலப்பட்டது. பாலச்சந்திரன் அப்படித் தான் செய்தான். அதுதான் சரி.

பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பம் செய்தான். காசுபுரட்டுவது பெரிய வேலையாக இருந்தது. இவனை நம்பி யார் காசு தருவார்கள்?

தந்தார்கள். நிறையக் கரைச்சல் பட்டதில், நிறைய வட்டி கொடுக்க ஓமென்றதில் கிடைத்தது. நகைகளை இரவல் வாங்கி அடைவு வைத்ததில் கிடைத்தது.

எல்லாம் சரிவரும் கடன் வாங்கிய காசைக் கொடுக்கலாம். ஈடு வைத்த வீட்டை மீட்கலாம். அடைவு வைத்த நகைகளை எடுக்கலாம். யாவற்றுக்கும் மேலாக தங்கைக்கும் கலியாணம் கட்டலாம். எல்லாம் சரி வரும். இளநுங்குபோல நினைவு இனித்தது.

எந்த நாடு? ஏதோவொரு நாடு. நல்லாய் உழைக்கக் கூடிய நாடு. சிங்கப்பூர் அல்லது டுபாயாக இருக்கலாம். ஏஜென்சியை அணுகிய போது அது சவூதி அரேபியாவாக இருந்தது. அது பரவாயில்லை. எந்தநாடு என்பதல்ல இங்கு முக்கியம். உழைக்க வேண்டும்.

ஏஜென்சிக்குக் காசு கட்டி ஆயத்தங்கள் செய்து மௌனமாக ஒரு நீண்ட இடைவெளி இருந்தது. சித்திரை மாதத்து வெயிலுக்கு பனைகள் ஆடாது அசையாது உறங்கியது போல. வெயிலில் கிளுவைகளின் நிழல்கள் அந்த நீண்ட தெருவிலே நித்திரை கொண்டது போல.

வீட்டு வாடகையும், கடை வாடகையும் வீணாகக் கொடுத்துக் கொண்டு இருப்பதிலும் பார்க்க ஊரில் போனால் கொஞ்சக் காசாவது மிஞ்சும். சாப்பிட முடியும்.

ஊரெல்லாம் புழுக்கம் நிறைந்திருந்தது. காற்று சரியாக வீசவில்லை. இலைகளும், மரங்களும் அசங்காமல் உட்கார்ந்திருந்தன. பலரின் உடம்பில் தேவையில்லாமல் வியர்வை ஒழுகிக்கொண்டிருந்தது. ராசையர் தன்னைப் போர்த்த வேண்டாம் என்று சொல்லி தலை மயிரை வெட்டிக் கொண்டிருந்தார். சூரியன் றோட்டில் தாரை உருகப் பண்ணியிருந்தான். கண்மணியக்கா, துடித்துத் துடித்து செருப்பில்லாமல் றோட்டில் நடந்தார். மக்கள், இல்லாத காற்றையும், எரிக்கின்ற சூரியனையும் திட்டிக் கொண்டிருந்தனர். அது வைகாசி மாதம்.

அந்த மாதத்து மாலையில் உடுப்புகள், தட்டுமுட்டுச் சாமான்கள், பெட்டிபடுக்கைகள் எல்லாம் கட்டப்பட்டு றோட்டில் அடுக்கி வைக்கப்பட்டு, ஊரில் தெரிந்தவர்களுக்கு பயணம் சொல்லப்பட்டு, பிறகு தாயையும், தங்கையையும் கூட்டி வந்து தட்டி வானுக்காகக் காத்து நின்றான் தேவன்.

ஊரெல்லாம் ஒதுங்கிப்போக, நிறைய நேரத்திற்குப் பிறகு வந்த தட்டிவான் புறப்பட்டபோது கையை ஆட்டினான் தேவன்.

அந்தச் சூழலுக்குப் புதியனவாகி திடீரென்று இந்த வருடத்திற்கான சோளகத்தின் ஆரம்பம் உசுப்பியது: வலியனபோல் அவை வீசின. சோளகக் காற்றின் வீச்சில் எழுந்த புழுதிப் படலத்தில், தேவன் கண்களைக் கசக்கினான் போலத் தெரிந்தது. அத்துடன் எனக்கும் என் நண்பன் தேவனுக்கும் இடையிலான உறவு மங்கலாகத் தெரிந்தது. தட்டிவான் மங்கலாகத் தெரிந்ததைப்போல.

**பிற்குறிப்பு:**

*இரண்டு வருசத்துக்கு மேலாகியும் தேவன் இன்னும் வெளிநாடு போகவில்லை. ஏஜென்சிக்காரன் இன்னும் அவனை அனுப்பி வைக்கவில்லை. ஏமாற்றிக் கொண்டிருக்கிறான். இதற்கிடையில் தங்கை யாருடனோ ஓடிவிட்டதாகக் கேள்வி. அவன் அதனை உணர்ந்தான். அவன் பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் காதல் பண்ணி அவளை வீட்டில் கொண்டு வந்து வைத்திருக்க வேண்டியதாகிப் போனது. பிள்ளை பிறக்க இருந்த சிரமத்தைச் சில நூறு கொடுத்துச் சமாளித்து விட்டான். அது தவிர்க்க முடியாத நிகழ்ச்சி. தாய் இவனுடன் கோபித்துக் கொண்டு எங்கேயோ வாழ்கிறார். காசு கட்டாத பட்சத்தில் வீட்டினை சுவீகரித்துக் கொள்ளப் போகிறார்கள்.*

*இவன் ஒரு கடையில் சாமான் கட்டிக் கொண்டிருக்கிறான். அடிக்கடி ஏமாற்றிய ஏஜென்சியிடம் போய் காசையாவது திருப்பி தரச்சொல்லிக் கேட்கிறான். அவனுக்கு அதனால் அலுப்பில்லைப் போலும். அவன் உழைக்கும் காசு ஒரு வேளை சாப்பிடப் போதுமானதாக இருக்கிறது. சில விசேட நாட்களில் இரு நேரம் சாப்பிடுகிறார்கள். தாயார் மாமனாருடன் வாழ்வதாகக் கேள்விப் பட்டான். தங்கை ஓடிய ஊரையும் அறிந்து கொண்டான். குறிப்பிடும்படியான நிகழ்ச்சி யாவரும் மெலிந்திருக்கிறார்கள் என்பதே.*

நன்றி - நூலகத்திட்டம்

## "சிறந்த வானொலி நாடகங்களைத் தயாரிப்பது ஒன்றும் கடினமானதல்ல!"

பி. விக்னேஸ்வரன்

(இறுதிப் பகுதி)

இதேநேரம் தமிழ்ச்சேவை ஒன்றில் இரவு எட்டு மணி தொடக்கம் ஒன்பது மணிவரை ஒலிபரப்பான இஸ்லாமிய சேவையிலும் தமிழ் நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டன. இந்த ஒலிபரப்பு நேரம் அனைவரும் நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு வாய்ப்பான நேரமாகையால், நாடகங்களில் ஆர்வம்கொண்ட தமிழர்களும் இந்நாடகங்களைத் தவறாது கேட்டுவந்தார்கள். இந்த நாடகங்களில் நடிகர்களின் பேச்சும் நடிப்பும் இந்தியத் திரைப் படப் பாணியில் அமைந்திருந்தன. மேலும் இந்த நாடகங்களைத் தயாரித்த குத்தூஸ் அவர்கள் மிகுந்த இசை ஞானம் கொண்டவர். வடநாட்டு சாஸ்திரிய சங்கீதத்தை முறைப்படி கற்றவர். இவர் நாடகங்களுக்கு உபயோகிக்கும் இடை இசை மற்றும் பின்னணி இசை போன்றவற்றால் முஸ்லிம் சேவை நாடகங்கள் இந்தியத் திரைப்படங்களின் ஒலிச் சித்திரங்களைக் கேட்பது போன்ற பிரமையை ஏற்படுத்தின. இஸ்லாமிய நாடகங்களை எழுதுவதற்கென ஒரு குறிப்பிட்ட திறமைமிக்க எழுத்தாளர்கள் இருந்தார்கள். நடிப்பதற்கென ஒரு குறிப்பிட்ட நடிகர் குழாம் இருந்தது. குத்தூஸ் அவர்களின் முழுக் கவனமும் நாடகத்தை இசையினால் மெருகேற்றுவதாகவே இருக்கும். இதில் குத்தூஸ் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார். நிலையத்தில் எந்தக் கலையகத்தினுள் அவர் போகும் போதும் ஒரு நல்ல இசை காதில் கேட்டால் உடனே அந்த இசைத்தட்டை எடுத்து, அதன் இசைத் தட்டுக் காப்பகப் பதிவெண்ணைக் குறித்துக்கொள்வார். பின் தகுந்த சந்தர்ப்பங்களில் அந்த இசைத் தட்டைக் காப்பகத்திலிருந்து எடுத்து நாடகங்களில் பாவிப்பார். இந்த முறையை நானும் பின்பற்ற ஆரம்பித்தேன். இந்த வகையில் ஆங்கில சேவை ஒன்றில் இரவு நேரங்களில் கடமையாற்றும்போதெல்லாம் Music For Mellow Mood என்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகும் மனதை உருக்கும் இசைகளைக் கேட்டுக்கொண்டே இசைத்தட்டுக்களின் சுட்டிலக்கங்களை நான் ஒரு பதிவுக் கொப்பியில் பதிவு செய்து வைத்திருந்தேன். இந்த இசைகளை பின் நான் கண்ணாடி வார்ப்புகள், ஒதெல்லோ, இன்ஸ்பெக்டர் துரை போன்ற மொழிபெயர்ப்பு நாடகங்களை வானொலிக்கெனத் தயாரித்தபோது பாவித்தேன். அவை அமோக வரவேற்பைப் பெற்றன. இதேபோல் இந்தி, தெலுங்கு, மலையாளம், மலாய், அரபி என்று எந்த மொழிநிகழ்ச்சித் தயாரிப்பிலும் நான் கடமையாற்றும் போது, நல்ல இசைத் தட்டுக்களின் எண்களைக் குறித்துக் கொண்டு அவற்றைப் பின்னாளில் எனது நாடகங்களில் பிரயோகித்தேன்.




ஒரு நடிகனுக்கு எப்படி வசனத்தைப் பேசுவது என்று சொல்லிக் கொடுத்துப் பேசுவிப்பது நடிப்பல்ல என நான் கருதியதால், நடிகர்களுக்கு பாத்திரத்தின் தன்மையை விளங்கப்படுத்தி, குறிப்பிட்ட வசனங்கள் என்ன அர்த்தத்தில் எழுதப்பட்டுள்ளன, அதில் வெளிக்காட்டப்பட வேண்டிய உணர்ச்சிகள் எவை என்று நான் எதிர்பார்க்கிறேன் எனபவற்றை விளக்குவதன் மூலம், நடிகர்கள் அதை நன்கு உணர்ந்து கொண்டு தம் சொந்தத் திறமையினால் அவற்றை வெளிக்கொணரும்போது, அவை தத்ரூபமாகவும், வேறுபாடுகள் நிரம்பியனவாகவும் இருக்கும் என்பதால் அத்தகைய நெறியாள்கையைக் கடைப்பிடித்தேன். இதனால் நடிகர்களுக்கு நாடகத்தில் ஈடுபாடு அதிகமாகியது. ஒத்திகைகளைக் குறைத்தேன். சானா காலத்தில் இரண்டு நாட்களாக இருந்த ஒத்திகை வாசகர் காலத்தில் ஒரு நாளாகக் குறைக்கப்பட்டது. நடிகர்கள் திருப்பித் திருப்பிப் பல தடவைகள் ஒத்திகை பார்க்கும்போது அவர்களை அறியாமலேயே ஒரு இயந்திரத் தன்மை ஏற்பட்டுவிடுகிறது, புதுமை கெட்டுவிடுகிறது என்பதால் நான் முதலாவது வாசிப்பிலேயே வசனங்களைத் திருத்துதல் முதற்கொண்டு அவற்றைப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் வேண்டிய விளக்கங்களை அளித்தபின் ஒரு ஒத்திகை மட்டும் பார்த்துவிட்டு நேரடியாக ஒலிப்பதிவிற்குப் போவதை விரும்பினேன். இதனால் ஒலிப்பதிவின்போது சகலரும் புதுமை குன்றாத ஈடுபாட்டோடு செயற்பட முடிந்தது. மொழிபெயர்ப்பு நாடகங்கள், இலக்கிய நாடகங்கள் போன்றவற்றுக்கு மட்டுமே பல ஒத்திகைகள் செய்தேன்.

நடிகர்களின் வசனங்களும் அதன் மூலம் வெளிக்காட்டும் உணர்வுகளும் மிகவும் இயல்பாக இருக்க வேண்டும் என்பதால் அவர்கள் நாடகப் பிரதியில் எழுதியிருக்கும் முறையில் மட்டுமே வசனத்தைப் பேசவேண்டுமென்று வற்புறுத்தாது, கருத்தை மாற்றாது நடிகர்கள் தாம் இயல்பாகப் பேசக்கூடிய வகையில் வசனத்தை - சொற்களை மாற்றிக்கொள்ள வேண்டினேன்.

நடிகர்களின் திறமையை அதிகம் வேண்டிநிற்கும் நாடகங்களைத் தயாரிக்கும் பொழுது நடிகர்களின் மிக உச்ச வெளிப்பாடுகளை பெறும்பொருட்டு அவர்கள் பிழைவிட்டால், அதைப் பற்றிக் கவலைப்படாது எனது அறிவுறுத்தலை எதிர்பாராது அவர்களாவே தவறு ஏற்பட்ட இடத்திலிருந்து சற்றுப் பின்னோக்கிச் சென்று அதிலிருந்து நடிக்கும்படி வேண்டினேன். வழமையாக நாடகத் தயாரிப்பில் நடிகர்கள் நடிக்கும்போதே ஒலிக்குறிகள், இடையிசை, பின்னணியிசை போன்றவற்றைச் சேர்ப்பது வழக்கம். இப்படிச் செய்வது நடிகர்களினதும், தயாரிப்பாளரினதும் கவனச் செறிவைக் குறைக்குமென்பதால் கலையகத்தில் நடிகர்களின் நடிப்பை மாத்திரம் திருப்தியேற்படும் வகையில் பதிவுசெய்துகொண்டு பின்பு திரைப்படத் தயாரிப்பில் செய்வதுபோல் எடிட்டிங் அறையில் வைத்து எனக்கு வேண்டியபடி தொகுத்து தேவையான ஒலிக்குறிகள், இசை முதலியவற்றைக் கலந்து முழுமையான நாடகமாக்குவேன். இத்தகைய தயாரிப்பு முறை எமது நேரத்தையும், உழைப்பையும் கலையக வசதிகளையும் அதிகம் வேண்டிநிற்கும் என்றாலும் கூட, இதனது இறுதிவடிவம் மிகத் தரம்வாய்ந்ததாக அமைந்துவிடுகிறது. எனது சிறந்த நாடகங்கள் என்று கணிக்கப்பட்ட ஒதெல்லோ போன்ற நாடகங்களை இந்த வகையில் தான் தயாரித்தேன்.

ஒரு நாடகத்தை தத்ரூபமாக நேயர்களின் மனக்கண்முன் கொண்டுவருவருவதற்குத் தேவையான ஒரு சின்ன ஒலிக்குறியைத் தெரிவுசெய்வதிலோ, முடிவடையும் காட்சி மனதில் ஏற்படுத்துகின்ற உணர்வுகளை சிதைக்காமல் முடியுமானால், உணர்வுகளை மேலும் கூட்டும்வண்ணம் இடையிசை, காட்சிமாற்ற இசை முதலியவற்றைத் தெரிவுசெய்வதிலோ, நாடகத்தின் தன்மைக்கேற்றவாறு பாவிக்கப்படும் பின்னணி இசையைத் தெரிவுசெய்வதிலோ நான் சிறிதேனும் சலிப்படைவது கிடையாது. மணிக்கணக்கில் சகல மொழி இசைத்தட்டுக் காப்பகங்களிலும் தேடுதல் நடத்துவேன்.

வானொலி நாடகத் தயாரிப்பில் இந்த ஒலிக்குறிகளைப் பாவிப்பது, தேவையான இசையைத் தேவையான இடத்தில் பிரயோகித்தல் போன்றவை மிக நுட்பமான செயற்பாடாகும். வானொலி நாடகத் தயாரிப்பு என்பது நேயர்களின் மனக்கண்ணில் காட்சிகளை உருவாக்குதல், திரைப்படம் இரசிகர்களின் புறக்கண்களில் காட்டப்படும் காட்சிகள், நெறியாளன் காட்டுபவற்றை மக்கள் நேரடியாகப் பார்க்கிறார்கள். அக்காட்சிகள் என்ன உணர்வுகளை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டுமென்று நெறியாளர் கருதுகிறாரோ அந்த உணர்வுகளை ஏற்படுத்தி விடு மேயானால், அது ஒரு வெற்றிப் படைப்பாகிறது. வானொலி நாடகங்கள் நடிகர்களின் குரல்கள், ஒலிக்குறிகள், இசை முதலியவற்றைக் கொண்டு மக்களின் மனதில் தீட்டப்படும் காட்சி. இதில் மக்களின் அல்லது நேயர்களின் கற்பனை வளம் பெரும் பங்கு வகிக்கிறது. இதை சரியாகப் புரிந்துகொள்ளும் ஒரு தயாரிப்பாளருக்கு சிறந்த வானொலி நாடகங்களைத் தயாரிப்பது என்பது ஒன்றும் சிரமமான காரியமல்ல. சரியாக கோடிட்டுக் காட்ட வேண்டியதுதான். மிகுதியை நேயர்கள் பார்த்துக் கொள்வார்கள். என்னைப் பொறுத்தவரை எழுத்துக்கலைக்கு அடுத்த படியாக சிக்கல்களோ கட்டுப்பாடுகளோ அற்ற ஒரு கலை வடிவம் வானொலி நாடகங்கள் என்பேன். ஒரு எழுத்தாளன் தான் நினைப்பவற்றை எல்லாம் எழுதிவிடலாம். அதுபோல் வானொலி நாடகப் படைப்பாளியும் தான் நினைப்பவற்றை சிறிதளவு பிரயாசையுடன் படைத்துவிட்டால் சந்திர மண்டலத்தில் கதை நடக்கிறதா, போர்க்களத்தின் மத்தியிலே கதையா, கொந்தளிக்கும் சமுத்திரத்தின் மத்தியிலா? பிரச்சினையே கிடையாது. தேவையான ஒலிக்குறிகளின் உதவியுடன் அந்தக் காட்சிகளை நேயர்களின் மனதில் தீட்டிவிடலாம். ஆனால், ஒரேயொரு குறைபாடு. கதை எழுதும் எழுத்தாளனால் எத்தகைய சிக்கலான உணர்வுகளையும் விபரித்து விட முடியும். ஆனால் வானொலி நாடகப் படைப்பாளியினால் அது முடியாது. அதற்கு மிகுந்த சிரமப்பட வேண்டியிருக்கும். உதாரணத்திற்கு,

*ரவி அப்படிக் கூறியதை சுபத்திராவால் நம்ப முடியவில்லை. ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு இயத்தைத் தாக்கியதுபோல் உணர்ந்தாள். அதிர்ச்சிதான், ஆனால், அதை அந்த இடத்தில் வெளிப்படையாகக் காட்டுவது அநாகரீகமென்று நினைத்தாள். பக்கத்தில் கல்யாணி வேறு நிற்கிறாள். தனிமையில் இருந்திருந்தால், தனது மனது அடங்கும் வரை ஓவென்று கதறியிருப்பாள். அப்படியும் அவளது மனது சமாதானம் அடைந்திருக்குமோ தெரியாது. ஆனால், இப்போது வலிந்து வரவழைத்த புன்னகையுடன் அப்படியா எனக்கு மிகவும் சந்தோஷம் ரவி என்றாள்.*

சிறுகதை அல்லது நாவல்களில் மிகவும் சுலபமாக விபரித்துவிட்டதை வானொலி நாடக எழுத்தாளராலோ, நடிகராலோ சுபலமாக வெளிக் கொண்டுவந்து விட முடியாது. இப்படிப்பட்ட சம்பவங்களை நான் தயாரித்த பரீட்சார்த்த நாடகங்களில் கையாண்டிருக்கிறேன். ஆனால், சாதாரண ஒலிபரப்பில் இடம்பெறும் நாடகங்களில் இவற்றைச் செய்வது கடினம்.

நான் தயாரித்த சனிக்கிழமை இரவு நாடகங்கள் நாடுபூராவும் பாமர மக்களிலிருந்து படித்தவர்கள் வரை சகல தரப்பினரிடையேயும் பெரும் வரவேற்பைப் பெற்றன. சனிக்கிழமைகளில் நாடகங்கள் ஒலிபரப்பானால், தொடர்ந்து வரும் செவ்வாய்க்கிழமை முதல் வரத்தொடங்கும் நேயர்களின் கடிதக்குவியல்களே அதற்கு சான்றாக அமைந்திருந்தன. இலங்கை வானொலி நாடகங்கள் மக்களிடையே பெற்ற வரவேற்பைப்போன்று வேறு எந்தக் கலைப்படைப்புகளும் பெறவில்லையென்றே கூறலாம். இலங்கைத் தமிழர்கள் வானொலி நாடகங்களை இரசித்ததுபோல் இந்தியத் தமிழர்கள் தமது நிலையங்களில் ஒலிபரப்பாகிய நாடகங்களை இரசித்திருப்பார்களா என்பது கேள்விக்குறியே.

□

### மௌனம் பற்றிய ஒரு குறிப்பு

*செயல்களற்று எதுவும் பேசாதிருக்கும்*
*பொழுதுகளில்*
*மௌனமாக இருப்பதற்கு ஆசையாக இருக்கிறது.*
*உணராத தனிமைகளில் - புலன்களின் ஓய்வில்*
*அருவமாய்ப் பிறக்கின்றது மௌனம்-*
*ஒரு தாயிற்கான கர்ப்ப கால குழந்தை*
*ஒன்றினைப் போல .*
*முழு நிலவினைப் போல.*
*வசந்த காலத்தின் குயில்பாட்டை சுமந்துவரும்*
*காற்றினைப் போல.*
*என்னை உரித்தாக்கும் இசையின் மென்*
*போக்கில் அள்ளுண்டு போகையில்,*
*விருப்புறு நூல்களுள் அமிழ்கையில்,*
*பகல்- இரவின் அர்த்தநாரிப் பொழுதுகளில்*
*நண்பர்களுடன் அளவளாவுகையில்,*
*இலக்கு நோக்கி தீவிரம் மிகுந்து*
*விளையாடுகையில்,*
*முனைப்புடன் காமமுற்று கலவி செய்து*
*களிக்கையில்,*
*இன்னும்*
*இலயித்து செயற்படுகின்ற அத்தனை*
*சந்தர்ப்பங்களிலும்,*
*உதிக்கின்றது மௌனம்-*
*ஒரு பிறை நிலவினைப் போன்ற மௌனம்.*
*ஆயினும்,*
*செயல்களற்று வார்த்தைகள் எவையேனும்*
*உச்சரிக்கப்படாதிருக்கும் பொழுதுகளில்*
*தத்தளித்து சிதைகின்றது மௌனம்-*
*காற்றில் தொற்றா வார்த்தைகளை குவித்து*
*உணரும் தனிமைகளில் மிகவே.*
*அது சரி,*
*மௌனத்தின் பிறப்பு வாயைச் சார்ந்ததல்லவே.*

தி. உமாகரன்

நன்றி - நூலகத்திட்டம்



# மனைவியைக் கொல்லும் உரிமை !

செப்.30ம் திகதி சென்வோர் மண்டபத்தில் 'குடும்ப வன்முறைகள்' எனும் தலைப்பின் கீழ் ராதிகா குமாரசுவாமி அவர்களின் - தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு இக் கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின பெண்கள்தொடர்பான விசேட அறிக்கையாளராகப் பணிபுரியும் பணிபுரியும் ராதிகா குமாரசுவாமி அவர்கள் தமது அடுத்த அறிக்கை தொடர்பான அறிமுகத்தை வழங்கினார்.

குடும்ப வன்முறைகள் (Domestic Violence) என்பதே அவரது அடுத்த அறிக்கையாகும்.

இவ்வறிக்கையைத் தயாரிக்க அவர் பாகிஸ்தான், பிரேசில் போன்ற நாடுகளுக்குப் பயணித்து பெண்க-ளுக்கெதிரான குடும்ப வன்முறைகளை அவதானித்து வந்ததாக அவர் தெரிவித்தார்.

தென்னமெரிக்க நாடான பிரேசிலில் தான் குடும்ப வன்முறைகள் அதிகளவில் இடம் பெறுவதாக அவர் குறிப்பிட்டார். பிரேசிலில் ஒரு மனைவி வேறொரு ஆணுடன் உறவு வைத்திருந்தால் அம்மனைவியைக் கொல்லும் உரிமை கணவனுக்கு உள்ளது.

மரபு நடைமுறைகளாக பாலுறுப்பு சிதைப்பு, ஆபிரிக்க நாடுகளிலேயே அதிகம் இடம் பெறுகின்றது.

அத்துடன் போஷாக்கு உணவு நடைமுறைகளில் ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதும் சுட்டிக் காட்டப்பட்டது.

உலகமயமாதல் எனும் கருப் பொருளின் கீழ் பொருளாதார , சமூகக் கொள்கைகளின் காரணமாவும் பெண்கள் குடும் - பங்களில் வன்முறைகளை அனுபவிக்கின்றனர்.

இவ்வாறான பல தகவல்கள் ராதிகா



ராதிகா குமாரசாமி

அவர்களினால் சுட்டிக் - காட்டப்பட்டது.

இறுதியாக இடம் பெற்ற கலந்துரையாடல் சுவாரஸ்யம் மிகுந்ததாக இருந்தது. குடும்பம் என்பதனை எவ்வாறு வரை - விலக்கணப்படுத்தலாம் என்பது பிரதானமாக விவாதத்திற் - குரியதாயிற்று.

கலந்து கொண்டோர் பல்வேறான கருத்துக்களை முன் வைத்தனர்.

பிரதேச ரீதியாக குடும்பங்கள் பல்வேறு வகைப்படுத்தப்படுகின்றன.

உதார்ணமாக கிராமப்புறங்களில் உறவிர்களுடன் ஒன்று கூடியிருப்பது தான் குடும்பம் எனப்பட்டது.

லெஸ்பியன்கள் ஒன்றுகூடி வாழ்வதையும் குடும்பம் என்றுகூறலாம் தானே?

பிள்ளைகள் இல்லாத குடும்பங்கள் எவ்வாறு குறிப்பிடப்படலாம்?

சகோதரிகள் ஒன்று கூடி வாழ்வதை ஏன் குடும்பம் என்று கருதக் கூடாது போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ராதிகா இவற்றுக்குப்பதிலளிக்கு முகமாக "குடும்பம் என்பது போஷிப்பது. போஷிப்பது என்பது உணர்ச்சிபூர்வமானதொரு பிணைப்பு. இப்பொழுது உள்ளபடியே குடும்பத்தை ஏற்றுக் கொள்வோம்" என்றார்.

சுதந்திர வலயப் பெண்கள் , எல்லைக் கிராமப் பெண்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

-ரட்ணா

# தோல்வியின் நீளம்!

என் நினைவுகளை பின்னோக்கி இழுக்கின்றேன். யாழ் மண் பிடிப்பட்ட நேரம். அதனை சிங்கள அரசின் சிங்கள மக்களின் வெற்றியாக பொ.ஐ.முன்னணி அரசு கொண்டாடியது. நவீன சப்புமல் குமார வெற்றிச் செய்தியை விழா எடுத்து கொண்டாடினார். சிங்கள இனத்தின் வெற்றியாக பிரகட - னப்படுத்தினார். பின் சத்ஜய மூலம் கிளிநொச்சி பிடிக்கப்பட்ட பின்பும் எடிபல மூலம் மன்னாரிற்கான பாதை திறப்பு நடந்த பின்னும் அதை இவர்கள் சிங்கள இனத்தின் வெற்றியாக முரசு கொட்டினர். யுத்த வெற்றி என்பதை இன்னொரு இனத்தின் மீதான வெற்றியாக அறிவித்தனர். மீள முடியாத சகதிக்குள் காலை வைத்தனர். யுத்த வெற்றிகள் மூலம் மட்டுமே தம்மை தக்க வைக்க முயன்ற தம் இன மக்களையே ஒருவித மாய மன நிலைக்குள் தள்ளிய அரசிற்கு இப்போது தான் தெரிகின்றது தான் கிண்டிய புதைகுழியில் தானே புதையுண்டுபோகப் போகும் அவலம். எந்த யுத்தத்திற்கு எதிராக சிங்கள மக்கள் வாக்களித்தனரோ அவர்களையே ஏமாற்றி யுத்த வெற்றி எனும் போதை மருந்து கொடுத்ததன் விளைவை சந்திக்கின்றனர். கிளிநொச்சி புலிகளிடம் மீள விழுந்து விட்டது என்பதை அவர்களால் ஒரு யுத்த தோல்வியாக மட்டுமாகவே கூறிக் கொள்ள முடியவில்லை. அது எங்கே சிங்கள இனத்தின் தோல்வியாக அவர்களே கருதி விடுவரோ என அஞ்சுகின்றனர். தாம் தலைமை தாங்கிய இனப்போரை தோல்வியில் வந்து முடிந்துவிட்டதாக சிங்கள மக்கள் நினைப்பரோ என் கலங்குகின்றனர்.

அதற்காக அவர்கள் என்னவெல்லாம் செய்கின்றனர். தணிக்கை மூலம் உண்மைகளை அழித்து மூட முயல்கின்றனர். மாங்குளத்தை பிடித்து விட்டதாக அறிவிக்கின்றனர். அங்கு சிங்கள மக்களை முதன்மைப்படுத்தும் சிங்கக் கொடியை பறக்கவிட்டு படம் பிடித்து பிரசுரிக்கின்றனர். ஆயிரக்கணக்கான மனித உயிர்ப்பலிகளிற்கு பதில் இன்னொரு வெற்றி செய்தி என பிரகடனம் செய்கின்றனர். யுத்த வெற்றியை தன் மூலதனமாக தக்க வைக்கும் காரணியாக கருதிய அரசு அது வளர்த்துவிட்ட கருத்தியலாலேயே தூக்கி வீசப்படும் நிலையில் இருக்கின்றது. சகல இனவாத பத்திரிகைகளும் கிளிநொச்சி தோல்விக்காக அரசை கடும் குற்றஞ்சாட்டின. வீர விதானவும் மல்லுக் கட்டியது. இது இவர்களுக்கு நல்லதொரு பாடம். இவர்களுக்கு மட்டுமல்ல யுத்த வெற்றி ஒன்றே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாகும் என நம்பும் அனைத்து சக்திகளுக்கும் இது ஒரு பாடம். ஏன், புலிகளுக்கும் இது ஒரு பாடம். புரிய வேண்டியவர்கள் சரியாகப் புரிந்துகொண்டால் சரி. பூதம் வளர்த்தவர் பூதத்தின் கையாலேயே அழிவர் என்பதை தெரிந்து கொண்டால் சரி!

—ப்ரேமானந்த்



# கேசவன்: மறக்கமுடியா மார்க்சிய விமர்சக அறிஞனின் மறைவு!

கேசவன் மறைவு பற்றிய செய்தி பேரதிர்ச்சியைத் தந்தது. கேசவன் நம்முடன் இல்லையென்ற உண்மையை உள்வாங்கிக் கொள்ள நிச்சயமாக நீண்ட நாட்கள் பிடிக்கும்.

1960க்ளில். மார்க்ஸிய விமர்சனம் தமிழகக் கல்விசார் நிறுவன மட்டத்தில் தாக்கம் செலுத்தத் தொடங்கிற்று. தொ.மு.சி.ரகுநாதனுடன் ஏற்கெனவே இருந்த நட்பும் 'சரஸ்வதி', 'சாந்தி'யில் வந்த எழுத்துக்களும் கைலாசபதிக்கும் எனக்கும் ஒரு தளத்தைத் தந்தன. முதலில், எழுத்தாளர் நிலைப்பட்ட விமர்சனச் சூழலிலே தொடங்கிய கருத்துப் பரிமாறல்களின் வட்டம் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டது. புராதன, மத்திய காலத் தமிழிலக்கியம் பற்றிய மார்க்ஸிய விமர்சன எழுத்துக்களும், நவீன இலக்கிய வகைகளான சிறுகதை, நவீனம் பற்றிய ஆழமான ஆய்வுகளும் மார்க்ஸிய விமர்சன முறையைத் தமிழகத்துக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மட்டத்துக்குக் கொண்டு சென்றன. சென்னையில் பாண்டியன், சிதம்பரம் போன்ற மாணவர்களின் தொடர்பும் ஏற்பட்டது.

தமிழகத்தின் உயர்கல்வி மாணவர் மட்டங்களில் மார்க்ஸிய விமர்சனம் கால்கோள் கொண்டு விட்டது என்பதற்கான முதல் உதாரணமாக விளங்கியவர் கோ. கேசவன். அவரது முதல் நூல் " மண்ணும் மனித உறவுகளும்"(1979). கைலாசபதியின் முன்னுரையோடு வெளி வந்தது. 1981ழ் வெளி வந்த 'பள்ளு இலக்கியம்' பற்றிய நூல் பரந்த வரவேற்பைப் பெற்றது. கேசவனுக்கு மார்க்சிய அணுகுமுறை புலமைத் தளத்தில் நிலையான ஒரு இடம் கிடைத்தது.

கேசவன் அதன் பின் பாரதி பற்றித் தனது ஆய்வுத் தளத்தை திருப்பினார். முனைவர் பட்டத்திற்கான அவரது ஆய்வு பாரதியியல் தொடர்பானதே என்று கருதுகிறேன்.

1982களிலிருந்து அ.மார்ஸ், பொ.வேல்சாமி போன்றோர் முன்னுக்கு வருகின்றனர்.

1970களில் பேராசியர் நா. வானமாமலையினால் வ்ளர்த் தெடுக்கப் பெற்ற 'ஆராய்ச்சி ' (ஆய்வுச் சஞ்சிகை) வட்டம் ஏற்படுத்திய தாக்கமும் அதற்குக் கிடைத்த வரவேற்பும் இந்தப் புதிய மார்க்சிய விமர்சன ஆய்வுத் தலைமுறைக்கு ஒரு தளத்தை வழங்கியது.

கேசவன் பற்றிய நினைவுகள், அவரின் தோற்றத்திற்கான புலமைப் பின்புலம் பற்றி நம்மைச் சிந்திக்கத் துண்டுகிறது.

கேசவன் எப்போதும் தன் எழுத்தாலே பேசியவர். அதிரப்' போசாத ஆழமான அறிஞர். கருத்து வேறுபாடுகளையும் பண்புடன் ஏற்றுக் கொள்ளும் நயத்தகு நாகரீகம் மிக்கவர்.

1982ல் வெளிவந்த அவரது 'பள்ளிலக்கியம் ' பற்றிய நூலில் காணப்பட்ட சில அணுகுமுறைச் செல் நெறிகளை மனங் கொண்டு அவை பற்றிய ஒரு விமர்சனத்தை நான் முன்வைத்தேன். மற்றையோருடன் எனின் அந்த ஒரு குறிப்பே எமது நட்பன் இறுதியாக இருந்திருக்கும். கேசவன் அப்படியானவரல்லர். நாம் தொடர்ந்து இனிய நட்புடைமை உள்ளவர்களாகவே இருந்து வந்தோம்.

கேசவ்னுடைய ஆராய்ச்சி வளர்ச்சியிலே சில பிரதான கட்டங்களை அவதானிக்கலாம்.

ஆரம்பத்தில் நவீன காலத்திற்கு முற்பட்ட கால (PRE- MODERN) வளர்ச்சிகள், அபிவிருத்திகள் பற்றி சிந்தித்தவர். அடுத்துப் பாரதி காலத்தை தனது பிரதான களமாக கொள்கிறார். பாரதி காலத்திற்குரிய பல வரலாற்று ஆவணங்களை வெளிக் கொணர்ந்தார். கேசவனின் கவனம் அடுத்து திராவிட இயக்கம் பற்றியதாயிற்று. திராவிடக் கட்சிகளின் வரலாறு, பெரியார் பற்றிய மதிப்பீடு, திராவிட இயக்கத்தின் மொழிக் கொள்கை எனப் பல விடயங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்தார். நிறைய எழுதினார். இவற்றின் தொடர்ச்சியாக தமிழகத்தில் சாதியம் பற்றி ஆராய்தார். அவரது இறுதிக் காலத்தில் வந்த நூல்கள் இத் துறை பற்றி ஆராய்ந்தன.

அவரை நான் இறுதியாக 5.4.98, 6.4.98 ல் சந்தித்த போது இவ் விடயம் பற்றியே பேசினோம்.

கனமான ஆராய்ச்சித் தகைமை, அரசியல் சமூக வரலாறாக அமைய, அவரது இலக்கியம் பற்றிய ஆய்வு தொடர்ச்சியாக இருந்தே வந்துள்ளது. சிறுகதை பற்றிய அவரது நூலினை இதற்கான உதாரணமாக கொள்ளலாம்.

கேசவனுடைய ஆசிரிய ஆளுமை போற்றப் படத்தக்க ஒன்றாகும். முனைவர் பட்டத்திற்கு அவர் வழி நடத்திய சிலருடன் ஊடாடும் வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று. தமது வழி காட்டியின் ஆழமான, நுண்மையான பார்வையை அவர்கள் பெற்றிருந்தார்கள்.

கேசவனுடைய பொயர் தமிழ் ஆராய்ச்சி வரலாற்றில் நிச்சியமான ஒரு இடத்தைப் பெறும்.

கேசவன் என்னும் மனிதனுடைய இழப்பு ஈடு செய்ய முடியாதது. இனிமையான அவரது சிறந்த விருந்தேம்பல் பண்பு, தனது கருத்தை திட்டவட்டமாக ஆனால் மற்றவர்களைப் புண்படுத்தாத வகையில் எடுத்துக் கூறும் இயல்பு, சக தோழருடன் கருத்து வேற்றுமை இருப்பினும் பொது எதிரிக்கு முகம் கொடுக்கும் வேளையில் தனது கருத்து நிலைத் தோழர்களுடன் ஒருங்கு சேர்தல் ஆகிய தலைசிறந்த பண்புகள் அவரிடத்திருந்தன.

அறிவு தரும் கட்டமைதியும், மனிதாபிமானம் தரும் நாகரீகமும் மிக்க மனிதன் கேசவன்.அவன் காட்டிய ( மார்க்சிய) ஒளியில் இருண்டு கிடந்த பல மூலைகள் தெளிவாகின.

இறக்கும் போது கேசவனுக்கு வயது 51 என்று அறிகிறேன்.எமது தலைமுறையைச் சேர்ந்த தமிழாய்வாளர்களுக்கு தலைப் பிள்ளைகளில் ஒருவனை இழந்த துக்கமே மேலிடுகிறது.

கேசவனை பாசமிகு தந்தையாகவும் நான் அறிவேன். பாந்தவ்யமுள்ள குடும்பத்தின் தலைவனாகவும் கண்டுள்ளேன்.

கேசவனுடைய மறைவு தரும் இழப்பு ஒரு குடும்ப இழப்புக்கும் மேலானது. அது புலமை மரபுக்கு ஏற்பட்ட ஒரு இழப்பு எனும் உண்மையை அந்தக் குடும்பத்தினருக்கு மிகுந்த மரியாதையுடன் தெரிவித்துக் கொள்வது நமது கடன்

கேசவனுக்கான மிகப் பொருத்தமான நினைவுச் சின்னம் அவர் போற்றிய புலமை அணுகுமுறை பன்முக மேற்செல்லுகைதான்

-கா.சிவத்தம்பி

நன்றி - நூலகத்திட்டம்







'அமுது'
இல. 35 டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு - 10
விலை: 30/-

இலங்கையின் அரச வெளியீட்டு நிறுவனமான லேக் ஹவுஸிலிருந்து வண்ணமாரி பொழிந்து வந்துள்ளது 'அமுது' எனும் தமிழ்ச் சஞ்சிகை. அண்மையில் வந்த விளம்பரங்களால் பெரிதும் ஆவலாய் எதிர்பார்க்கப்பட்ட இவ்விதழ், லேக் ஹவுஸின் தினகரனை விட - அமைப்பு, சஞ்சிகை என்ற வகையிலே தவிர - பெரிய வித்தியாசமில்லாமலேயே இருக்கிறது. எல்லா விடயங்களும் இதில் இருக்கின்றன. தினகரன் - பத்திரிகை, 'அமுது' - சஞ்சிகை இதுதான் இரண்டுக்கும் வித்தியாசமாயிருக்கிறது.

அனுபவ முதிர்ச்சி பெற்ற, சிறந்த பத்திரிகையாளர்களைக் கொண்டிருக்கிற 'அமுது' ஆசிரியர் குழு (மனோரஞ்சன், பாஸ்கரன், சி.சிவகுமார், எம்.எச்.எம். ஷம்ஸ், டி.பி.எஸ். ஜெயராஜ்) கனதியானதும், வித்தியாசமானதுமான சஞ்சிகையைத் தராவிடின், இவ் வெளியீட்டால் பிரயோசனமிருக்காது என்றே துணியலாம். தினகரனையும், அமுதையும் நன்றாக ஒப்பு நோக்கினால், முடிவுகளை யாரும் எடுக்க முடியும்.

"தமிழுக்கு அமுதென்று பேர்"
தரத்திற்கும் அமுதென்றா பேர்?

- மதன்



அகதி -12
வெளியீடு:
வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு(NMRO)
15 A, ரோஹினி வீதி,
கொழும்பு - 06
விலை: 15/-

மிக நீண்ட இடைவெளிக்குப் பின், அகதி மக்கள் தம் எட்டாண்டுத் தாயக இழப்பை நினைவுகூர்கிற இவ்வேளை, 'அகதி' 12ம் இதழும் வெளிவந்துள்ளது. ஜுன் 97ல் வந்த 11ம் இதழுக்குப் பின் செப்டெம்பர் 98ல் 12ம் இதழ் வந்திருக்கிறது. இது கூட 'அகதி' மக்களின் நெருக்கடிகள், பொருளாதார முடங்கல்களை காட்டக் கூடிய ஒரு இடைவெளியாகவே இருக்கிறது.

இதழ் 12, அகதி நடத்திய கட்டுரை, கவிதைப் போட்டிகளின் முடிவுகளைப் பிரதானப்படுத்தி வந்துள்ளது. "இலங்கையின் இனப்பிரச்சினையும், வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலமும்", என்ற தலைப்பிலான முதலாம் பரிசுக் கட்டுரை விரிவாகவும், ஆழமாகவும் உள்ளது. ஜனாதிபதிக்கும், பிரபாகரனுக்கும் NMRO அனுப்பிய பகிரங்க மடலும் இதில் இடம் பெற்றுள்ளது. 'ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் முதிர்ச்சியில் வடக்கு முஸ்லிம்களின் நிலை','வடக்கில் முஸ்லிம்கள் மீளக்குடியேறும் தருணம் வந்துவிட்டதா?' என்ற கட்டுரைகள் குறித்துச் சொல்லத்தக்கன. கவிதைகளும் உள்ளன.


காத்திரமாக வந்திருக்கும் 'அகதி'யின் இருப்பு, நிலைப்பு முக்கியமானது: அவசியமானது.

அகதியிலுள்ள குறிப்பொன்று:

'ஒருவர் அகதியாகுவதற்கு நீ பொறுப்பாளியல்ல. ஆனால், அவர் தொடர்ந்தும் அகதியாய் இருப்பதற்கு நீயும் பொறுப்பு..'

-ஐ.நா. சுவரொட்டி

-ஷகிப்





1. ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள்: திறனாய்வு

2.அண்மைக் கால ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள்: திறனாய்வு

ஆசிரியர்:
கே.எஸ். சிவகுமாரன்

பத்தி எழுத்துக்களும் பல திரட்டுக்களும் என்ற மகுடத்தின் கீழ் நாடறிந்த, மனித நேயமிக்க எழுத்தாளரான கே.எஸ். சிவகுமாரன், 3ம், 4ம் தொகுப்புக்களாக எழுதி வெளியிட்டுள்ள நூற்களே இவை. மூன்றாவது தொகுப்பில் 1980களின் இறுதிவரை வெளியான சுமார் 48 சிறுகதை நூல்கள் பற்றிய, குறிப்புக்களாக, விமர்சனங்களாக, பதிவுகளாக இந்நூல் வெளியாகியுள்ளது. 4ம் தொகுப்பில் அண்மைக்கால 17 சிறுகதைத் தொகுதிகள் தொடர்பான பார்வைகள் இடம்பெற்றுள்ளன. ஈழத்துச் சிறுகதை நூல்களிற்கான கையேட்டுக் களஞ்சியமாக உள்ள இந்நூற்கள் 'திறனாய்வு' என்ற தரத்தை எட்டினவா என்ற கேள்வியை எழுப்புகிறது. பொதுவாக கே.எஸ்.-ஸின் எழுத்துக்களில் காணப்படும் மேலோட்டமான தன்மையை, இவற்றிலும் காணமுடிகிறது. இது திறனாய்வுப் பார்வைக்கு உகந்ததல்ல. அத்துடன் நூல்களில் எத்தனை திறனாய்வுக்குட்படுத்தக் கூடிய தொகுதிகளாக உள்ளன என்பதும் நோக்கப்படல் அவசியம்.

தமிழிலக்கியச் சூழலில் படைப்புக்கள் ஆரோக்கியமான பார்வைக்கும், விமர்சனங்களுக்கும், மறுவாசிப்புக்கும் உட்பட்டுக் கொண்டிருக்கின்ற இவ் வேளையில் நாமும் நகர வேண்டிய அவசியமிருக்கிறது.

இந்த பல் திரட்டுக்களின் தொகுப்புக்கள் அவசியமாய் இருக்கின்ற வேளை, அதைவிட அவசியமாய் இருக்கிறது 'திறனாய்வு' என்ற விடயம். என்னளவில் இதை இந்நூற்கள் நிறைவு செய்யவில்லை.

தற்போது ஓமான் நாட்டில் பணிபுரியும் இவர் Times of Oman கலை இலக்கியப் பத்தி ஒன்றை எழுதி வருகிறார்.

இவருடனான தொடர்புகளுக்கு:

Sri Lanka, School
P.O.Box: 198,
P.C. 117, Muscat,
Sultanate of Oman.

-ரிஷி




இன்னும் விடியவில்லை
(கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்கள்:
குறிஞ்சிவாணன்
முல்லை வீரக்குட்டி
தம்பிலுவில் ஜெகா
வெளியீடு:
விபிஎம் வெளியீடு,
31, சாகாமம்,
தம்பிலுவில்
விலை 50.00 ரூபா


இத் தொகுப்பிற்கான முன்னுரையில் "கவிஞர்கள் மூவரும் கவிதா ஆற்றலும் ஆளுமையும் நிரம்பியவர்கள். அவற்றை வெளிப்படுத்தும் அவர்களது கவிதைகள் இத்தொகுப்பில் இருப்பினும் அவை போதியவையல்ல. இத் தொகுப்புக்குப் புறம்பாக அவர்கள் எழுதிய கவிதைகள் என்னால் ரசிக்கப்பட்டுள்ளன.அத்தகைய கவிதைகளையும்கொண்ட இன்னுமொரு தொகுப்பினை இம் மூவரும்வழங்குவார்களாயின் என் மனஆதங்கமும், நவீன கவிதையில் அதிக பரிச்சியம் கொண்ட சிலரது ஆதங்கமும் நீங்குமென நம்புகிறேன்" என்கிறார் செ.யோகராசா.

அதுவரைக்கும் அவர்களுக்கு விடியவில்லைத்தான் !


-ராசாத்தி



அம்மா -07
S.Manoharan,
210,Ave du 8 Mai 1945,
93150 Blance Mesnil,
France



திருப்பம் -06
The Future Foundation,
215,F/2/6, Park Road,
Colombo -5



## "இரு தழல் தளத்தின் நடுவே பிஞ்சுப் பாதங்கள்"



photo: janak mayadunae

சரிநிகரை வெளியிட்டு வரும் நிறுவனமான இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் பிரச்சாரப் பிரிவு மேற்படி தலைப்பில் புகைப்படக் கண்காட்சியொன்றை நாடெங்கிலும் நடாத்தி வருகிறது. இரு தரப்பாலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு சிக்குண்டிருக்கும் இளம் பிள்ளைகளின் பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக இப்புகைப்படங்கள் எடுக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டிருக்கின்றன. சுமார் பத்து பத்திரிகைப் படப்பிடிப்பாளர்களின் செயற்கைத்தனமற்ற உயிரோட்டமான நூறு புகைப்படங்கள் இக்கண்காட்சியில் உள்ளன.

எல்லைக்கிராமங்களில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் அப்பாவிப் பிள்ளைகளின் அவலங்கள் பால் தென்னிலங்கை மக்களின் - குறிப்பாக சிங்கள மக்களின் - கவனத்தை ஈர்ப்பதற்கான ஒரு முயற்சியாக இது பரிணமித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ் அப்பாவிப் பிள்ளைகளின் கல்விக்கு உதவும் முகமாக இக்கண்காட்சி வைக்கப்படும் இடங்களில் மக்களின் உதவிக் கோரப்பட்டு, அப்பிள்ளைகளுக்காக அப்பியாசப் புத்தகங்கள் சேகரித்து வழங்கப்படுகின்றது.

தற்போது இக்கண்காட்சி காலி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எரியும் நெருப்பிடை இந்நிகழ்வுகள் இதம் தருகின்றன. மக்களுக்குத்தான் மக்களின் சோகத்தைப் புரியமுடியும்.

## யமுனாவின் நூல்கள்



லண்டனிலிருந்து தமிழிலக்கிய விமர்சனச் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் யமுனா ராஜேந்திரனின் ஏழு நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. சினிமா விமர்சனத் துறையில் அதிகமாக எழுதிவரும் இவர், சினிமா தொடர்பான பல்வேறு பரிமாணங்கள் கொண்ட நான்கு நூல்களை வெளியிட்டிருக்கிறார். அரசியல் சினிமா', 'குழந்தைகளின் பிரபஞ்சம், 'ஆபிரிக்க சினிமா', 'மணிரத்தினத்தின் சினிமா' என்பவை. இவை தவிர '25 கவிதைகளும் 500 கொமாண்டோக்களும்' என்ற மொஹமத் தர்வீஷின் மொழிபெயர்ப்புக் கவிதைகளின் தொகுப்பு. நோபல் பரிசு பெற்ற பெண்கவி விஸ்லாவா சிம்போர்ஸ்காவின் கவிதைகளின் மொழிபெயர்ப்பான "பாலத்தின் மீது மக்கள்", சேகுவேராவினது 'கவிதைகளது மொழிபெயர்ப்புகளடங்கிய 'கடைசி உயிலும் வாக்குமூலமும்" என்பனவும் இவரது கவிதைகள்.

பிற மொழிச் சினிமாக்களை அறிமுகப்படுத்துவதிலும், விமர்சனம் செய்வதிலும் இவரின் பங்கு முக்கியமானது. இவரது விமர்சனங்கள் தொடர்பாக பலர் பல்வேறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருப்பினும் அண்மைக் காலத்தில் தமிழிலான சினிமா விமர்சனத்துறையில் இவரின் காத்திரமான பங்களிப்பானது மெச்சத்தக்கது. பாரிஸ் ஈழமுரசு வார வெளியீட்டில் தொடர்ச்சியாக சினிமா விமர்சனங்களை எழுதிவருகிறார்.

இவரின் சில புத்தகங்கள் பூபாலசிங்கம் புத்தக நிலையத்தில் கிடைக்கப் பெறுகின்றன. புதிய நூல்களான "பாலத்தின் மீது மக்கள்", "மணிரத்தினத்தின் சினிமா" என்பவற்றை தமிழ்நாடு கனவுப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இவருடனான தொடர்புகளுக்கு:

Yamuna Rajenddran,
19, Hempstead Road,
Walthumston,
London E 17 3 RL
UK

நன்றி - நூலகத்திட்டம்





## விவேகிக்கு ஒரு சபாஷ்!

சரிநிகர் 154இதழில் வெளியான விவேகியின் ''மூதூர் மாவட்ட வைத்தியசாலை'' பற்றிய கட்டுரை படித்தேன். பல காலமாக அவிழ்க்க முடியாத 'இடியப்பச் சிக்க'லான மூதூர் வைத்தியசாலையின் நிர்வாக 'பேய்க்காட்டலை' விவேகி வெளிச்சத்திற்குக் கொணர்ந்தமை பாராட்டுக் குரியதாகின்றது.

'எங்கேயோ அடிக்க பல்லுப் போன' கதைபோல பொருத்தமில்லாமல் புலிகளைக் காரணம் காட்டி தம் காரியங்களை வென்று வந்த வைத்தியர்களையும், அதற்குத் துணையாக ''அடிப்பது போல் அடிப்பேன். அழுவது போல் அழு'' என 'சவால்' கொடுக்கும் வைத்திய நிர்வாகத்தையும் எண்ணும் போது வெட்கப்பட வேண்டியுள்ளது.

பெரும்பான்மையாக வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் உள்ள மூதூர் பகுதியின் அரச வைத்தியசாலை, தமிழ் முஸ்லிம் வைத்தியர்களாலும், அதன் நிர்வாகத்தினாலும் 'விழுந்த பாட்டிற்கு குறிசுட்டு' வந்தமையை இப்பகுதி மக்கள் வெகுவாய் புரிந்து கொண்டு விட்டார்கள். இவைகளை, ஆழமாக நோக்குகையில் எமது 'எல்லாம் அறிந்த வித்துவான்களை விட வடகிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எவ்வளவோ மேல் எனத் தெரிகிறது.

புலிகளுக்கு எதிராக 'துளி என்றால் பாட்டமெனக்' கூறும் இவர்களிடையே ஒழுங்கான வைத்திய சேவையை, பாதிக்கப்பட்டு நொந்து போய் வாழும் மூதூர் மக்களுக்கு வழங்க வேண்டுமென்ற செயலாளரின் உயர்ந்த நோக்கத்தை மெச்சித் தான் ஆக வேண்டும்.

மூதூரை பிறப்பிடமாகக் கொண்ட வைத்தியர்களில் பலர் 'மூதூர் என்ற பெயரை எங்கோ கேள்விப்பட்டது போல் இருக்கிறது' என்று மறுதலிக்கும் போக்கை இன்று வரை காணக் கூடியதாக இருப்பதை எவரும் மறுக்க முடியாது.

'ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லை' என உபதேசிக்கும் மூதூர் வைத்தியர்களின் பெற்றோர்கள் நம் கண்முன்னே 'ஊர்பற்று'க் கூறி நடமாடுவதை காணக் கூடியதாக உள்ளது.

மூதூர் சென்று பிரத்தியேகமாக தனியார் வீட்டில் வைத்திய சிகிச்சையளித்து 'சுருட்ட' இந்த வைத்தியர்களுக்கு இயலுமானால் அங்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்ற மட்டும் புலிப்பயம் எனக் கூறும் இவர்களின் 'பூச்சுற்றலை' என்னவென்று கூறுவது?

'சபாஷ் விவேகி' - இறுதியாய் உமக்கொன்று!

ஏதோ இந்த அளவில் போதிய ஆதாரங்களுடன் 'சரிநிகருக்'கூடாக இவர்களின் 'குட்டுக்'களை அம்பலத்திற்குக் கொண்டு வந்து, எம்மையெல்லாம் 'ஏமாளிகள் - முட்டாள்கள்' என்றதில் இருந்து காப்பாற்றினீரே அது போதும்.

***கனகசபை தேவகடாட்சம்,***
*மூதூர்*

—7

## கலாசாரத்தையும்...

*தன்னினச்சேர்க்கையாளர்களாக ஆகியமையினால் சமூகத்தில் அருவருப்புக்குரியவர்களாகவும். அவமானத்துக்குரியவர்களாகவும். சமூகத்திலிருந்து அந்நியப்படுத்தப்பட்டுப் பார்க்கும் போக்கு பாரம்பரிய கட்சிகளைப் போலவே இடதுசாரிக் கட்சிகளிலும் உண்டென்று கூறினால்....?*

அவ்வாறானவர்களை அவமானப்படுத்துவதை செய்யாதிருந்திருக்க வேண்டும். அது அவர்களின் இறைமை அது மட்டுமன்றி அவர்களின் தனிப்பட்ட தெரிவு.

*சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது ஒருபாலுறவு கொச்சைப்படுத்தப்பட்டது குறித்து உங்கள் கருத்தென்ன?*

எமது சமூகம் எவ்வளவு தூரம் பிற்போக்கு நிலையில் உள்ளது என்பது அதிலிருந்து தெரிகிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட அங்கு அவர்களின் தனிப்பட்ட தெரிவை அசிங்கப்படுத்திப் பேசியது அவர்களது ஜனநாயக சகிப்பின்மையையே காட்டுகிறது. முன்னர் கடவுள் இல்லையென்றவர்களை எரித்தது போல தன்னினச்சேர்க்கையாளர்களை இயற்கைக்கு முரணானவர்கள் என்று கூறி எரித்துக்கொள்ளுமளவுக்கு இந்த மிலேச்சப்போக்கு கொண்டுபோய் விடும்.

ஆனால், இந்த தன்னினச்சேர்க்கை வெறுமனே தனிப்பட்ட இயல்பு சார்ந்தது மட்டுமல்ல, பொருளாதாரக் காரணிகளும் இதில் பாத்திரம் செலுத்துகின்றன. விவாகத்துக்கு காலம் தாழ்த்தப்படல் எதிர்பால்(Hetro sexual) உறவு கொள்ளக் கிடைக்காமை போன்றவற்றால் அடுத்த தெரிவை நோக்கிப் போகிறார்கள். இது அடிமட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்களின் பிரச்சினையாகவும் இருக்கின்றது. எவ்வாறிருந்த போதும் இது இளம் சந்ததியினருக்கு பெரும் துரதிருஷ்டவசமானது. இன்று எவ்வளவு தூரம் ஹெரோயினுக்கு அடிமையாகியிருக்கிறார்கள். அதைவிட கஞ்சா புகைப்பது நல்லது என்றே நான் கூறுவேன். ஏனென்றால் கஞ்சா என்பது எங்களின் சமூக கலாசாரத்துடன் இணைந்த ஒன்று. அதற்கு சட்ட அனுமதி வழங்கினாலும் பரவாயில்லை.

## ராஜாஜி இறந்தது முன்பு, சென்னைக்குத் தொலைக்காட்சி வந்தது பின்பு !

"வரலாறு என்ற பெயரில் வழங்கப்படும் அவதூறுகளுக்கும் விதண்டாவாதங்களுக்கும் ஒரு துண்டுகோலாக செயல்பட நான் விரும்பவில்லை." என்று தனது 'மேன்மையான' பண்பைப் பறைசாற்றும் சூரியசந்திரன் (சரிநிகர் செப். 17-30,1998) "10-15 வருடங்களாக தன் பாஸிஸ மலத்தில் எக்ஸ்சிடென்ஸலிஸ சோறு பொறுக்கிய மகா அனுபவசாலி" என்று என்னை வர்ணித்திருந்தார்! 'எக்ஸிசிடென்ஷியலிசம் பற்றி 1983இல் எழுதிய நூலை மனதில் கொண்டு அவர் அவ்வாறு எழுதியிருக்கக்கூடும். அந்த நூல் குறித்த தனது ஞானசூனியத்தை அவர் வெளிப்படுத்துவது ஒரு புறமிருக்க, அவரது கட்சியான சி.பி.எம்மிற்கு மிக நெருக்கமானதும் அவர் பணியாற்றி வந்ததுமான 'சவுத் ஏசியன் புக்ஸ்' புத்தக நிலையம் தான் இத்தாலிய பாஸிஸத்தை எதிர்த்துப் போராடி மடிந்த அந்தோணியோ கிராம்ஷி பற்றி "பாஸிஸ மலத்தில் சோறு பொறுக்கும்" நான் எழுதிய நூலை 1992இல் வெளியிட்டது என்பதையும் கூட மறந்து விட்டார்!

"ஜெயலலிதாவின் பக்திமார்க்கத்தில் பயணம் செய்த பகுத்தறிவாளர் வீரமணி"யை உத்தம சாட்சியாகக் கொண்டு "அன்னாரின் வாயிலாக ஆர்.எஸ்.எஸ். மோப்பம் முகரும் பேராற்றலுடைய எஸ்.வீ.ஆர்." என்றும் வருணித்துள்ளார் தோழர்! ('மோப்பம் பிடிக்கும்' என்பதை அவருக்குத் தெரிந்த தமிழில் எழுதியுள்ளார்.) 1992 டிசம்பர் 6ம் திகதி பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்குச் சில வாரங்களுக்கு முன் இந்திய அரசாங்கத்தின் தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொண்டு அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்ட வேண்டும் என்ற பா.ஜ.க.வின் கோரிக்கைக்கு ஆதரவு தந்தவரும், தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். வேரூன்ற வழிவகுத்தவருமான அன்றைய முதல்வர் ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க. 1996 தேர்தலில் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடைந்து மத்தியில் தி.மு.க. பங்கேற்ற ஐக்கிய முன்னணி பதவியேற்றது. அதே ஐக்கிய முன்னணியில் உறுப்பியம் வகித்த சி.பி.எம். கட்சியின் பொதுச்செயலாளர் ஹர்கிஷன்சிங் சுர்ஜித் 1997இல் சென்னையில் நடந்த பத்திரிகையாளர் கூட்டமொன்றில் அ.இ.-அ.தி.மு.க.வையும் ஐக்கிய முன்னணியில் சேர்க்க வேண்டும் என்ற அற்புதமான 'மார்க்சிய' ஆலோசனையைக் கூறினார். எனவே "மோப்பம் முகரும் பேராற்றல்" யாருக்கு உள்ளது என்பதை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

பாம்பு பார்ப்பனன் பழமொழியைப் பற்றி நான் மீண்டும் பேச நேர்ந்ததற்காக வாசகர்கள் மன்னிக்க வேண்டும்.

பி. ராமமூர்த்தியைப் பற்றியோ அல்லது பெரியார் - கம்யூனிஸ்ட் கருத்துப்போராட்டம் பற்றியோ பழைய குப்பைகளைக் கிளறுவதில் எனக்கு கிஞ்சித்தும் விருப்பம் இருக்கவில்லை. இந்துத்துவப் பாஸிஸம் தலைதூக்கியுள்ள இன்றைய காலகட்டத்தில் பழைய சண்டைகளை மறந்து நாம் எல்லாரும் ஒன்றுபட வேண்டும் என்று மான அவமானம் பார்க்காமல் தொண்டாற்றி வருகிறவன் நான். ஒரு தவறான தகவலை பெ. முத்துலிங்கம், பி. ராமமூர்த்தியின் நூலிலிருந்து பெற்றிருக்கிறார் என்று நான் எழுதப்போக ''சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்ததுபோல'' இலங்கையிலும், தமிழகத்திலும் உள்ள சி.பி.எம். ஆதரவாளர்கள் அதையே பெரிதுபடுத்தினார்கள். பி. ராமமூர்த்தியைப் போலவே அவர்களும் பெரியார் தான் அப்படிச் சொன்னார் என்றார்கள். அதற்கு ஆதாரம் காட்ட முடியுமா என்று வீரமணி கேட்டதற்கு பி. ராமமூர்த்தியால் கடைசிவரை பதில் சொல்ல முடியவில்லை என்பது ஒரு புறமிருக்க, ''சரி பெரியார் சொல்லாவிட்டால் போகட்டும், திராவிடர் கழகத்துக்காரர்கள் பேசிவருவதை ஏன் பெரியார் தடுக்கவில்லை'' என்று பேச்சை மாற்றினார்கள். பி. ராமமூர்த்தியை அவதூறு செய்து அரசியல் ஆதாயம் தேடுபவனாக என்னைக் குற்றம் சாட்டினார்கள். பி. ராமமூர்த்தியிடமிருந்த பார்ப்பனியக் கருத்துக்கள், அவரது கூற்றுக்களிலிருந்த முரண்பாடுகள் அவர் எழுதிய அபத்தங்கள் ஆகியவற்றை அவரது எழுத்துக்களிலிருந்தும் என். சங்கரய்யாவின் அபிமானத்திற்குரிய தலைவரான முத்துராமலிங்கத் தேவரின் எழுத்துக்களிலிருந்தும் மேற்கோள் காட்டியிருந்தேன். அவற்றுக்கு சி.பி.எம். பொலிட்பீரோ பொறுப்பேற்றுக்கொள்ளுமா எனக்கேட்டிருந்தேன். வீரமணியின் நூலிலிருந்து நான் மேற்கோள் காட்டியவற்றில் 99 சதவீதம் பி. ராமமூர்த்தியின் கூற்றுக்கள் தான். வீரமணிக்கு 'தீக்கதிர் 22.02.84 இதழில் அன்று பி. ராமமூர்த்தி கூறிய பதில்: வீரமணி ஏகாதிபதியதாசர். வயது இல்லாதவர், விடுதலைப் போராட்ட வாடையே இல்லாதவர்.'' தலைவரின் அடிச்சுவட்டைத் தான் பக்தி சிரத்தையோடு என் விஷயத்தில் பின்பற்றியுள்ளார் சூரிய சந்திரன்! நான் மேற்கோள் காட்டிய பி. ராமமூர்த்தியின் கூற்றுக்களை எனது 'அகச்சார்பான வாசிப்பு' என்று கூறுவதுடன் பாஸிஸ்ட் மோப்பநாய் பட்டங்களையும் வெகுதாராளமாக வழங்கியுள்ளார் பெரியார் பற்றிய 'சாதகமான மீளாய்வு' செய்யும் கட்சியைச் சேர்ந்தவர்.

இந்துமதத்தைக் கடுமையாக விமர்சித்த பெரியார், கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களையும் ஏன் அப்படி விமர்சிக்கவில்லை என பி. ராமமூர்த்தி எழுதியது. ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரன் கேட்கிற கேள்வி போல் ஏன் தோன்றியது என்பதற்கான காரணத்தை நான் எழுதியிருந்தேன். மேலும் பெரியார் அந்த இரண்டு மதங்களையும் கூட விட்டு வைக்கவில்லை என்பதையும் கூறியிருந்தேன். இரண்டு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து வந்த எதிர்ப்பைக் குறித்து பெரியாரே எழுதியுள்ளார்; ''கிறிஸ்தவ மதத்தைப் பற்றி எழுதினோம் என்பதற்காக 'குடி அரசு' பத்திரிகை நிறுத்தப்பட்டுப் போயிற்று. முகமதிய மதத்தைப்பற்றி எழுதியதற்காக 'புரட்சி' பத்திரிகை நிறுத்தப்பட்டுப் போயிற்று.'' (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் - ப. 1419)

''தன்னார்வக் குழுக்கள், நிதிநிறுவன உதவி கிறிஸ்தவ மத நிறுவனங்கள்'' முதலியனவற்றைப் பற்றிப் பேசும் சூரியசந்திரன், சி.பி.எம். தலைவர்கள் மிக சந்தோசமாகத் தொடர்பு கொள்ளும் எம்.எஸ்.சுவாமிநாதன் பவுண்டேஷன் என்ற முதலாளித்துவ மேற்கு நாடுகளின் நிதியுதவியுடன் செயல்படும் தன்னார்வ அமைப்பின் 'அணு குண்டு எதிர்ப்பு', 'சூழலியல் பாது காப்பு' பற்றியும் 'பசுமைப்புரட்சி'யின் பெயரால் இந்திய நாட்டின் நெல்வகைகளை ஒழித்துக் கட்டிய எம்.எஸ். சுவாமிநாதனின் சாதனையையும் சுட்டிக்காட்டாமல் போனது ஏன்? சுவாமி நாதன் காஞ்சி சங்கராச்சாரியாரின் ஆசி பெற்றவர் என்பதாலா? வெளிநாட்டு நிதி உதவி பெறும் ஒரு தன்னார்வ நிறுவனத்தைச் சேர்ந்த வந்தனா சிவாவின் 'பசுமைப்புரட்சி' நூலின் தமிழாக்கத்தை வெளியிட்டவர்கள் 'சவுத் ஏசியன் புக்ஸ்' அல்லவா? அப்படியிருக்க 'தன்னார்வ நிறுவனம்' என்பதை ஒரு 'கெட்ட வார்த்தையாக' ஏன் சூரிய சந்திரன் பயன்படுத்துகிறார் என்பது தெரியவில்லை. மேலும் மதச்சின்னமான தலைப்பாகையைக்கூடக் கழற்றி வைக்காமலிருப்பவரைத் தம் கட்சித் தலைவராகக் கொண்டவர்கள் இந்து மதம் மட்டுமல்ல, பிற மதங்களையும் விமர்சிப்பதற்குத் துணிவு கொள்வார்களா?

என்னிடமிருந்து கி. வீரமணியோ அவரிடமிருந்து நானோ நற்சான்றிதழ் எதிர்பார்க்கும் நிலையில்லை. 1997 ஜூன் மாதம் அவரது 'விடுதலை' நாளேடு மூன்று நாட்கள் தொடர்ச்சியாக என் மீது முழுப்பக்க அவதூறுகள் செய்தது. அதற்காகவோ அல்லது அவர் 'ஜெயலலிதா விசுவாசி'யாகி விட்டார் என்பதற்காகவோ 1983 டிசம்பர் - 1984 ஜனவரியில் அவர் நடாத்திய சொற்பொழிவுகளின் தொகுப்பில் (அந்த சொற்பொழிவுகளைக் கேட்கக் குழுமியிருந்தவர்களில் முகவை இராசமாணிக்கம்,நாகை முருகேசன், இரா.குசேலர், என்.டி. சுந்தரவடிவேலு போன்ற பார்ப்பனரல்லாத இடதுசாரிகளும் இருந்தனர்.) உள்ள உண்மை விபரங்களையோ , பி. ராமமூர்த்திக்குத் தரப்பட்ட ஆதாரபூர்வமான மறுப்புகளையோ அதில் சுட்டிக்காட்டப்படும் பி. ராமமூர்த்தியின் முரண்பாடுகளையோ அலட்சியப்படுத்தவோ இருட்டடிப்பு செய்யவோ முடியாது. மேலும் அத்தொகுப்பில் எம்.ஜி.ஆர். பற்றிய கடுமையான விமர்சனங்களும் உள்ளன. கி. வீரமணியின் அரசியல் நிலைப்பாடுகளை மட்டுமல்ல, நாடாளுமன்ற அரசியல் ஆதாயத்திற்காக சி.பி.எம். அவ்வப்போது ஆலிங்கனம் செய்து கொண்டு வந்த வருகின்ற 'புரட்சிப்புயல்', 'புரட்சித் தலைவி', 'கலைஞர்' அரசியலையும் தொடர்ந்து கடுமையாக விமர்சித்து வருபவன் நான்.

கி. வீரமணியின் தொடர் சொற்பொழிவுகளுக்கு 'தீக்கதிரில்' விமர்சனம் எழுதிய போதும் கூட, பி. ராமமூர்த்தியால் அபத்தமான கூற்றுக்களையும், அண்டப்புளுகுகளையும் கைவிட முடியவில்லை என்பதற்கு ஒரு உதாரணம். ராஜாஜி காலமான போது மயானத்தில் பெரியார் கதறிய ழுததாகவும் தான் சமாதானப் படுத்தியதாகவும் தொலைக்காட்சியில் கூட பொதுமக்கள் அதைப்பார்த்ததாகவும் அவர் எழுதியிருப்பது தான்! ராஜாஜி இறந்தது டிசம்பர் 1972இல். சென்னைக்கு தொலைக்காட்சி முதன் முதலில் வந்தது 1975இல்தான். இதையும்கூட அந்தப் 'பாழாய்ப் போன' வீரமணிதான் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

**- எஸ்.வி.ராஜதுரை**

நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல.04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380

தொலைமடல் : 594229

## தாராளவாதம் = இனவாதம்

முட்டையில் இருந்து பிறக்கும் போது காகமும் குயிலும் ஒன்றாகத்தான் தெரியும். அடை காத்த காகத்துக்கே அடையாளம் தெரியாதபடி இரண்டுமே கருப்பாகத்தான் இருக்கும். ஆனால், இறக்கை முளைத்து, பறக்கும் பருவம் வந்ததும் அவற்றின் வேறுபாடுகள் தெளிவாகத் தெரியும். ஒன்று "காகா"என்று கத்தும். மற்றையது "கூ...கூ.." என்று கூவும்.

கூவும் வரை குயில்க்குஞ்சை தன்குஞ்சென்று நம்பிக் கொண்டிருப்பது காகத்தின் விதி.

இந்த விதி இந்த நாட்டு தமிழ் மக்களுக்கும் கூட இருக்கத்தான் செய்கிறது.

1994இல் முட்டையிலிருந்து புறப்பட்ட போது இன்றைய பொ.ஐ.மு. அரசாங்கம் காகக் குஞ்சாகத்தான் தெரிந்தது.

விரைவிலேயே, அது காகக் குஞ்சல்ல என்று உறுதிப்படுத்தும் பல சமிக்ஞைகள் தொடங்க ஆரம்பித்தன. அதன் ஜனாதிபதி சந்திரிகாவை மையமாக வைத்து இந்த அரசாங்கம் தமது நியாயமான உரிமைகளை வழங்கி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் கொண்டிருந்தனர்.

ஆனால் அந்த நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக தகரத்தொடங்கியது.

"தமிழர்கள் அனைவரும் புலிகளே" என்று அவர் பேசிய போது அவரது குரலின் சுருதி பேதம் வெளிப்படத் தொடங்கியது.

ஆனாலும் அது அவர் சொன்னதல்ல அல்லது அந்த அர்த்தத்தில் அவர் அப்படிச் சொல்லவில்லை என்றெல்லாம் நியாயங்கள் கூறப்பட்டன. சுருதி பேதம், ஒரு வேற்றுமைக்குரலுக்கான மாறுதலே என்பதை புரிந்து கொள்ளாத அல்லது புரிந்து கொள்ள விரும்பாத பலரும் அதைப் புறக்கணித்தனர்.

இப்போது அந்தச் சுருதிபேதத்தின் வளர்ச்சி முழுக்க முழுக்க தெளிவான இன்னொரு சுருதியாக வெளிப்பட்டிருக்கிறது. அவர் தென்னாபிரிக்கத் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் அல்ல வந்தேறு குடிகளே என்று சொன்னதாக வந்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

குரல் காகக் குரலல்ல, அது குயிலின் குரலே என்பது தெளிவாகிவிட்டது.

அது எமக்கு சம்பந்தமற்ற அந்நியக்குரலே என்பது மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுவிட்டது.

ஆம், சந்திரிகா முழுக்க முழுக்க சிங்கள இனத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர் மட்டுமல்ல, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகட்கும் பரம விரோதி என்று இதன் மூலம் வெளிப்படுத்திவிட்டார்.

சிங்கள இனத்தை பெருவிருட்சமாகவும், தமிழர்களை அதைச்சுற்றிப் படரும் கொடியாகவும் வர்ணித்த முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க கூட சொல்லாததை சந்திரிகா சொல்லியிருக்கிறார்.

தமிழர்களை பூர்வீகக் குடிகள் அல்லவென்று.

"தமிழர்கள் தான் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள். ஆகவே எமக்குத்தான் இந்த நாடு சொந்தம் என்று எந்தத் தமிழரும் தனி நபராகவோ ஸ்தாபனரீதியாகவோ இதுவரை சொன்னதில்லை.

அவர்கள் தாம் காலங்காலமாக வாழ்ந்த பிரதேசத்தில் நிம்மதியாக வாழும் உரிமையை மட்டுமே கேட்கிறார்கள்.

ஆனாலும் அதை வழங்க சந்திரிகா விரும்பவில்லை என்பதை அவரது இந்தப் பேச்சு தெளிவாகக் காட்டுகிறது.

ஆக, சமாதானப் பொதியும், அரசியல் தீர்வும் வெறும் ஏமாற்றுகள் மட்டுமே என்பது இப்போது தெளிவாகிறது.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அரும்பாடுபட்டுத் தயாரித்த பொதி வெறும் பம்மாத்துப் பொதியாகிவிட்டது.

வந்தேறு குடிக்ள், வாய்மூடி மௌனமாக நாம் சொன்னபடி தான் வாழவேண்டும் என்ற கட்டுப்பாட்டின் கீழ் வாழ வேண்டியவர்கள் பூமி புத்திரர்களான சுதேசிகளின் அல்லது சிங்கள மக்களின் உரிமைகளை பாதுகாக்க தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்குவது அவசியமான ஒன்று என்பது இப்போது கூவி இனங்காட்டிய சந்திரிகாவின் கோட்பாடு.

அவருக்கு எமது வாழ்த்துக்கள்

இப்போதாவது அவரிடம், சொந்த நாட்டிலில்லாவிட்டலும், இன்னொரு அந்நிய நாட்டிலேயாவது, தேர்தல் காலத்தில் கூறியபடி 'வெளிப்படைத்தன்மையை' வெளிப்படுத்தும் எண்ணம் தோன்றியிருக்கிறதே, அவரது தாராளவாத ஜனநாயகத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் வந்திருக்கிறதே, அதற்காக எமது பாராட்டுக்கள் !.

இன்னும் ஒன்று,

சமாதானத்திற்கான யுத்தம் என்பதையும், உரிமைகேட்கும் வந்தேறுகுடிகளை அழிப்பதற்கான யுத்தம் என்று வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

அப்போது தான் அவரின் கடமை முழுமை பெறும்.

சந்திரிகா பண்டாரநாயக்க இதைச் செய்யவேண்டும். வெளிப்படைத்தன்மையை இதன் மூலம் நிரூபிக்க வேண்டும்.

அவர் அவ்வாறு நிரூபித்தால், ஜாதிக்க சிந்தனை, வீரவிதான இயக்கம் வரிசையில் சந்திரிகா ஜனாதிபதியின் கடமையும் முரணற்று வெளிப்படையாக அமையும். கூடவே பூர்வீக குடிகளுக்கு மட்டுமே இந்நாட்டில் உரிமைகள் உண்டு என்று அறிவித்ததாகவும் அமையும்.

இதைச் செய்ய அவருக்கு எமது ஆசிகள்.

வாழ்க "சந்திரிகா கூவல்"!

## திருமலை:
# ஓயாமல் விரட்டியும் தீராத தொல்லை !

**1998** மே மாதத்தின் கடைசி நாட்களில் ஆரம்பிக்கப்பட்ட நான்கு ந்ாள் இராணுவ நடவடிக்கையான "ஜயபூமி"யின் பின் திருக்கோணமலையிலிருந்து வடக்கு நோக்கிய கரையோர நிலப்பரப்புகளில் புலிகள் இல்லவே இல்லை என்று அரச தரப்பு அடித்துக் கூறிய போதிலும் உண்மை அவ்வாறு இல்லை என்பதைப் புலிகள்- செப்ரம்பர் இறுதியில் நிரூபித்திருக்கிறார்கள்.

இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலேயே வடக்கு நோக்கிய ஆரம்பப் புள்ளியான மாதா கோவிலடி சோதனை நிலையத்தில் கடமையிலிருந்த புகையிரத நிலைய பொலிஸ் போஸ்ட்டை சேர்ந்த சமரசிங்க என்பவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர்கள் வந்து போன தடத்தைக் கூடப் பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

உத்தியோகபூர்வமாக புலிகள் துரத்தப்பட்டு விட்டார்கள் என பாதுகாப்புத் தரப்பு அறிவித்துக் கொண்ட போதிலும் உண்மை நேர்மாறாகவே இருந்தது. இருக்கிறது. ஜயபூமி நடவடிக்கையின் மூன்றாம் நாள் (ஜூன் 1) பகல் 11.30 மணிக்கு நிலாவெளி இராணுவமுகாமுக்கு முன்னால் கடைபோட்டிருந்த நபரொருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஓகஸ்ட் 4இல் சந்தியில் மூன்று பொலிஸ்காரர்கள் சுடப்பட்டனர். சுட்டவர்கள் தப்பிச் சென்று விட்டனர். ஒருவர் உடனடியாக இறந்தார். இந்தச் சம்பவங்கள் ஜயபூமி நடவடிக்கை புலிகளை எந்த வகையிலும் கட்டுப்படுத்தவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

எனினும் குச்சவெளி கல்லிறவு ஆகிய பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றங்களை அரசு ஊக்குவித்தது. விடுதலைப் புலிகள் அங்கு இல்லை என்ற உறுதிப்பாட்டுடன்.

ஆனால் செப்டம்பர் இறுதியில் குச்சவெளியில் வைத்து விடுதலைப்புலிகள் லொறியொன்றைக் கடத்திச் சென்றமை புலிகள் பலமான நிலையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறது. செப்.26இல் மீன் ஏற்றிக் கொண்டு திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த லொறியொன்றை குச்சவெளிப் பாடசாலைக்கருகில் வைத்து மாலை 6.30மணியளவில் புலிகள் கைப்பற்றியிருக்கிறார்கள். சூட்டி முதலாளி என நன்கறியப்பட்ட டபிள்யு.ஜி.பிரசன்னா என்பவருக்குச் சொந்தமான இந்த லொறியில் வந்த நான்கு பேரையும் இறக்கிவிட்டு லொறியைக் கொண்டு சென்றிருக்கிறார்கள். லொறி அந்தப் பகுதியிலேயே மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் பலமிழந்து போனால் லொறியை எங்கே மறைத்து வைக்க முடியும் என்பது தான் இன்று அந்தப்பகுதி மக்களிடையே எழுந்துள்ள கேள்வி.

செப் 28இல் மூதூர் நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து நகரப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. மூதூர் பொலிஸார் சந்திகள் தோறும் சந்தேகமானவர்களைக் கடுமையாகச் சோதனையிடுகிறார்கள்.

கடந்த் வாரம் மூதூர் 59 என்ற இடத்தில் மஜீத் என்ற மாட்டு வியாபாரி புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இராணுவத்துக்கு உளவு சொல்பவர் என்ற சந்தேகத்திலேயே இவர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. அன்றைய தினம் கல்வெட்டுவான் என்ற இடத்தில் ஒரு விடுதலைப் புலியும் மல்லிகைத்தீவு என்ற இடத்தில் ஒரு விடுதலைப் புலியும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

— விவேகி

## மூதூர் :
# விடுதலை அளிப்பார்களா விடுதலைப் புலிகள் ?

கடந்த மாதம் 28ம் திகதி மூதூர் நகரின் மத்தியில் வைத்து இரு அப்பாவிப் பொதுமக்கள் உட்பட நால்வரை புலிகள் சுட்டுக்கொன்றி-ருக்கிறார்கள். புலிகளின் 'பிஸ்டல்' குழுவினரால் இலக்கு வைக்கப்பட்-டிருந்த முன்னாள் புலி உறுப்பினரும், இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவருமான சிவா என்பவரைக் கொல்ல வந்த வேளையிலேயே ஏனைய மூவரும் கொல்லப்பட்டி-ருக்கின்றனர். இம்மூவரில் ஒருவர் இராணுவத்தினராவர்.. ஏனைய இருவரும் தமிழ், முஸ்லிம் பொதுமகன்களாவர். இந்த அப்பாவித் தமிழர் ஒரு வாரத்தில் திருமணம் முடிக்கவிருந்ததாகவும், அதற்கான தேவையிலேயே நகருக்கு வந்தவரென்றும் அறியமுடிகிறது. மற்றையவரான 23 வயதான அஸ்லம் என்பவர் 11 நாட்களான ஒரு குழந்தைக்குத் தந்தையாவார். இவர் திருமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்துள்ளார். தனக்கே முதலில் சுடப்பட்டது என இவர் இறுதி-நேரத்தில் கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை பொதுமக்கள் மீது அக்கறையற்ற கண்மூடித்தனமான ஒரு செயல் என்று குறிப்பிடும் சம்பவத்தை நேரில் கண்ட மூதூர்வாசிகள், இன்னும் பல உயிர்ப்பலிகள் இடம் பெற்றிருக்கக் கூடிய அபாயமும் அங்கு இருந்தது என்று தெரிவிக்-கின்றனர். நகரில் இருந்த படையினர் தாம் பொதுமக்களைக் கருத்திற் கொண்டு திருப்பித் தாக்கவில்லையென தெரிவித்துள்ளார்கள். அவர்களும் தாக்கியிருந்தால், நிறைய உயிர்ப்பலிகளும் ஏற்பட்டிருக்கக் கூடும்.

புலிகளின் இலக்கில் இருந்த சிவா என்பவராலேயே மூதூரில் தமக்கு சில முக்கிய இழப்புக்கள் ஏற்பட்ட-தாக புலிகள் கருதினர். 'அவருக்காக அறுபது பேர் செத்தாலும் பரவா-யில்லை' என்று புலிகள் தெரிவித்-திருந்ததாகவும் அறியமுடிகிறது. குறித்த நபர் இஸ்லாமிய மதத்திற்கு மாறி முஸ்லிம் பெண்ணொருவரை மணமுடித்திருந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இது ஒரு காரணமாக இல்லாவிடினும், மக்கள் மிகுந்த ஓரிடத்தில் நடாத்தப்பட்ட புலிகளின் படுகொலையானது எல்லோரது மனதிலும் விசனத்-தையும், அச்சத்தையும் மேலும் விதைத்துள்ளது.

பொதுமக்கள் கொல்லப்படக்காளாய் அமைந்தது. அவர்களிருவரும் 'ட்ரவுசர்' அணிந்திருந்தமையே என்று கூறப்படுகிறது. இதனாலேயே சந்தேகித்துச் சுட்டுள்ளார்கள் என சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இது புலிகள் சொல்லக்கூடிய காரணமல்ல. ட்ரவுசர் போட்டவர்கள் எல்லோ-ரையும் ஒரு சிவாவுக்காக கொல்-வதை எப்படியும் நியாயப்படுத்த முடியாது.

பின்னர், கொல்லப்பட்ட அஸ்லம் என்ற நபரின் வீட்டுக்குச் சென்ற புலிகள் அவர்களிடத்தில் மன்னிப்புக் கோரியிருக்கிறார்களாம். இது ஒரு புதினமான விடயமாகவே இருக்-கிறது. குறித்த நபரின் மரணச் சடங்கில் மூதூர் என்றுமே கண்டிராத சனம் நிறைந்திருந்ததாக மூதூர் வாசி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கொலைகள் ஏற்படுத்திய அதிர்ச்சியிலும், ஆவேசத்திலும் மூதூர் மக்கள் அதிர்ந்துபோய் இருந்தனர். இந்தத் தாக்குதலின் போது ஏற்பட்ட களேபரத்தில் ஓடி ஒளிந்து பாதுகாப்பு தேடியிருந்த இரு இளம் 'தமிழ்ப் பையன்கள்' சந்தேகத்தின் பேரில் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதே வேளை கடந்த 07.10.1998 அன்று திருமலை மாவட்டத்தில் கிண்ணியா - சுங்காண்குழி எனுமி-டத்தில் வைத்து மூன்று முஸ்லிம்-களின் உழவு இயந்திரங்களை புலிகள் கடத்திச் சென்றுள்ளனர். இம்மூன்றுக்கும் தலா ஒவ்வொன்றுக்கும் இரண்டு இலட்சம்படி மொத்தம் ஆறு லட்சம் ரூபாவை புலிகள் கோரியுள்ளனர். இந்தப் பெரிய தொகையினை வழங்க முடியாத நிலையில் தங்கள் தொழில் மூலதனத்தையும் இவ்வியந்திரச் சொந்தக்காரர்கள் இழந்திருப்பதாக கிண்ணியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நீண்டகால இடைவெளிக்குப் பிறகு கிண்ணியாவில் இச்சம்பவம் இடம்-பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மக்களை அநியாயப் பலிக்கட-வாக்கும் இவ்வாறான நடவடிக்-கைகளில் இருந்து விடுதலையா-வார்களா 'விடுதலை'ப் புலிகள்?

— புத்திரன்

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன், இல 18.2 அலோசாலை, கொழும்பு - 03. அச்சுப்பதிப்பு : பிறின்ற் இன், இல.07, கெகடிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 13.10.1998